மஞ்சரி

MAHARAJAH SERFOGI'S SARASWATI
...NJORE

கர - வைகாசி

மூளைப் பரீட்சை

சிற்பம் மலிந்த சியாம்

குன்றும் குரங்கும்

ஞானி ஜரதுஷ்டிரர்

ஒத்திகை (சிறுகதை)

சென்ன பஸவன் (நாவல் சுருக்கம்)

-6-
அணா

கடவுளின் சமிக்ஞை

ஒரு காக்கையின் குரலிலே நீ ஏதாவது பொருளைக் காணக்கூடும். ஆனால், அந்தப் பொருளைக் காக்கை குறிப்பிக்கவில்லை; காக்கையின் மூலம் கடவுளே குறிப்பிக்கிறார்.

—எபிக்டேட்டஸ்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
'குமுதினி'
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 6

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ஜய சோமநாத்! 'வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கிடும்' கூர்ஜரக் கடலோரத்தில் கோயில் கொண்டிருந்தார் சோமநாதர். ஆப்கனிஸ்தானத்தில் கஜ்னி என்னும் இடத்தில் ஆட்சி புரிந்த முகம்மது என்ற அரசன் 1015-இல் படையெடுத்து வந்தான். 'ஜய சோமநாத்!' என்ற யுத்த கோஷத்துடன் அவனை எதிர்த்தார்கள் கூர்ஜர மக்கள். முகம்மதின் பெரும் பலத்தை எதிர்க்க முடியாமல் சளைத்தார்கள். 50 ஆயிரம் மக்கள் சோமநாதர் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். தயாதாட்சிண்ணியமின்றிக் கோயிலைத் தகர்த்தான் முகம்மது. 50 ஆயிரம் மக்களும் மாண்டார்கள். விக்கிரகத்தையும் முகம்மது பின்னம் செய்தான். ஆலயத்தின் அளவிடற்கரிய செல்வத்தையும் அள்ளிக் கொண்டு போனான். ஆனால், பழங் கோயில் அழிந்த அதே இடத்தில் 1169-இல் புதிய சோமநாதர் கோயில் ஒன்று முன்னிலும் பெரியதாய் எழுந்தது. கூர்ஜரத்து அரசனான குமாரபாலன் அதைக் கட்டினான். பல காலம் அது வெகு விமரிசையாய் விளங்கியது. ஆனால் அதைப் பாதுகாப்பவர் இல்லாமல் காலக் கிரமத்தில் க்ஷீணதசை அடைந்தது. 1948 நவம்பரில் சர்தார் படேல் அங்கே விஜயம் செய்தார். கோயிலைப் புதுப்பிப்பதாகச் சங்கற்பமும் செய்தார். திருப்பணி நடைபெற்று வருகிறது. வைரங்கள் இழைத்த வாயிற்படியை முதல் ஆலயத்திலிருந்து கஜ்னி முகம்மது எடுத்துச் சென்றிருந்தான். அதை இப்போது திருப்பிக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள், ஆப்கன் சர்க்கார். "படுகொலை புரிவதும், நாடு பிடிப்பதுமான நாட்கள் ஒழிந்து தொலைந்தன. இந்தியரும் ஆப்கனியரும் ஒரே ஆரிய இனத்தவர்தான் என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆகவே, ரத்தக்கறை படிந்த இந்த வாயிற்படி ஒரு காலத்தில் எதற்குரியதாக இருந்ததோ அந்தப் புனித ஆலயத்துக்கே இதைத் திருப்பிக் கொடுக்க விரும்புகிறோம்" என்ற உணர்ச்சி மிக்க கடிதத்தையும் எழுதியிருக்கிறார்கள். சோமநாதர் ஆலயத்தில் இந்த மே மீ 11-ஆம் தேதி ஜ்யோதிர் லிங்கத்தை மிக்க வைபவத்துடன் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இந்த மகோற்சவத்தில் நாட்டின்

பல பாகங்களிலிருந்தும் எண்ணற்ற பக்தர்கள் சென்று கலந்துகொள்வார்கள். பிரதிஷ்டையின்போது சோமநாதப் பெருமானுக்குக் காணிக்கை செலுத்த விரும்புவோர் நம் மாகாணத்தில், 'கே. பாலசுப்பிரமணிய ஐயர், ஆச்ரம, லஸ், மயிலாப்பூர், சென்னை' என்ற விலாசத்துக்கு அனுப்பலாம் என்று நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சோமநாதர் மீண்டும் திருக்கோயில் கொண்டருள்வது தேச சரித்திரத்திலேயே ஒரு புனித நிகழ்ச்சியாகும். அன்று நாடெங்குமே மக்களின் உள்ளத்தில் 'ஜய சோமநாத்!' என்ற கோஷம் எழும்.

13 நாள் விவாதம்: இந்திய 'பட்ஜெட்'டில் கண்டபடி பல இலாகாக்களின் செலவுகளுக்கும் மான்யங்கள் கோரிய சர்க்கார் பிரேரணைகள்மீது யூனியன் பார்லிமெண்டில் 13 நாள் விவாதம் நடந்து ஏப்ரல் 11-ஆம் தேதி முடிந்தது. ஜீப் வாங்கியதில் ஏதோ ஊழல் இருப்பதாகச் சிலர் கிளப்பிய ஆட்சேபங்களால் ஒத்திப் போட்டிருந்த ராணுவ மான்ய விவாதமும் அன்று முடிவாயிற்று. தாம் நன்றாகப் பரிசிலனை செய்து பார்த்ததாகவும், லஞ்சம் முதலிய எந்த ஊழலும் இல்லை என்றும் பிரதமர் நேரு உறுதி கூறினார். மொத்தம் 375 கோடி ரூபாய்ச் செலவுக்கு 109 மான்யக் கோரிக்கைகளைப் பார்லிமெண்ட் அநுமதித்தது. சட்ட மந்திரியும் பார்லிமெண்ட் காரியங்களை நிர்வகிக்கும் மந்திரியும் அதிருஷ்டசாலிகள். விவாதமின்றியே அவர்கள் கோரிய மான்யங்களைப் பெற்றார்கள். வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிக்கும் பிரதமர், பிரசார இலாகா மந்திரி, தொழிலாளர் நலன்களைக் கவனிக்கும் மந்திரி இந்த மூன்று பேரையும் யாரும் அதிகமாகக் கண்டிக்கவில்லை; பலர் பாராட்டவும் பாராட்டினார்கள். வர்த்தகம், உணவு, ராஜ்யங்கள், ஸப்ளை, உள்நாட்டு விவகாரம் (ஹோம்) இவைபற்றிய மந்திரிகளுக்குத் தான் கடுமையான கண்டனங்கள் எழுந்தன. மிகப் பெருந்தொகையான 186 கோடி ரூபாய் மான்யத்தைப் பெற்றவர் ராணுவ மந்திரி; அதற்கடுத்து 186 கோடி ரூபாயை நிதி மந்திரியும், மூன்றாவது பெருந்தொகையான 41 கோடி ரூபாயைப் போக்குவரத்து மந்திரியும் மான்யங்களாகப் பெற்றார்கள். உணவு மந்திரி கோரிய மான்யத்தின்மீது மூன்று நாள் வெகு உஷ்ணமாக விவாதம் நடைபெற்றது. ஆனால் அவர் பெற்ற மான்யம் 3 கோடி சொச்சம் ரூபாய்தான்! கடைசி நாளில் நடந்த முக்கிய விவாதம், நிதி மந்திரி கோரிய மான்யத்தின்மீது தான். குறைத்த ரூபாயின் மதிப்பை மீண்டும் இப்போது கூட்டப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார். அப்படிக் கூட்டினால், சொற்ப ரூபாய்க்கு அதிகச் சாமான்களைப் பெறலாம் என்று பலர் நினைக்கலாம். ஆனால், உண்மையில் சாமானே கிடைக்காத நிலை ஏற்பட்டுவிடும் என்பது அவருடைய எச்சரிக்கை. அது என்னவோ, நிபுணர்களின் விவாதத்துக்குரிய விஷயம். ஜனங்கள் விரும்புவது ஒன்றுதான்: அடிக்கடி பரிவர்த்தனை விகிதத்தை ஏற்றி இறக்கிக் கொண்டிராமல், நாட்டின் நாணய மதிப்பை ஒரே நிலையில் வைத்திருக்க முழு முயற்சியும் சர்க்கார் கைக்கொண்டால் போதும்.

புது வருஷ ஜோஸ்யம்: டில்லி

யில் தமிழ் வருஷப் பிறப்பு அன்று இந்திய பார்லிமெண்டின் தமிழ் அங்கத்தினர்கள் ஒரு விழா நடத்தினார்கள். பிரதமர் நேரு, இதர மந்திரிகள், சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜிகள், பார்லிமெண்ட் தலைவர் மாவ்லங்கர் ஆகிய பலர் அதற்கு விஜயம் செய்தார்கள். தமிழ்ப் பஞ்சாங்கப்படி பலவிதப் பலன்களைச் சபையோர் சிரிக்கச் சிரிக்க, ராஜாஜி எடுத்துச் சொன்னார்: 'உலகெங்கும் கலகம் - சர்க்கார்களுக்குத் தொல்லை - மக்களின் உடல்நலக் குறைவு - பெண்கள் முன்னேற்றம்- அரிசி, கோதுமை விளைவு அதிகம் - பின் ஆறு மாதங்களில் நன்மை' இவையெல்லாம் ஏற்படுமாம். ஆனால், ஜோஸ்யமே தேவையில்லாத செலவு விஷயந்தான் நமக்கெல்லாம் இப்போதே கவலை தருகிறது. இந்த வருஷம் முழுக்க, நாம் பற்பல அதிக வரிகளைச் செலுத்த வேண்டும்; ரெயில்வே கட்டணம் அதிகமாய்க் கொடுக்க வேண்டும்; தபால் கட்டணங்களும் அப்படித்தான். மே 1-ஆம் தேதியிலிருந்து பின் வரும் தபால் கட்டண உயர்வுகளை இந்திய சர்க்கார் அறிவித்திருக்கிறது:

(1) குறைந்த கட்டணங்கள் இனி 'லோகல்' கடிதங்களுக்கு இல்லை; கார்டுகளுக்கு மாத்திரம் உண்டு.

(2) ரெஜிஸ்டர் கட்டணம் அரை அணா உயரும்.

(3) 25 ரூபாய்க்கு மேற்பட்ட வி. பி-க்களை எல்லாம் கட்டாயமாய் இன்ஷியூர் செய்ய வேண்டும்.

(4) இன்ஷியூர் கட்டணம் 100 ரூபாய் மதிப்பு வரைக்கும் 4 அணா; பிறகு ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் 2 அணா. 5,000 ரூபாய் மதிப்பு வரைக்கும் இன்ஷியூர் செய்யலாம்.

(5) மணியார்டர் 5 ரூபாய் வரை 2 அணா; 10 ரூபாய் வரை 3 அணா; 15 ரூபாய் வரை 4 அணா; 25 ரூபாய் வரை 6 அணா. இதற்கு மேல் உள்ள தொகைகளுக்கு இந்த விகிதங்களையே அநுசரிக்க வேண்டும். விமானத் தபாலில் அனுப்பும் மணியார்டர்களுக்கு இருந்து வரும் ஸர்சார்ஜ் இனி இல்லை.

(6) டிரங்க் டெலிபோன் கட்டணத்தில் 50 மைல் வரை மாறுதல் இல்லை; 500 மைல் வரை 4 அணா; அதற்குமேல் ஒவ்வோர் 50 மைலுக்கும் 6 அணா.

இனியும் முன்போலவே ஜனங்கள் தபால் போக்கு வரத்து நடத்தினால், சர்க்கார் வருமானம் அதிகரிக்கும்; இல்லாவிட்டால் குறையும். இது நமது ஜோஸ்யம்.

14 வருஷத்துக்குப் பிறகு: தமது ஐம்பத்தேழாவது வயதில் (1937-மே) விவாகம் செய்துகொள்வதற்காக நியூயார்க் நகருக்கு அவசரமாய்ச் சென்று திரும்பிய ஜெனரல் மக்ஆர்த்தர், 14 வருஷ காலமாக அமெரிக்காவுக்குத் திரும்பவேயில்லை. அவருடைய 13 வயது மகன், அமெரிக்காவை இதுவரை பார்த்ததேயில்லை. அவர் ஏன் திரும்ப வேண்டும்? திரும்பினால், பென்ஷன் வாங்கிய ஜெனரலாகத்தானே இருக்க முடியும்? டோக்கியோவிலோ அவர் ஒரு 'சக்கரவர்த்தி'யாக இருந்தார். பார்மோஸாவில் இன்னும் ஆண்டு வரும் சியாங் கை ஷேக், ஜப்பானியச் சக்கரவர்த்தி, பல மந்திரிகள் இவர்களெல்லாம் அவரிடம் தாஸாநுதாஸராய்ப் பணிந்து கிடந்தார்கள். கம்யூனிஸ்ட் சீனாவைக் கவிழ்த்து, மீண்டும் சியாங்கை அங்கே 'சிம்மாசனம்' ஏற்றிவிடலாம் என்று அவர் கனவு

கண்டிருப்பார். அதெல்லாம் இன்று மண்ணுயிற்று. தாய் நாடு திரும் பாத மக்ஆர்த்தர் இப்போது திரும்பிவிட்டார். ஜனுதிபதி ட்ரூமன் தைரியமாக அவரைப் பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்ததே காரணம். நாடு திரும்பிய மக்ஆர்த்தருக்குப் பிரமாதமான வரவேற்புத்தான் கிடைத்தது. எதனுல்? ஜனுதிபதி ட்ரூமன் ஜன நாயகக் கட்சியைச் சேர்ந்தவர். 18 வருஷ காலமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றத் தவித்துக் கொண்டிருக்கும் ரிபப்ளிகன் கட்சிக்கு ட்ரூமனை எதிர்க்க இது ஒரு நல்ல சந்தர்ப்பமாயிற்று. ஜனங்களைப்பற்றியோ கேட்க வேண்டியதில்லை. உலகப் புகழ் படைத்த தீரர் ஒருவர் வருகிறுர் என்றுல், அவரைக் காண மொய்த்துவிட மாட்டார்களா? தளபதி மக்ஆர்த்தருக்கு மகா விமரிசையான வரவேற்பு நடந்தது. மக்ஆர்த்தர் பேசினுர். அதை உலகெங்கும் ஒலி பரப்பினுர்கள். அதற்கு முன்பே ட்ரூமனும் பேசியிருந்தார். இது என்ன விவகாரம்? மக்ஆர்த்தரை ட்ரூமன் என் 'டிஸ்மிஸ்' செய்தார்? இதனுல் கொரியா யுத்தத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுமா? இந்த விஷயங்களைப்பற்றித்தான் உலக மக்களுக்குக் கவலை.

நடந்த நிகழ்ச்சிகள்: தென் கொரியாவை வட கொரியர் சென்ற வருஷம் ஜுலையில் தாக்கி அக்டோபரில் பிடித்தார்கள். இதை ஆக்கிரமிப்பு என்று ஐ. நா. சபை தீர்மானம் செய்தது. ஐ. நா. சபையின் ராணுவம் (பெரிதும் அமெரிக்கரே அடங்கியது) தென் கொரியருக்கு உதவி செய்யச் சென்றது. அதை ஒரே சேனுதிபதியின் கீழ் ஐக்கியப் படுத்திப் போரை நடத்த ட்ரூமனுக்கு ஐ. நா. சபை 1950 ஜுலை 13-இல் அதிகாரம் அளித்தது. அந்தக் காரியத்துக்கு 'சுப்ரீம் கமாண்டர்'ராக மக்ஆர்த்தரை நியமித்தார் ட்ரூமன். போரை நடத்தத் தொடங்கிய மக்ஆர்த்தர், அந்த ஆகஸ்ட் 13-ஆம் தேதியே தம் மிச்சையாக ஒரு காரியம் செய்தார். "ஐக்கிய அமெரிக்காவின் தூரக் கிழக்குத் தற்காப்புக்குப் பார்மோஸா மெத்த அவசியம்" என்றுர். அரசியல் அதிகாரிக்குக் கட்டுப் படாமல் ராணுவ அதிகாரி இப்படியெல்லாம் பேசுவது அபாயமாயிற்றே; உடனே மக்ஆர்த்தரைச் சந்திக்க வேக் ஐலண்டு என்ற தீவுக்குப் பறந்தோடினுர் ட்ரூமன். ஏதோ பேச்சு வார்த்தை நடந்து, தளபதிக்கும் ஜனுதிபதிக்கும் சமரசம் நடந்தது. பிறகும் மக்ஆர்த்தர் சும்மா இருக்கவில்லை. "வட கொரியாவுக்குக் கம்யூனிஸ்ட் சீனு உதவுவதால், மஞ்சூரியாவில் போய் நாம் குண்டு போடவேண்டும். சீனுமீது பொருளாதார முற்றுகை நடத்த வேண்டும்" என்றெல்லாம் அறிக்கைகள் விடத் தொடங்கினுர். "அரசியல் சமரசம் எப்போது நடந்தாலும் சரி; அதைப்பற்றிக் கவலையில்லை. சீனப் படைத் தலைவர் என்னுடன் சமரசம் பேச வந்தால் நான் இப்போதே தயார். இல்லாவிட்டால், சீன ராணுவமே அடியோடு அழிந்து போம்" என்று எச்சரிக்கையும் செய்யத் தொடங்கிவிட்டார். இதனுல் சமரசமே சாத்தியம் இல்லாது போகும் என்றும், மூன்ருவது உலக யுத்தத்தைத்தான் இது கிளப்பி விடும் என்றும், ஐ. நா.

சபை அங்கத்தினர் பலர் அஞ்சத் தொடங்கினுர்கள். இதன் மேல் தான் மக்ஆர்த்தரைப் பதவியி லிருந்து ட்ரூமன் நீக்கினுர். ஆனுல், இப்போதும் கொரியாவின் பிரச்னே தீருமென்று தோன்ற வில்லே. ஏறக்குறைய மக்ஆர்த் தரின் கொள்கை போல்தான் இருக்கிறது ட்ரூமனின் கொள்கை யும். சமாதானம் வேண்டுமென் ருல், அரசியல் ரீதியில் கம்யூனிஸ்ட் சீனுவுடன் யுத்த நிறுத்தப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்; கம்யூனிஸ்ட் சீனுவையே ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கச் செய்ய வேண்டும். ஆனுல், இதெல்லாம் சுலபத்தில் நடக்கும் என்று தோன்ற வில்லே. உலகத்தின் துர்ப்பாக்கியம்!

கம்யூனிஸ்ட் ஓவியர்

உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர் பிக்காஸோ. இவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்; ஒரு கம்யூனிஸ்ட். ஓவியத் துறையில் இன்று இவருடைய செல்வாக்கு உலகெங்கும் பரவி யிருக்கிறது. ஆனுல், இவருடைய படங்களில் பெரும்பா லானவை தத்ரூபமாக இருப்பதில்லே. ஒரு வகைக் கேலிச் சித்திரங்கள் போல் இருக்கும். இதுபற்றி ப்ரீட் லிண்டு வாக்னர் என்பவர் சொல்லும் பின் வரும் தமாஷ், 'காரொ னெட்' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது:

இரண்டாவது உலக யுத்தத் தொடக்கத்தில் ஸ்பெயினி லிருந்து பிரெஞ்சு எல்லேக்குள் ஒரு பெண் புகுந்தாள். சுங்க அதிகாரி அவளே முறைப்படி சோதித்தார்.

அவளிடமிருந்த ஒரு கித்தான் துண்டைப் பார்த்துச் சந் தேகங் கொண்டு, "இது என்ன, அம்மா?" என்று அவர் கேட்டார்.

"இதுவா? இது என் படம். என் மாஜி கணவர் பிக்காஸோ வரைந்தது" என்ருள் அந்தப் பெண்.

"இல்லே, இல்லே. இது ஓவியமில்லே, அம்மா. ஏதோ யந்திரத்தின் பிளான்" என்ருர் அதிகாரி.

உண்மையில் அது அவளுடைய படந்தான்; பிக்காஸோ வரைந்ததுதான். ஆனுல் அவள் எவ்வளவு சொல்லியும் இதை அதிகாரி நம்பவில்லே. ஓர் எஞ்சினீரைத் தருவித்து, "இது யந்திரத்தின் பிளான் தானே?" என்று கேட்டார்.

படத்தை எஞ்சினீர் வெகு நேரம் மிக ஜாக்கிரதையாக ஆராய்ந்தார். பிறகு அளவுகோல் வைத்துப் பல அளவுகளெல் லாம் அளந்து, கணக்குகளெல்லாம் போட்டுப் பார்த்தார். கடைசியில், "என் அருமை நண்பரே, இது ஒரு யந்திரந்தான் என்றே தோன்றுகிறது. ஆனுலும், இந்த யந்திரம் வேலே செய்யாது" என்று திட்டமாய்ச் சொன்னுர்.

பெண்மணி தன் படத்தோடு கவலேயின்றிப் பிரயாணம் செய்தாள்.

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.



கேள்வி: மூன்ருவது உலகயுத்தத்தில் இந்தியா நடுநிலையில் இருக்கலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்: ஆமாம். நாம் வெறும் வார்த்தைகளைத்தான் வீச முடியும். அவை யாரையும் கொல்வதில்லை. ஆகையால் நாம் எந்தக் காலத்திலுமே நடுநிலையில் இருக்கலாம்.

* *

கே: ருஷியனின் மூளைக்கும் அமெரிக்கனின் மூளைக்கும் என்ன வித்தியாசம்?

ப: ருஷியனின் மூளை அவன் வயிற்றில் இருக்கிறது; அமெரிக்கனுடைய மூளையோ அவன் பணப் பையில் இருக்கிறது.

* * *

கே: தாய்ப்பாலில் என்ன என்ன இருக்கின்றன?

ப: ஒரு குடும்பத்தின் கதையும், ஒரு நாட்டின் சரித்திரமும் இருக்கின்றன.

* * *

கே: நம்முடைய வாழ்க்கையில் உள்ள மணிகளுக்கும் காலக் கணக்கில் உள்ள நூற்ருண்டுகளுக்கும் என்ன சம்பந்தம்?

ப: மனித வாழ்க்கையில் மணிகளே நூற்ருண்டுகள்; ஆனல் நூற்ருண்டுகளோ காலக் கடவுளின் பிரயாணத்தில் சில விநாடிகளே.

* * *

கே: கல்யாணமென்பது நாகரிகத்தின் செயற்கையான விளைவா?

ப: நாகரிகந்தான் கல்யாணத்தினுல் விளைவது. கல்யாணமானுல் கூட்டம் பெருகுகிறது; சமுதாயத்தை ஒழுங்குபடுத்தச் சட்டங்கள் ஏற்படுகின்றன.

* * *

கே: இந்தியா செழிப்பான நாடா?

ப: ஆம்; ஜனன மரணங்களை ஏராளமாக விளைவிக்கிறது.

* * *

கே: நம் மந்திரிகள் பேசும் போது நடுவில் ஒரு தம்ளர் தண்ணீர் குடிக்கிருர்களே; ஏன்?



ப: அவர்கள் பேசும்போது, 'நீ பொய் சொல்கிருய்' என்று ஞாபகப்

படுத்தும் பொருட்டு அவர்களுடைய மனச் சாட்சி அவர்கள் நாக்கில் வந்து நிற்கிறது. அதை விழுங்கி விடுவதற்காகத்தான் தண்ணீர் குடிக்கிருர்கள்.

* * *

கே: மொட்டுக்கு உதய வேளை என்பது என்ன?

ப: இதழ் விரித்து மணம் பரப்பும் வேலை நேரம்.

* * *



கே: பிச்சைக்காரிக்கு அழகு இருந்தால் எப்படி?

ப: அது ஆடவனிடம் தரும உணர்ச்சி பெருக்கெடுத்தோடச்செய்யும் தூண்டு கோல்.

* * *

கே: ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை கடவுளுக்கு எப்படி இருக்கும்?

ப: ஞாயிற்றுக்கிழமை கடவுள் தூங்குகிற காலம்; பாதிரிக்குக் கடவுள் அதை வழங்கிவிட்டார். பாதிரிகள் அந்த நாளை வேலை நாளாக ஏற்படுத்திக்கொண்டு பக்தர்களிடமிருந்து காணிக்கை வசூல் செய்கிருர்கள். அநேகமாகப் பிரார்த்தனைகளெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் தூங்கும் சாமிக்கு முன்பு செய்வதால் அவை அந்தச் சாமியின் காதில் விழுவதே இல்லை.

கே: பெண்டாட்டிக்கும் கிராமபோன் தட்டுக்கும் என்ன வித்தியாசம்?

ப: அந்தத் தட்டை உடைத்து எறியலாம்; ஊசியை எடுத்து விட்டுக் கிராமபோனையே வாசலில் எறிந்துவிடலாம். இவற்ருல் மௌனத்தை ஏற்படுத்தலாம். ஆனல்—

* * *

கே: அணுக்குண்டால் அழிக்க முடியாதது எது?

ப: மனித இனம். அணுக்குண்டு அழிக்கும் வேகத்தை விட வேகமாக மனித சிருஷ்டி நடைபெறுகிறது.



கே: நாய், கழுதை இந்த இரண்டில் உங்களுக்குப் பிடிப்பது எது?

ப: நாய்தான். அது எதையாவது பார்த்ததும், தனக்குப் பிடிக்காவிட்டால் குரைக்கும்; அது ஒரு விமரிசனம் போன்றது. கழுதையோ ஒரு காரணமும் இல்லாமல் அரசியல்வாதியைப் போலக் கத்தும்.

புத்தர் பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவர் சியாமியர்.

சிற்பம் மலிந்த சியாம்

ராவ்

புத்தரைப் பல நாட்டினர் தம் குலதெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். சியாம் தேசமும் அந்தத் திவ்விய மூர்த்தியைப் பக்தியுடன் வழிபடுகிறது. அங்குள்ள ஒரு விசேஷம் புத்தரின் மரகதக் கல் உருவம். அதனால் அவர்கள் தம் தேசத்தை 'மரகதக் கல் புத்த சீமை' என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கி. பி. சுமார் 1 - ஆம் நூற்றாண்டில் இந்தியர்கள் இங்கே குடியேறினார்கள். இவர்கள் 'சம்பா' என்னும் இடத்தில் சியாமியருடன் போராடி வென்று அந்த நாட்டுப் பெண்மக்களை மணந்து அவர்களின் பழக்க வழக்கங்களையே மாற்றிவிட்டார்கள். அது முதல் சியாமுக்குச் சம்பா என்று இன்னொரு பெயரும் வழங்கி வருகிறது. இப்படிக் குடியேறிய இந்தியர்கள் தங்களோடு இந்து பௌத்த மதக் கோட்பாடுகளையும் வடமொழி நூல்களையும் கொண்டு போனார்கள்.

சியாமில் எங்கே பார்த்தாலும் காஷாயம் தரித்த பௌத்த பிட்சுக்களே தென்படுவார்கள். இவர்களில் பலர் மதகுரு பதவியை நிர்வகிப்பவர்கள். இவர்களைத் தவிரத் தலையை மொட்டை யடித்துக்கொண்ட சில பிட்சுக்களும் இருக்கிறார்கள். தென்பகுதியில் உள்ள ஹீனயான மதமே சியாமின் அரசியல் மதம். அரண்மனை முற்றத்தை ஒட்டி மரகதக் கல் புத்தர் கோயில் இருக்கிறது. வெகு உயரத்தில் ஒரு பெரிய முத்துக் குடையின் கீழே புத்த பகவான் அமர்ந்திருக்கும் காட்சி பக்தர்களுக்கு மனச்சாந்தி அளிக்கும். இந்த நாட்டு மக்கள் ஆடம்பரமின்றி அமைதியாக வாழ்கிறார்கள். புத்தரிடம் இந்த நாட்டு மக்களுக்கு அபார பக்தி. ஆகாய விமானம் ஒன்று, புத்தர் கோவிலுக்கு மேலே பறந்தால் போதும்; விமானத்தில் இருக்கும் 'ஹோஸ்டெஸ்' உடனே பிரார்த்தனை செய்யத் தொடங்குவாள்.

மரகத புத்தர்

சியாமின் ராஜதானி பாங்காக். இது உலகத்திலேயே அழகிய நகரமென்று பெயர் பெற்றிருக்கிறது. சென்ற மகா யுத்த

மூலம்: கிருஷ்ண பத்ரிகா (தெலுங்கு), மசூலிப்பட்டணம்.

சமயத்தில் ஜப்பானியர் ஆக்கிரமித்த போது பாங்காக சற்றுச் சீர்குலைந்தது. ஆனால் இப்போது நிலைமை சீர்திருந்திவிட்டது. சமீபத்தில் 'பூமிபன்' என்ற அரசருக்குப் பட்டம் கட்டினார்கள். இவருடைய தமையனாரான 'மஹீதள்' என்பவரை 1946-இல் யாரோ கொலை செய்துவிட்டார்கள். பாங்காக்கில் பெரிய விமானத் தளம் ஒன்று இருக்கிறது.

ஆகாய விமானத்திலிருந்து பார்த்தால் பாங்காக் நகரக் காட்சி வெகு அழகாக இருக்கும். வான் அளாவிய கட்டிடங்கள், வெகு விசாலமான தெருக்கள்; இவைகளில் 'ராஜ தம்ரென்' என்ற தெருவின் அகலம் 150 அடி. இதற்கு எதிரிலேயே குடியரசு யுத்த ஞாபகச் சின்னக் கட்டிடம் இருக்கிறது. சியாம் இந்தோ-சீனா எல்லையில் பிரெஞ்சுக்காரருடன் போராடி இறந்த வீரர்களின் ஞாபகச் சின்னம் ஒன்றும் இங்கே இருக்கிறது. சுவர்ச் சித்திரங்கள் எழுதுவதில் சியாமியர் வெகு நிபுணர்கள். பல பழைய கட்டிடங்களில் இந்த வேலைப்பாடுகளைக் காணலாம். ஊர் முழுதும் சிறு சிறு வாய்க்கால்கள் பாய்கின்றன. இவைகளையொட்டிச் செழிப்பான அழகிய பூந்தோட்டங்கள் உண்டு.

சியாமின் சிற்பச் செல்வத்துக்கு அத்தாட்சி அதன் கடை வீதிகளில் காட்சியளிக்கும் வெள்ளிச் சாமான் போன்ற பொருள்களே.

பாங்காக்கில் ரிக்ஷாவில் ஏற மிகவும் துணிச்சல் வேண்டும். ரிக்ஷாவாலாக்கள் ரிக்ஷாவைத் தலை குப்புற இழுத்துக்கொண்டு ஓடுவார்கள். கேலி செய்து கொண்டும் பந்தயம் வைத்துக் கொண்டும் சாலைகளில் சிட்டாகப்



புத்தர் கோயில்

பறப்பார்கள். ரிக்ஷாவின் வேகத்தால் உட்கார்ந்திருப்பவரின் தலை சுற்றும்.

சியாமியக் குடியானவர்கள் மிகவும் நல்லவர்கள். விருந்தினரை உபசரிப்பதில் சிறந்தவர்கள். தமாஷாகப் பேசிப் பொழுது போக்குவார்கள்.

சியாமியருக்குக் குருட்டு நம்பிக்கை அதிகம். இவர்கள் மொழியில் 'ஃபீ' என்றால் பேய் என்று பொருள். குழந்தைகளுக்குப் பயம் காட்ட 'ஃபீ ஃபைட்' என்ற தேவதையின் பெயரைச் சொல்லுவார்கள்.

மரகதக் கல் புத்தர் கோவிலின் பிராகாரச் சுவர்களில் ராமாயணக் கதை முழுதும் சிறந்த முறையில் சித்திரித்திருப்பதைக் காணலாம். கோயிலை 'வாட்' என்கிறார்கள். இங்கே உஷா தேவியின் கோவில் (அருண வாட்) ஒன்றும் இருக்கிறது. இது வெயிலில் செம்பொன் நிறமாகத் தக தக வென்று மின்னும். பால் போன்ற நிலவில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக வெண்மையாகத் தோன்றும்.

சியாமின் ஆட்சியை வெண்குடை என்று சொல்வார்கள். 1,95,700

சியாம் குடியானவன்

சதுர மைல் பரப்பும் 1,20,00,000 ஜனத் தொகையும் கொண்ட நாடு சியாம். ராணி ஸ்கிரிகிட், வீணை வாசிப்பதில் தேர்ந்தவள். மன்னருக்கும் சங்கீதத்தில் அதிகப் பிரியம். சொந்தமாகப் பாட்டுக் கட்டி மெட்டுக்கள் அமைப்பார். ராணி இவைகளை வீணையில் வாசிப்பாள்.

பட்டாபிஷேகத்துக்கு மூன்று நாள் முன்னேயே அரண்மனையை 'மந்திர சுத்தி' செய்வார்கள். ஒரு பெரிய மண்டபம் கட்டி அதில் பிராம்மணர்கள் பூஜை தொடங்குவார்கள். சபையில் அரசர் பௌத்தமதப் பிரமாணம் செய்வார். அப்போது தூய்மைக்கு அடையாளமாக வெள்ளை உடுப்பு அணிந்திருப்பார். பிறகு அவர் மங்கள ஸ்நானம் செய்யும்போது வாத்தியங்கள் இசைக்கும்; புரோகிதர்கள் மந்திரங்கள் ஓதுவார்கள். காஷாயதாரிகளாகிய பௌத்த குருக்கள் எண்பது பேர் ஆசீர்வாதம் செய்வார்கள்.

பிறகு பிராம்மணர்களும் பௌத்த மடாதிபதிகளும் தொடர, அரசர் அரண்மனைக்குப் போவார். அங்கே எட்டு மூலைகள் உள்ள சிம்மாசனம் ஒன்று இருக்கிறது. அது போதி மரத்தால் ஆனது. அதன்மேல் வெண் குடையின் கீழே கிழக்கு முகமாக அரசர் உட்காருவார்.

பக்கத்தில் இருக்கும் புரோகிதர் எழுந்திருந்து, "கிழக்குச் சீமையை நீங்கள் காக்க வேண்டும். அபயம் கொடுங்கள்" என்று வேண்டுவார். அரசர் சம்மதம் தெரிவிப்பார். பிறகு புரோகிதர் மந்திரித்த நீரை அரசரின்மேல் தெளிப்பார். அரசர் எழுந்து, "நான் இந்த வட்டாரம் முழுவதையும் காக்கிறேன். கிழக்குத் திசையில் அமைதியும் க்ஷேமமும் நிறைந்திருக்கும்படி கவனித்துக்கொள்கிறேன்" என்பார். இப்படியே எல்லாத் திசையிலும் பிரமாணம் செய்வார். பிறகு சிம்மாசனத்துக்குப் போவார். அப்போது பிரஜைகளுக்கு விருதுகள் செதுக்கிய தங்கப் பதக்கங்களை அவர் கொடுப்பார். வெற்றி, கீர்த்தி, தர்மம் இவைகளின் சின்னமான கிரீடத்தை அவரிடம் ராஜகுரு கொடுப்பார். இந்தக் கிரீடம் மேலே போகப் போகக் குவிந்து இருக்கும். இதன் நுனியில் ஒரு தங்கக் குடை உண்டு. இந்தக் கிரீடம் செய்து 700 வருஷ காலத்துக்கு மேல் ஆகிறது. கிரீடத்தை மன்னர் வாங்கித் தாமே தலையில் வைத்துக் கொள்வார். அப்போது சங்கு முதலிய பல வாத்தியங்களும் சேர்ந்து முழங்கும்; பௌத்த ஆலயங்களிலெல்லாம் மணிகள் ஒலிக்கும். பௌத்த மடாதிபதி, சிம்மாசனத்திலிருக்கும் பழைய குடையை எடுத்துவிட்டுப் புதுக் குடையை வைப்பார். இதோடு பட்டாபிஷேகம் முடியும். பிறகு பல நாட்கள் வரை விருந்தும் கேளிக்கைகளும் நீடிக்கும்.

மூளைப் பரீட்சை

★

நவீன விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிவுகளைப் பார்க்கப் பார்க்க. ஆதி சங்கரரின் தத்துவ தரிசனம் முற்றும் உண்மையே என்று நினைக்கும்படி இருக்கிறது. 'பார்க்கும் பிரபஞ்சமனைத்தும் ஒன்றே'' என்கிறார் இதோ ஒரு விஞ்ஞானி. இந்தக் கட்டுரைக்கும் சித்திரங்களுக்கும் ஆதாரம்: (1) பேஜெண்ட்; (2) நியூ யார்க் டைம்ஸ்.

மனிதர்கள் எப்படிச் சிந்திக்கிறார்கள்? முக்கியமாக மேதைகள் எப்படிச் சிந்திக்கிறார்கள்? இதை நன்றாய்ப் புரிந்துகொள்ளுவதற்கு 'மூளை அலை'களை (ப்ரெயின் வேவ்ஸ்) ஆராயும் முறை ஒன்றை அமெரிக்காவில் உள்ள மஸாசுஸெட்ஸ் ஆஸ்பத்திரியில் அநுஷ்டித்துப் பார்த்திருக்கிறார்கள்.

உலகத்திலேயே பிரசித்தி பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஜே. வான் நியூமான், நார்பர்ட் வீனர் என்ற மூன்று கணித நிபுணர்களின் மூளை அலைகளையும் அங்கே இப்படி ஆராய்ந்தார்கள். 'பரஸ்பரக் கவர்ச்சி' (ரெலடிவிடி) என்ற அதியாச்சரியமான சித்தாந்தத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞான மேதையான ஐன்ஸ்டீனைப்பற்றிக் கேள்விப்படாதவர் இருக்கமாட்டார். பிரின்ஸ்டன் நகரில் உயர்தரக் கணிதம் போதிப்பவர் புரொபஸர் நியூமான். மஸாசுஸெட்ஸ் நகரில் யந்திர நுட்பங்களைப் போதிக்கும் 'இன்ஸ்டிட்யூட் அவ் டெக்னலஜி' என்ற ஸ்தாபனத்தில் பதவி வகிப்பவர் புரொபஸர் வீனர்.

இவர்களுடைய 'மூளை அலை'களையும், சாதாரண மனிதர்கள் சிலருடைய 'மூளை அலை'களையும் மின்சாரக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தபோது, இவர்களுடைய 'மூளை அலை'களுக்கும் மற்றவருடைய 'மூளை அலை'களுக்கும் திட்டமான வித்தியாசம் தென்பட்டது.



ஒருவர் தலையிலிருந்து வரும் மின்சார ஓட்டத்தை ஒரு யந்திரம் இவ்விதம் ஒரு தட்டில் பதித்துவிடுகிறது.

'மூளை அலை'களை அப்படியே சில தகடுகளில் பதிக்கும் (ரெக்கார்டிங்) முறை ஒன்றைப் புதிதாக இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த முறைக்கு 'எலெக்ட்ரோ - என்ஸெபாலோகிராபி' என்று பெயர். 'மின்சாரத்தின் மூலம் மூளையைப் புகைப்படம் பிடிப்பது' என்றுதான் இதற்குப் பொருள்.

மேலே குறிப்பிட்ட மூன்று மேதைகளும் சிந்தனை செய்யும் போதும், சும்மா இருக்கும்போதும் தனித்தனியே அவர்களுடைய 'மூளை அலை'களை இந்த முறைப்படி சில விஞ்ஞானிகள் படம் பிடித்தார்கள். இந்த அலைகளை ஆராய்ந்ததிலிருந்து, சில முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள்.

மூளை என்பது என்ன? உலகத்திலுள்ள எந்தக் கருவியையும்விட மகா சிக்கலான ஒரு மின்சார யந்திரமாக அமைந்திருக்கிறது மூளை என்று எல்லா ஸர்ஜன்களுக்கும் தெரியும். சிந்தனைப்போக்கு, இன்ப துன்பங்களையும் பசியையும் போன்ற சகலவித உணர்ச்சிகள் இவை அனைத்தும் 'மின்சார அதிர்ச்சி'கள் (எலெக்ட்ரிகல் பல்ஸிங்ஸ்) உருவிலேயே மூளையில் எழுகின்றன. இந்த 'மின்சார அதிர்ச்சி'களை ரேகை (சார்ட்) உருவில் படம் பிடித்துவிடலாம். இந்த அதிர்ச்சிகளின் இயல்புபற்றிய ரகசியத்தை நாம் அறிந்துவிட முடியுமானால், கணிதச் சூத்திரங்களைப்போல் கணக்குப் போட்டு, மனிதர்களின் எண்ணங்களை நாம் கண்டுபிடித்து விடலாம்; பைத்தியம், குற்றம் புரியும் இயல்பு, உள்ளச் சோர்வு முதலிய மன நோய்களையெல்லாம் ஒரு மின்சாரக் கருவியின் பட்டன்களை அழுத்துவதன் மூலமே நாம் குணப்படுத்திவிடலாம். இந்த விஷயம் ஒரு விஞ்ஞானப் பிரசுரத்திலிருந்து புலனாகிறது. சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் பிரிட்டனில் வைத்தியர்களுடைய 'ராயல் ஸொஸைட்டி'யின் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் ஆங்கில டாக்டர்களும் அமெரிக்க டாக்டர்களும் கூடி 'மனநோய்க்கு ரண சிகிச்சை' (ஸைக்கோ-ஸர்ஜரி) என்ற விஷயம்பற்றிப் பேசிய பேச்சுக்கள் அடங்கியது அந்தப் பிரசுரம்.

மனிதனின் மூளையில் சுமார் ஆயிரங்கோடி நரம்பு அணுக்கள் (நெர்வ்-ஸெல்ஸ்) இருக்கின்றன. இவைகளை 'நியூரான்' என்று சொல்லுகிறார்கள். இந்த நரம்பு அணுக்களிலெல்லாம் மின்சார சக்தி (எலெக்ட்ரிகல்-சார்ஜ்) இருக்கிறது என்று இப்போது விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஒரு கருத்தையோ, காட்சியையோ, வாசனையையோ ஏற்று, அதற்கிசைய உடலைத் தூண்டிவிட, அந்த மின்சார சக்தியை இந்த நரம்பு அணுக்கள் பிரயோகிக்கின்றனவாம். டாக்டர் வில்டர் பென்பீல்டு என்பவர் ஒரு விசித்திரமான சோதனை செய்து பார்த்தார். சுமார் இரண்டு அல்லது மூன்று வோல்ட் மின்சார சக்தி உள்ள 'எலெக்ட்ரோடு' (மின்சாரக் கம்பி முனை) ஒன்றை ஒரு மனிதனுடைய மூளையின் பற்பல பகுதிகளிலும் பொருத்திப் பார்த்தார். மின்சார முனையை மூளையின் ஒரு பகுதியில் வைத்தபோது அந்த மனிதன் தன் காலைத் தூக்கினான். இன்னொரு பகுதியில் வைத்தபோது கையை ஆட்டினான். இப்படி ஒவ்வொரு பகுதியில் பொருத்திய போதும் வெவ்வேறு செயல் புரிந்தான். சில பகுதிகளில் அந்த



ஐன்ஸ்டீன் என்ற நிபுணரின் மூளையிலும் சாதாரண மனிதர் ஒருவரின் மூளையிலும் உண்டாகும் 'மூளை அலை'களைக் காட்டும் சித்திரம். தலையோடிருக்கும் இடது பக்கம் சாதாரண மனிதனின் 'மூளை அலை'கள். தலை இல்லாமல் இருக்கும் வலது பாகம் ஐன்ஸ்டீனின் 'மூளை அலை'கள். அதிலும் 'ஏ' என்ற பகுதி, சிந்தனையின் போது எடுத்தது; 'பி' என்ற பகுதி ஓய்ந்திருக்கும்போது எடுத்தது. தலையுள்ள இடது பாகத்தில் மின்சார முனைகளை வைக்கும் இடங்களைக் காணலாம்.

மின்சார முனையைப் பதித்த போது, வர்ணம், ஒளி, இயக்கம் முதலிய காட்சிகளெல்லாம் அவன் கண்ணுக்குத் தோன்றின. அவன் மனத்திலே புதைந்து கிடந்த ஒரு பழங் கனவைக்கூட இந்த முறையால் திரும்பவும் அவன் காணும்படி செய்தார் பென்பீல்டு. ஆகவே, மனிதனின் புலன் உணர்ச்சிகள் அனைத்தும் 'மின்சார அதிர்ச்சி'களாகவே எழுகின்றன என்று திட்டமாகத் தெரிகிறது.

இதைப் பார்க்கும்போது, ஒரு மனிதனின் சிந்தனைப் போக்குக்கும் மற்றொருவனுடைய சிந்தனைப் போக்குக்கும் உள்ள வித்தியாசம், 'மூளை அலை'களில் பிரதிபலிப்பது நிச்சயம் என்று ஏற்படுகிறது. ஆனால் இந்த வித்தியாசம் எப்படி உண்டாகிறது? டாக்டர் அரில்லானோ என்பவர் இதற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்: ஒவ்வொரு மூளையிலும் வெவ்வேறு விதமான 'நுணுக்கிக் கருவி'கள் (ஸ்கானிங் மெக்கானிஸிம்ஸ்) இருக்கின்றன. அந்த நுணுக்கிக் கருவிகளை உபயோகிக்கும் திறமையும் வெவ்வேறாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய சிந்தனைப் போக்கும் தனித்தனி விதமாக இருப்பதற்குக் காரணம் இந்த இரண்டுந்தான் என்று அவர் ஊகிக்கிறார். தூரத்திலே உள்ள பொருளைக் காணக்கூடிய 'ரேடார்' என்ற ஆச்சரியமான கருவி

இப்போது தோன்றியிருப்பது பலருக்குத் தெரிந்திருக்கும். அதில் இந்த மாதிரிதான் 'நுணுக்கிக் கருவி'கள் இருக்கின்றன. ஒரு மனிதன் சிந்திக்கும்போது, அவன் மூளையின் ஒரு பகுதியில் உள்ள 'நுணுக்கிக் கருவி'கள் மற்றொரு பகுதியில் உள்ள நரம்பு அணுக்களை 'ரேடா'ரைப்போல் சுழன்று பார்க்கின்றன. ஐன்ஸ்டீனைப்போல் தீவிர சிந்தனையாளரின் மூளையில் உள்ள நுணுக்கிக் கருவிகள், அவர்கள் சிந்திக்கும்போது அதிவிரைவாய்ச் சுழல்கின்றனவாம்.

'மூளை அலை'களின் போக்கைக் கொண்டு, ஒருவர் மேதையா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா முடியாதா என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் காக்கை வலிப்பு, மனோவியாதி முதலிய சில நோய்களை மட்டும் 'மூளை அலை'களைக் கொண்டு இப்போது ஆராய முடிகிறதாம்.

மூளைக்குள்ளே மின்சார சக்தி தோன்றி உடலில் உள்ள புலன்களை ஆட்டி வைக்கிறது என்பது இப்போது நிச்சயமாகிவிட்டது. அப்படியிருக்க, மூளையில் உண்டாகும் அதே மின்சார சக்தி, புறப்பொருள்களை ஏன் ஆட்டிவைக்க முடியாது? அதுவும் சாத்தியமே என்று டாக்டர் ரைன் என்பவர் கருதுகிறார். (இதுபற்றி ஆராய்ச்சி நடத்தி இவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தின் சுருக்கம் ஏற்கனவே 'மஞ்சரி'யில் வெளிவந்திருக்கிறது.)

புறப் பொருள்களைத் தன் சிந்தனையின் மூலமே மனிதன் ஆட்டி வைக்க முடியும் என்பது சமீபத்தில் வேறு சிலருடைய சோதனைகளாலும் புலனாகிறது. பிரான்ஸ் தேசத்தில் பால் வாஸே என்ற ஒரு நிபுணர் இருக்கிறார். அவர் ஒருவகைப் புல் விதைகளை இரண்டு கண்ணாடிப் பெட்டிகளில் வளர்த்தார். இரண்டிலும் விதைகள், மண், எரு எல்லாம் ஒரே ரகமானவை. வெயிலும் நீரும் இரண்டுக்கும் ஒரே அளவாய்க் கிடைக்கும்படி செய்தார். ஆனால் ஒரு பெட்டியில் உள்ள புல் 'நன்றாய் வளரக்கூடாது' என்றும், மற்றதில் உள்ள புல் 'நன்றாய் வளர வேண்டும்' என்றும் மனத்துக்குள் ஜபித்துக்கொண்டேயிருந்தார். அவர் விரும்பியபடியே, ஒரு பெட்டிப் புல் நன்றாகவும் மற்றது மட்டமாகவும் வளர்ந்தது.

டாக்டர் ரைனும் இப்போது இதே மாதிரி சில ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார். அதில் ஓரளவு இந்த முடிவு ஊர்ஜிதமாகியிருக்கிறது. ஆனால் இன்னும் விரிவாக அவர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார். அமெரிக்காவில் வட கரோலினா என்னும் இடத்தில் உள்ள டியூக் யூனிவர்ஸிட்டியில் புல்லை வளர்க்கப் போகிறார்கள். அதற்கு 800 மைல் தூரத்தில் இருக்கும் கெண்டக்கி மாகாணத்தில் இருந்துகொண்டு ஒருவர் மேலே குறித்தபடி ஜபிக்கப் போகிறார். அதன் பலனைக் காண வேண்டும் என்பது விஞ்ஞானி ரைனின் உத்தேசம்.

'பேஜண்ட்' என்ற பத்திரிகையின் நிருபரான ராபர்ட் வெஸ்ட் ஹொவார்டு என்பவரிடம் டாக்டர் ரைன் சொன்னது இது: "இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? உயிரின் முடிவான ரகசியத்தைப்பற்றி விஞ்ஞானிகளுக்குச் சில தடையங்கள் அகப்பட்டுவிட்டன என்றுதான் அர்த்தம். பிரபஞ்சமே ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாத

ஒரே ஐக்கியபாவம் கொண்டது. அதன் பகுதிகளே சகல ஜீவராசி களும். ஈ, எறும்பு, செடி, கொடி, விலங்கு, மனிதன் எல்லா உயி ரினங்களும் பிரபஞ்சத்தின் பகுதி களே. இந்த ஒவ்வொன்றிலும் உள்ள பற்பல சக்திகளும் ஒரே இயல்பைப் பெற்றிருக்கின்றன. உங்களையும் என்னையும் ஆட்டி வைப்பவை இந்தச் சக்திகளே. இவை மின்சார ரீதி வாய்ந்திருக் கின்றன. ஆகவே, சராசரங்களில் எந்த ஒன்றையும் மற்றவற்றி லிருந்து வேறு பிரிக்க முடியாது. நம் அனைவரையும் அனைத்தையும் மின்சார சக்திகள், அகண்டமான ஒரு முழுமையில் பிணைத்திருக் கின்றன.''

அவன் சொன்ன பதில்

கடற்கரையோரம் சுறுமீன் அபாயம் அதிகமாக இருந் தது. அதனால் யாரும் கடலில் நீந்தக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு போட்டிருந்தார்கள். அங்கே போலீஸ் பாரா வேறு இருந்தது.

ஓர் ஆள் கடலில் கழுத்தளவு ஆழத்தில் நிற்பதை அங்கே இருந்த போலீஸ்காரன் கவனித்தான்.

போலீஸ்காரன்: (கரையில் இருந்தபடி) நீ தண்ணீரை விட்டுக் கரைக்கு வா, சொல்கிறேன். உன்னைக் கைது செய் யாமல் விடப்போவதில்லை.

ஆள்: ஹஹ்ஹஹஹ்ஹா! நான் ஏன், ஐயா, கரைக்கு வருகிறேன்? நான்தான் தற்கொலை பண்ணிக்கொண் டிருக் கிறேனே.

—'ஜோக்கர்,' கோபன்ஹேகன்.

கடைசியில் வேலை செய்தது!

ஒரு பெண்மணி மகா கோபத்தோடு ஒரு ஷாப்புக்கு வந்தாள். பெட்டியடியில் இருந்த மானேஜரிடம் ஒரு கண்ணாடிப் பீச்சாங்குழலை நீட்டிக்கொண்டு, "இதோ பாருங்கள்: இதை நேற்று என் குழந்தைக்காக உங்கள் கடையில் வாங்கினேன். இதில் தண்ணீர் போன்ற எதையாவது ஊற்றி, இதன் கொக் கியை அழுத்தினால், அது பீச்சிட்டு அடிக்கும் என்று உங்கள் ஆட்கள் சொன்னார்கள். ஆனால், நேற்று முழுவதும் கொக்கியை நானும் குழந்தையும் எவ்வளவோ அமுக்கியும் அது வேலை செய்யவேயில்லை. நம்பிக்கையான ஷாப் என்று நினைத்தால், இப்படி....'' என்று சொல்லிக்கொண்டே அந்தப் பீச்சாங் குழலின் கொக்கியை அமுக்கினாள். உடனே என்னவோ 'விறுக்' என்று அதிலிருந்து பீச்சிட்டு, மானேஜரின் முகத்தில் அபி ஷேகம் செய்தது. அவர் முகமெல்லாம் ஒரே நீல மசியாகி விட்டது.

—பென்னெட் ஸெர்ப்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 80-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. கிண்டி குதிரைப் பந்தயத்தில் குதிரைகள் பிரதட்சிணமாக ஓடிவருகின்றன என்று எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அமெரிக்கக் குதிரைப் பந்தயத்தில் எப்படி ஓடிவருகின்றன? பிரதட்சிணமாகவா? அப்பிரதட்சிணமாகவா? இரண்டு விதமாகவுமா?

2. ஸ்டாலினுடைய மீசையின் நுனி, மேல் நோக்கி நிமிர்ந்து நிற்கிறதா? கீழ்நோக்கி வளைந்திருக்கிறதா? நேராய்ப் படிந்திருக்கிறதா?

3. ஜனாதிபதி லிங்கன் இறந்தபோது முதல் தடவையாகப் பதவி வகித்துக்கொண்டிருந்தாரா? இரண்டாவது தடவையாகப் பதவி வகித்துக்கொண்டிருந்தாரா?

4. மலர்களுக்கு ஒரு குணம் உண்டு. காற்றில் உள்ள பிராண வாயுவை (ஆக்ஸிஜன்) அவை இழுத்துக்கொண்டு, கரியமில வாயுவை (கார்பன் டையாக்ஸைடு) வெளியே விடும். இதனால் மலர்கள் உள்ள ஓர் அறையில் நாம் படுத்து உறங்குவது நம் உடம்புக்குக் கெடுதல் என்று சிலர் சொல்கிறார்கள். இது சரியா?

5. நீரிலே முழுகியவன், மூன்று தடவை திரும்பத் திரும்ப மேலே எழும்பிய பிறகுதான் மூச்சு முட்டிச் சாவான் என்று உலகெங்குமே நம்புகிறார்கள். இது உண்மையா? இல்லையா?

6. ஏழு வருஷத்துக்கு ஒரு தடவை நம் உடம்பு அடியோடு மாறி விடுகிறது என்று சில டாக்டர்கள் சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை?

7. பூமியின் சுற்றளவு என்ன? அதை எப்படி அளந்தார்கள்?

8. சிப்பிகளில் மட்டுமே முத்துப் பிறக்கும் என்பது சரியா? தவறா?

9. உங்களிடம் ஆறு வெள்ளி ரூபாய்கள் இருக்கின்றன. அதில் ஒன்றே ஒன்று மட்டும் கள்ள ரூபாய்; மற்ற ஐந்தும் நல்ல ரூபாய்கள். அந்தக் கள்ள ரூபாயின் நிறை நல்ல ரூபாய்களின் நிறையை விடச் சிறிது அதிகம். உங்களிடம் நகை நிறுக்கும் தராசு ஒன்றும் இருக்கிறது. ஆனால், அந்தத் தராசில் இந்த ரூபாய்களை இரண்டே இரண்டு தடவைதான் நிறுக்கலாம். அப்படி நிறுப்பதைக் கொண்டே, அந்தக் கள்ள ரூபாயைக் கண்டு பிடிக்கவேண்டும். எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்? கண்டு பிடிக்க இரண்டு வழிகள் உண்டு; ஒரு வழியையாவது நீங்கள் சொன்னால் போதும்.

இந்தக் குன்றிலே குரங்குகள் உள்ள வரையில்தான் பிரிட்டிஷாரும் இருப்பார்களாம்!

குன்றும் குரங்கும்

★

சில தினங்களுக்கு முன்பு, இரண்டு இடங்களில் ஜிப்ரால்டர் குன்றைப்பற்றிய பேச்சு எழுந்தது. அந்த இரண்டு இடங்களும் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் பிரிந்திருப்பவை. ஒன்று, பிரிட்டிஷ் காமன்ஸ் சபை; மற்றது, மாட்ரிட் நகரத்துப் பத்திரிகை உலகம்.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபை அங்கத்தினர் ஜிப்ரால்டரைப்பற்றி ஏன் பேசினார்கள் தெரியுமோ? ஜிப்ரால்டர் குன்றில் உள்ள வாலில்லாக் குரங்குகளின் க்ஷேமத்தைப் பற்றி அவர்களுக்கு வெகு அக்கறை. அந்தக் குரங்கு வம்சம் ரோமர்களின் காலத்திலிருந்து அங்கே வாழ்ந்து வருவது. "ஜிப்ரால்டர் குரங்குகள் சௌக்கியமாயிருக்கின்றனவா? நாள் ஒன்றுக்குத் தலா நாலு பென்ஸ் ஜீவனப்படி அவைகளுக்கு ஒழுங்காய்க் கிடைத்துக் கொண்டிருக்கிறதா? அவைகளின் வம்சத்திலே விருத்தி ஏற்பட்டிருக்கிறதா?" என்று காமன்ஸ் அங்கத்தினர் ஒருவர் மிகவும் கவலையோடு கேட்டார்.

அவர் கேள்வி கேட்ட அதே நாளில், மாட்ரிட் நகரத்துப் பத்திரிகைகளெல்லாம் ஜிப்ரால்டர் சம்பந்தமாகப் பிரிட்டனைப் பிரமாதமாய்த் தாக்கின. "ஜிப்ரால்டர் குன்று ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தம். அதை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது, இந்தப் பிரிட்டன்" என்று கூறி, பிரிட்டனைக் கண்டபடியெல்லாம் திட்டின. வசவு மாரியில் சற்று முன்பின்னாக வித்தியாசம் இருக்கலாம்; இந்தக் கண்டனம் புதியதல்ல.

மத்தியதரைக் கடலின் மேற்குக் கோடியில், 1,400 அடி உயரத்தில் இருப்பது ஜிப்ரால்டர் குன்று. அதை ஒட்டி இருக்கிறது ஸ்பெயின் நாட்டு எல்லை. இந்த ஜிப்ரால்டர் குன்றில் பல்லாண்டுகளாகப் பிரிட்டிஷ் கொடி பறந்துகொண்டிருக்கிறது. ஸ்பெயின் தேசத்தின் குரல்வளையில் போய்க் குத்திக்கொண்டிருப்பது போல் இப்படி நிற்கிறது அந்தக் கொடி.

இந்தக் குன்றையும் குரங்குகளையும் 1704-ஆம் வருஷத்திலிருந்து பிரிட்டன் வசப்படுத்திக்கொண்டு ஆண்டு அநுபவித்து வருகிறது. அங்கே அந்தக் காலத்தில் பல சில்லறை யுத்தங்கள் நடந்தன. 1704-இல் அப்படி நடந்த யுத்தம் ஒன்றில் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரி ஒருவர், யாரையும் கேளாமல் தம் சொந்தப் பொறுப்பிலே அந்தக் குன்றைப் போய்ப் பிடித்துக்கொண்டார். பிரிட்டிஷ் ராணியான ஆன், அந்த அதிகாரியைக் கண்டிப்பதற்குப் பதிலாக, ஆனந்தம் கொண்டு

மூலம்: நியூ யார்க் டைம்ஸ் (ஆங்கிலம்: 11-3-'51), நியூ யார்க்.

அந்தக் குன்றைப் பிரிட்டனுக்குச் சொந்தமாக்கிக்கொண்டாள்.

மேற்குத் திசையிலிருந்து மத்தியதரைக் கடலுக்கு வரும் வாசல் ஜிப்ரால்டர். ஆகவே, உலகத்தின் மிக முக்கியமான கேந்திரஸ்தலங்களில் ஒன்று அது. இதனால்தான் பிரிட்டிஷ்காரருக்கு அதைக் கைவிட மனமில்லை. பிரிட்டிஷாரைப் போலவே இவர்களுக்கு ஆயிரம் வருஷத்துக்கு முன்பே, 711-ஆம் ஆண்டில் மூர் ஜாதியாருந்தான் அதைக் கைப்பற்றி அதிலே கோட்டையெல்லாம் கட்டி விட்டார்கள். 1309-இல் அதை ஸ்பானியர் மீட்டுக்கொண்டார்கள். 1333-இல் மீண்டும் மூர்கள் அதைப் பிடித்தார்கள். ஸ்பானியர் மறுபடியும் 1462-இல் அதை மீட்டு, ஐரோப்பாவின் சிறந்த எஞ்சினீர்களையெல்லாம் அழைத்து, பெரும் பணம் செலவிட்டு, யாரும் அசைக்க முடியாத பெருங் கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள். அப்படியிருந்தும் 1704-கோடைக்காலத்தில் டச்சுக்காரரின் உதவி பெற்று வெகு சுலபமாக அதைப் பிரிட்டிஷ்காரர் பிடித்துக்கொண்டார்கள். அதே வருஷம் கோடை முடிந்து இலையுதிர்காலம் வந்ததும், ஸ்பானியர் அந்தக் குன்றை ஒரு தாக்குத் தாக்கினார்கள். பயனில்லை. 1726-இல் அதன்மீது ஒரு படையெடுப்பு நடத்தினார்கள். பலிக்கவில்லை. அந்த நாள் தொடங்கி, ஜிப்ரால்டரை என்றாவது ஒருநாள் திரும்பப் பெறுவோம் என்ற நம்பிக்கையை ஸ்பானியர் கைவிடவேயில்லை.

1779-இல் அமெரிக்க உளையில் பிரிட்டிஷ்காரர் மாட்டிக்கொண்டிருந்தார்கள். 'இதுதான் தக்க தருணம்' என்று ஜிப்ரால்டர்மீது ஸ்பானியர் மறுபடியும் படையெடுத்தார்கள். இந்தத் தடவை சிலநாள் வெகு கடுமையாகவும் சில நாள் சற்றுத் தளர்ந்தும் ஸ்பானியரின் முற்றுகை தொடர்ந்து நாலு வருஷகாலம் நடந்தது. வெளியிலிருந்து குன்றுக்குள் எந்தச் சாமானும் போகாமல் தடுப்பதே ஸ்பானியரின் போர்முறை. ஆனால், இரண்டு மூன்று தடவை இந்த முற்றுகை வியூகத்தைப் பிளந்துகொண்டு, பிரிட்டிஷ் சாமான்கள் உட்புகுந்து குன்றில் இருந்தவருக்கு உதவிவிட்டன. ஆனால், குன்றிலிருந்த பிரிட்டிஷ் வீரர்கள் மற்ற வேளையிலெல்லாம் பசியால் வாடிக் கலகமும் செய்தார்கள். 1782-இல் இந்த முற்றுகைக்கென்றே பிரத்தியேகமாக மிக வலிவான சில கப்பல்களைக் கட்டி, அவைகளைக் கொண்டு, குன்றை ஸ்பானியர் வளைத்துக்கொண்டார்கள். பச்சை மரத்தைக் கொண்டு வழடி பருமனுக்கு அந்தக் கப்பல்களைக் கட்டி, நெட்டி, இரும்பு, பதனிடாத பச்சைத் தோல் இவைகளால் அவைகளுக்குக் கவசமிட்டிருந்தார்கள். அந்தக் கப்பல்களிலிருந்த பீரங்கிகளிலிருந்து குண்டுகள் இடைவிடாமல் மழைபோல் குன்றின்மீது சொரிந்தன. இந்தப் பச்சை மரம், நெட்டி, இரும்பு, பதனிடாத தோல் இவைகளை என்ன செய்வதென்று புரியாமல் சில மணி நேரம் வரை பிரிட்டிஷ்காரர் திகைத்து மலைத்துக் கிடந்தார்கள். பிறகு பிரிட்டிஷ் பீரங்கிப் படையினர் சில சோதனைகள் செய்து பார்த்து இதற்கு ஒரு வழி கண்டு பிடித்தார்கள். செக்கச் செவேல் என்று பழுத்த தீக்குழம்பு போன்ற இரும்புப் பந்துகளைச் சொரிந்தால், இவைகளெல்லாம்

பஸ்மீகரமாகிவிடும் என்று அவர்கள் தெரிந்துகொண்டு, அப்படியே செய்யத் தொடங்கினார்கள். குன்றில் இருந்த பிரிட்டிஷ்காரர் பிழைத்தார்கள். அடுத்த நாள் பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம், ஸ்பானியரின் கப்பல்களில் ஒன்று கூட மிச்சமில்லாமல் அனைத்தும் நொறுங்கி மூழ்கியோ, எரிந்து சாம்பராகியோ மறைந்து போயின.

அந்த நாள் தொடங்கி, முக்கியமாகச் சமீப வருஷங்களில், பிரிட்டிஷ்காரர் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு இரும்பையும் சேகரித்து அவற்றால் குன்றைக் கவசமிட்டு மூடிக் கோட்டை கட்டிக்கொண்டு, சுண்ணம்புக் குகைகளுக்குள்ளே யாரும் அறியாதபடி ஒளிந்து வாழ்ந்துவருகிறார்கள். அந்நியர் எவரும் போய் அவர்களைப் பார்க்கவே முடியாது. பிற நாட்டினர் அந்தக் குன்றுக்குள் போக வேண்டுமென்றால் 'பெர்மிட்' வாங்கியாக வேண்டும்.

அந்தக் குன்று பிரிட்டனின் கிரவுன் காலனியாக இருந்து வருகிறது. இதில் 25,000 பிரிட்டிஷ்காரர் வசிக்கிறார்கள். குன்றுக்கு அப்பால் உள்ள ஸ்பானிய நகரங்களிலிருந்து பல தொழிலாளர்கள் தினந்தோறும் பகலில் உள்ளே வந்து வேலை செய்துவிட்டு இரவிலே திரும்பி விடுகிறார்கள். அந்தக் குன்றின் மக்களைப் பராமரிக்க ஒரு கவர்னர் இருக்கிறார். இங்கே உள்ள குரங்குகளையும் பராமரித்துப் பாதுகாப்பது அவருடைய கடமை. இந்த வாலில்லாக் குரங்குகளைப் பற்றி வெகு காலமாகப் பிரிட்டிஷாருக்கு ஒரு குருட்டு நம்பிக்கை இருந்து வருகிறது. காமன்ஸ் சபையில் இவைகளைப்பற்றிச் சமீபத்தில் எழுந்த கேள்விக்கு அந்தக் குருட்டு நம்பிக்கைதான் காரணம். 'ஜிப்ரால்டர் குன்றிலே எந்த நாள் வரைக்கும் வாலில்லாக் குரங்குகள் இருக்கின்றனவோ அந்த நாள் வரைக்குந்தான் பிரிட்டிஷ்காரர் அங்கே இருப்பார்கள்' என்று ஏதோ ஒரு பழைய கதை வெகு காலமாக உலவுகிறது.

இந்தக் குரங்குகளைப்பற்றி எழுந்த கேள்விக்கு, வெகு கம்பீரமாகவும் பொருத்தமாகவும் பிரிட்டிஷ் காலனி மந்திரி கிரிப்பித் பதில் அளித்தார். "குரங்குகளுக்கு அளித்து வரும் தினசரி நாலு பென்ஸ் ஜீவனப்படியைக் கொண்டு, அவைகள் மகா சௌக்கியமாய் வாழ்ந்து வருகின்றன. அவைகளிடமிருந்து எந்த விதமான புகாரும் இதுவரைக்கும் இல்லை'' என்று மிகவும் பயபக்தியோடு அவர் தெரிவித்தார். இதோடு தொடர்ந்து கொஞ்சம் ஆத்ம திருப்தியுடன், "யுத்தம் முடிந்த அடியில் இருபது குரங்குகள்தான் இருந்தன. இப்போதோ அவைகள் முப்பதாக விருத்தி அடைந்திருக்கின்றன" என்ற தகவலையும் அவர் தெரிவித்தார். 'கன்ஸர்வேடிவ்களைவிட எங்கள் தொழிற்கட்சியார் எவ்வளவு மேலானவர் என்பதற்கு இதுவே அத்தாட்சி' என்று சுட்டிக் காட்டத்தான் அவர் இதைச் சொன்னாரோ ஒருவேளை!

மன்மத பாணம்

மன்மதன் எப்போதும் உங்கள்மேல் மலர் அம்பையே எய்துகொண்டிருப்பதில்லை; பல சமயம் கூரிய ஈட்டியால் முதுகிலே குத்திவிடுகிறான்.

—எட். கார்டினர்

மதச் சீர்திருத்தம் பல மகான்களால் நிகழ்கிறது. பார்ஸி மதத்தில் அப்படிப் பணி புரிந்த ஒரு மகான் இவர்.

ஞானி ஜரதுஷ்டிரர்

கோபால சந்திர ராய்

இந்துக்களுக்கும் பார்ஸிகளுக்கும் பல விதத்தில் ஒற்றுமை இருக்கிறது. அக்கினி இரு மதத்தாருக்கும் உரிய தெய்வம். இந்துக்கள் ஓமம் செய்வது போல் பார்ஸிகளும் ஒரு சடங்கு செய்கிறார்கள். அதற்கு 'ஹாஓம்' என்று பெயர். ஒளியைக் குறிக்கும் தெய்வத்துக்குப் பார்ஸி மொழியில் 'மித்ர' என்று பெயர். அதே மாதிரி சூரியனுக்கு 'மித்ரன்' என்று வேதத்தில் ஒரு பெயர் வழங்குகிறது. அரசர்களை க்ஷத்திரியர் என்று நாம் சொல்கிறோம்; அவர்கள் 'க்ஷாத்திரர்' என்கிறார்கள். வைதிகச் சடங்குகளில் நாம் பால், வெண்ணெய், பழம் இவைகளை உபயோகிப்பது போல் பார்ஸிகளும் உபயோகிக்கிறார்கள். பூணூல் சடங்கு அவர்களுக்கும் உண்டு.

ஆனால் விபரீதமான சில வேற்றுமைகளும் இருக்கின்றன. மத்திய ஐரோப்பாவில் இருந்தபோது இவர்கள் ஒரே ஆரியக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான். பின்னால் இவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டது. இதை இந்த இரு சாராருடைய சாஸ்திரங்களிலும் காணலாம். இதனால் இவர்கள் பரஸ்பரம் வழிபடும் தெய்வங்களை இழிவாகப் பேசலானார்கள். 'அவெஸ்தா' என்ற பழைய பார்ஸி நூலில் இந்திரனை அரக்கர்களின் மன்னன் என்று சொல்லியிருக்கிறது. பார்ஸிகளின் தெய்வம் 'அஹுர மஜ்தா'. இவரை வேதத்தின் முன்பகுதியில் 'அசுரன்' என்று குறிப்பிட்டு, உயிரளிப்பவன் என்று பொருள் கொண்டார்கள். ஆனால் பிற்காலத்தில் பார்ஸிகளை இழிவுபடுத்த 'அசுரன்' என்பதை அரக்கன் என்ற பொருள்பட இந்துக்கள் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். பார்ஸிகளின் 'யிம'னுக்கும் இந்துக்களின் யமனுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்: யிமன் சுகபோகங்களைக் கொடுக்கிறான்; யமன் பயமும் துன்பமும் கொடுக்கிறான். பின்னால் இரு சாராரும் வெவ்வேறு இடங்களில் குடியேறி விட்டதால் இந்த வேற்றுமையினால் எந்த விதப் பாதகமும் நேரவில்லை. நாளடைவில் அவரவர் தம் தம் தரும காரியங்களில் ஈடுபட்டுப் பழைய சண்டை சச்சரவுகளை மறந்து விட்டார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் பார்ஸி சமூகத்தில் மதம் என்ற பெயரால் பல ஒழுங்கீனங்கள் நடந்து வந்தன. அவைகளையெல்லாம் போக்கிப் பார்ஸி மதக் கோட்பாடுகளைச் சீர்திருத்தினார் மகான் ஜரதுஷ்டிரர். பிறந்ததும் குழந்

காப்பிரைட்; பாரத வர்ஷ (வங்காளி; டிசம்பர் '51), கல்கத்தா.

தைகள் சகஜமாக அழும் என்பார்கள்; ஆனால் இவர் அப்போது சிரித்தாராம். இதைப் பார்த்த பெரியோர் சிலர், "ஈசுவரனே இவரை ஏதோ காரியத்தை உத்தேசித்து உலகத்துக்கு அனுப்பியிருக்கிறார்" என்று தெரிவித்தார்களாம்.

அந்த நாளில் துராசரோவோ என்று ஒரு பிரபல குரு இருந்தான். பாரசீக மன்னனே இவனுக்கு அடங்கி ஒடுங்கிக் கிடந்தான். 'ஜரதுஷ்டிரன் பெரியவனானால் நமக்குப் போட்டியாக இருப்பானே' என்று எண்ணி அவரைக் கொல்லப் பார்த்தான் துராசரோவோ. ஆனால் அவனுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை. அதனால் அவன் ஜரதுஷ்டிரரின் தந்தையிடம் போய், "இந்தப் பையனை உயிரோடு விட்டால் நம் சமூகமே அழிந்து விடும்" என்று பயமுறுத்தி அவர் மனத்தை மாற்றிவிட்டான். அவர் அவன் சொன்னபடியே ஒரு நாள் குழந்தை ஜரதுஷ்டிரர் தூங்கும்போது அவர் அறைக்குக் கொள்ளிவைத்தார். ஆனால் தெய்வச் செயலாக ஜரதுஷ்டிரர் இந்தக் கண்டத்திலிருந்து தப்பி விட்டார். இப்படிப் பல தடவை கொல்லப் பார்த்தும் முடியாமல் ஜரதுஷ்டிரரைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிட்டார்கள்; அங்கே புலி, கரடி ஏதாவது வந்து அவரைக் கொன்று விடும் என்று அவர்களுக்கு எண்ணம். ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை.

ஜரதுஷ்டிரர் காட்டிலேயே வளர்ந்து வந்தார். வாலிபப்பருவம் வந்ததும் நாட்டுக்குத் திரும்பினார். துராசரோவோ உடனே அவரைத் தன்னோடு தர்க்கம் செய்யும்படி அழைத்தான். ஜரதுஷ்டிரரும் அதற்கு இணங்கினார். தர்க்கத்தில் அவன் தோற்றுவிட்டான். பிறகு வெகு நாள் வரையில் ஜரதுஷ்டிரர் ஈசுவரத் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். கடைசியாக ஒரு நாள் தைதீ நதிக்கரையில் அவருக்குத் திவ்விய ஞானம் சித்தியாயிற்று. பழைய மதக் கோட்பாடுகளில் இருந்த ஊழல்களைப் போக்கிப் புதிதாக ஒரு கொள்கையை வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

ஒரு நாள் பிஸ்டாம்பு என்ற மன்னனின் ராஜ்யத்தில் இப்படிப் பிரசாரம் செய்தபோது அங்கே இருந்த பழைய குருமாரெல்லாம் சூழ்ச்சி செய்து இவரைச் சிறையில் அடைத்துவிட்டார்கள். பிஸ்டாம்பு மன்னனுக்குப் பிரியமான ஒரு குதிரை இருந்தது. ஜரதுஷ்டிரரைச் சிறையில் அடைத்த அன்று அதன் கால்கள் வயிற்றுக்குள் சுருங்கிவிட்டன. ஊரே இந்த அதிசயத்தைப் பார்க்கக் கூடிவிட்டது. பிஸ்டாம்பு மன்னன் பல நாடுகளிலிருந்தும் மிருக வைத்தியர்களை அழைத்து அந்தக் குதிரைக்குச் சிகிச்சை செய்து பார்த்தான்; ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் ஜரதுஷ்டிரரின் காலில் விழுந்து கெஞ்சவே அவர், "அப்படியே அதன் நாலு காலையும் சரிப்படுத்தி விடுகிறேன். ஆனால் அதற்குப் பதில் நான் சொல்லும் நாலு விஷயங்களை நீ செய்வதாக வாக்களிக்க வேண்டும்" என்றார்.

மன்னன் அப்படியே செய்வதாக வாக்களித்தான். ஜரதுஷ்டிரர், "(1) இப்போது நம் மதத்தில் இருக்கும் ஒழுங்கீனங்களை அடி

யோடு கலந்து என்னுடைய தருமத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். (2) அதைப் பிரசாரம் செய்யும்போது போர் புரிய வேண்டியிருந்தால் அதற்கு நீயும் உன் மகனும் சித்தமாக இருக்க வேண்டும். (3) உன் ராணியும் என் தருமோபதேசத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். (4) என்னைச் சிறையில் அடைக்கச் சூழ்ச்சி செய்தவர்களும் இனிமேல் என் உபதேசத்தைக் கடைப்பிடித்து நடக்கும்படி செய்ய வேண்டும்'' என்றார்.

பிஸ்டாம்பு மன்னன் அவர் சொன்னபடியே செய்து முடித்தான். 'கடவுள் ஒருவரே; அவர் சர்வவல்லமை பொருந்தியவர். அவர் அஹுரா மஜ்தா (ஞானம், வன்மை இந்த இரண்டின் உருவம்). அஞ்ஞானமும் பொய்யுந்தான் மனிதனுக்குப் பெரிய பகைகள். உழு தொழிலே உலகில் சிறந்த தொழில்' - இதுவே அவருடைய கொள்கையின் சாராம்சம். இதோடு ஜரதுஷ்டிரர் அக்கினியைத் தெய்வமாக மதித்து ஓமமும் ஆகுதியும் செய்யும்படியும் உபதேசித்தார். இதனால்தான், 'புனிதமான அக்கினியை அசுத்தமாக்கக் கூடாது' என்று பார்ஸிகள் பிணத்தைக் கொளுத்துவதில்லை. அதற்கென்று உயரமான ஓர் இடம் கட்டி அங்கே அதை எறிந்து விடுவார்கள்; காக்கையும் கழுகும் அதைப் பிடுங்கித் தின்னும்.

தாம் பிரசாரம் செய்துவந்த மதக்கோட்பாடுகளை ஜரதுஷ்டிரர் 'அவெஸ்தா' என்ற நூலாகத் தொகுத்தார். இதுதான் பார்ஸிகளின் வேதம். பார்ஸிகள் பல நூற்றாண்டுகள் இந்த மதத்தைக் கடைப் பிடித்துச் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். பிறகு அரேபியாவில் முகம்மது நபி தோன்றி இஸ்லாம் மார்க்கத்தைப் போதித்தார். அவருக்குப் பின் சில அராபிய முஸ்லிம்கள் பாரசிகத்தில் இஸ்லாம் மதக் கோட்பாடுகளை பிரசாரம் செய்யவே அந்த நாட்டில் பெரும்பாலோர் அதை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு மேல், பார்ஸி மதத்தைக் கடைப் பிடித்து வந்த கொஞ்சநஞ்சம் பேர், சொந்த நாட்டில் இருக்க முடியாமல் கி. பி. 10-ஆம் நூற்றூண்டில் பாரத நாட்டில் வந்து குடியேறினார்கள். இப்போது பம்பாய் நகரில் வாழ்ந்துவரும் பார்ஸி வகுப்பார் அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான். இவர்களின் தொகை மொத்தம் 80,000-க்கு மேல் இராது. இன்னும் தம் பழைய கொள்கைகளை இவர்கள் பின்பற்றித்தான் வருகிறார்கள்.

பதிலுக்குப் பதில்

மார்க் ட்வெயின் என்ற பிரபல ஆசிரியர் தம் நண்பர் ஒருவரிடம் புத்தகம் இரவல் கேட்டார். "என் அறையில் படிப்பதாயிருந்தால் கொடுக்கிறேன்'' என்றார் அந்த ஆசாமி. சில நாள் கழித்து அவர் மார்க் ட்வெயினிடம் வந்து, "சற்று உங்கள் களைக்கொட்டை இரவல் கொடுங்கள்'' என்று கேட்டார். "என் தோட்டத்தில் கொத்துவதாயிருந்தால் கொடுக்கிறேன்'' என்று பளிச்சென்று சொன்னார் ட்வெயின்.

—'ட்ரஷரி அவ் லாப்டர்'

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

படக் கடையில் மேனகையும் விசுவாமித்திரரும் உள்ள ரவி வர்மா படம் தொங்கியது. குழந்தை சகுந்தலையைப் பார்க்கவும் மறுக்கிறார் விசுவாமித்திரர். மேனகை கெஞ்சுகிறாள். அவள் தலை மயிர் அவிழ்ந்து புரளுகிறது. இந்தப் படத்தைச் சிறுமி காமு கண்டாளோ, இல்லையோ, "அம்மா, அம்மா, இதோ பார் இந்த அப்பாவை! இவரும் நம்ம அப்பா மாதிரிதான் செய்கிறார்" என்றாள்.

"என்னடீ செய்கிறார்?" என்று கேட்டுக்கொண்டே திரும்பினாள் அம்மா.



"நீயே பாரேன். 'என் தலை மயிர் அவிழ்ந்து போச்சு. அதைக் கட்டிக்கிறேன். குழந்தையைக் கொஞ்சம் வாங்கிக்கிங்கோ' என்கிறாள் அம்மா. 'அதெல்லாம் முடியாது; முடியவே முடியாது'ன்னு மூஞ்சியைத் திருப்பிண்டுட்டார் அப்பா" என்றாள் சிறுமி.

—எஸ். கிருஷ்ணமூர்த்தி,
புதுக்கோட்டை.

வகுப்பில் ஒரு மூலையில் கிளம்பிய சத்தம் தாங்காமல், வாத்தியார் தமது பிரம்பை எடுத்து மேஜை மீது தட்டிக்கொண்டே, "டேய்! என்னடா அங்கே சத்தம்?" என்று அதட்டினார்.

ராமு என்ற பையன், "ஸார், கோபாலன் என் மூக்கைப் பார்த்துக் கேலி பண்ணறான்" என்று புலம்பினான்.

"அப்படி என்னடா கேலி பண்ணறான்?" என்று கேட்டார் வாத்தியார்.

"அவன் வந்து ஸார், என் மூக்கு உங்களது மாதிரி இருக்குங்கிறான்,



ஸார்'' என்று மேலும் புலம்பினான் ராமு.

—எஸ். எம். வேணுகோபால், 105, கச்சேரி வீதி, சத்தியமங்கலம்.

நான் திருவண்ணாமலையில் படிக்கிறேன். இங்கிருந்து ஒரு நாள் எங்கள் ஊருக்குப் போயிருந்தேன். என் அக்காள் என்னிடம், "ஷண்முகம், கணக்கிலே நம்ம தம்பி மகா சூரனாயிருக்கிறானே, தெரியுமா உனக்கு? கூட்டல், கழித்தல் இரண்டும் பிசகில்லாமல் செய்வான்'' என்று சொன்னாள்.

"மூன்று வயசுள்ள தம்பி, கூட்டல், கழித்தலெல்லாம் போடுகிறானா!'' என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

"இதோ பார், நான் போடுகிற அத்தனை கணக்கையும் அவன் சரியாய்ச் செய்கிறதை நீயே பார். ஆனால் நீ ஒன்றும் குறுக்கே கேட்காதே. என்ன, சரிதானா?'' என்றாள் அக்காள்.

"சரி'' என்றேன்.

அவள் கணக்குப் போடப் போட, தம்பியும் சட்டுச் சட்டென்று விடை சொன்னான்.

"மூன்றும் இரண்டும்?''

"ஐந்து.''

"பத்தில் ஐந்து போனால்?''

"ஐந்து.''

"நான்கும் ஒன்றும்?''

"ஐந்து.''

"எட்டில் மூன்று போனால்?''

"ஐந்து.''

"மூன்றும்.....''

அக்காள் இப்படி ஆரம்பித்ததும், நான் குறுக்கிட்டு, "தொண்ணூறும்'' என்று பலமாய்க் கத்தினேன்.

தம்பியும் பலமாகவே, "ஐந்து'' என்று கத்தினான்.

—ஸி. ஷண்முகம், டேனிஷ் மிஷன் ஸ்கூல், திருவண்ணாமலை.

எங்கள் வீட்டு ராஜத்துக்கும் ராமுவுக்கும் ஆப்பிள் பழம் என்றால் ரொம்பப் பிடிக்கும். அவர்களுக்கு நறுக்கிக் கொடுப்பதற்காக ஒரு நாள் மேஜைமீது ஓர் ஆப்பிள் பழம் வைத்திருந்தேன். இரண்டுபேரும் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். உடனே ராமு 'ஹோ' என்று அழத் தொடங்கினான். என்ன காரணம் என்று விசாரித்தேன்.

"ராஜத்துக்குக் கொடுக்க இன்னோர் ஆப்பிள் இல்லையே, மாமா. அதனால்தான் எனக்கு அழுகை வருகிறது'' என்றான் ராமு!

—டி. சீனிவாசன், 17, கிருஷ்ணராஜபுரம், மதுரை.



குறத்தி குறி பலித்தது

★

கையிலே மை தடவிப் பார்த்துக் குறி சொல்லுவோர் நம் நாட்டில் உண்டு. இதே போலப் பளிங்குக் குறிகாரிகள் என்ற சிலர் மேல்நாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு பளிங்கு உருண்டையைக் கையில் வைத்துக்கொண்டு மந்திரம் ஜபிப்பார்கள். ஏதோ ஆவி அந்தப் பளிங்குக்குள் இருக்கிறதாம். அந்த ஆவி எதிர்காலச் சம்பவங்களைச் சினிமாப் படம் போலக் குறிகாரிகளுக்கு அந்தப் பளிங்கு உருண்டைமீது தோன்றச் செய்யுமாம். அதை அவர்கள் ஒப்பிப்பார்களாம்.

பிரபல பிரிட்டிஷ் ஸினிமா டைரக்டர் ஆல்பிரட் ஹிட்ச்காக் என்பவர் தம் மகள் பாட்ரீஷியாவை அழைத்துக்கொண்டு ஒரு பளிங்குக் குறிகாரியிடம் சென்றார். அவள் பெயர் கார்லொட்டா. மகள் வற்புறுத்தியதால், டைரக்டர் அந்தக் குறத்தியைத் தமக்குக் குறி பார்க்கச் சொன்னார்.

குறத்தி என்ன என்னவோ குறி சொல்லிவிட்டுக் கடைசியில், "பளிங்கு உருண்டையில் இன்றைய தேதி வருகிறது. இதோ ஒரு கடிகாரம் தெரிகிறது. அது 6 மணி அடித்து 7 நிமிஷம் காட்டுகிறது. அதற்குப் பிறகு ஒரே இருள் சூழ்கிறது. ஒன்றுமே தெரியவில்லை. பயங்கர விபத்து ஒன்றின் 'கிரீச்' என்ற குரல் மட்டும் கேட்கிறது" என்றாள். "இன்று நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். குறிப்பிட்ட நேரத்தில் பயங்கர ஆபத்து வரலாம்" என்று டைரக்டரை எச்சரித்தாள்.

அன்று மாலையில் அவருக்கே கொஞ்சம் மருளாய்த்தான் இருந்தது. கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். 6 மணி அடித்து, 5 நிமிஷம் கழிந்தது; டைரக்டருக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. 7 நிமிஷமும் கழிந்தது. ஒன்றும் நேரவில்லை. "அப்பாடா!" என்று அவர் பெருமூச்சு விட்டார். பிறகு உள்ளே போனார். உணவு உண்டார். மனைவியிடம் தம் அநுபவத்தைச் சொன்னார். எல்லாரும் சிரித்தார்கள்.

மறு நாள் பொழுது விடிந்தது. காலையில் வந்த லண்டன் 'டெய்லி மெயில்' பத்திரிகையை எடுத்தார் டைரக்டர். அதைப் பிரித்துப் பார்த்தால், என்ன கோரம்! மாலை ரெயில் வண்டியில் சென்ற அந்தப் பளிங்குக் குறிகாரி, நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டிருக்கப் பயங்கர விபத்தில் சிக்கி மாண்டாள் என்ற செய்தியைக் கண்டார். முதல் நாள் மாலையில் அவள் சொன்ன அதே நேரத்தில்-சரியாக 6 மணி அடித்து 7 நிமிஷத்துக்கெல்லாம் - அவள் இப்படி மாண்டுவிட்டாள். குறி பலித்துவிட்டது!

கார்ட்டூன் கதம்பம்

சுகாதார மந்திரியைக் கண்டிக்க எச். வி. காமத் வெட்டுப் பிரேரணை கொண்டுவந்தபோது....

—'பீப்பிள்ஸ் ஹெல்த்'

ரங்காவும் பிரகாசமும் ஒன்று சேர்கிறார்கள்.

—'சங்கர்ஸ் வீக்லி'



பிரசாரத்திலே போகும் பணம்.

—'ஓரியெண்ட்'



ஜீப், ரைபிள், குண்டு முதலியவைகளுக்குக் கொடுத்து ஏமாந்த தொகைபற்றி இந்தியப் பார்லிமெண்டில் சரமாரியான கேள்விகள் கிளம்பின.

—'நேஷனல் ஹெரால்டு'

அமெரிக்கருக்கு இவர் சொல்லும் இந்த
யோசனை இன்று இந்தியருக்கும் பொருந்தும்.

கடன் வாங்குவதே தொழிலா?

ஹார்ட் ஸ்டில்வெல்

பல வருஷங்களுக்கு முன் ஒரு வியாபாரி, "இந்தாரும், ஐயா. நீர் போய் ஏதாவது பாங்கியில் கொஞ்சம் பணம் கடன் வாங்கும்" என்று என்னிடம் சொன்னார்.

"இப்போது எனக்குப் பணம் தேவை இல்லையே!" என்றேன்.

"இருந்தாலும் வாங்கி வையுமே" என்றார் அவர்.

"ஏன், ஐயா? எனக்கு வேண்டாதிருக்கும்போது சும்மாக் கடன் வாங்கி அதற்கு வட்டியும் எதற்காக நான் தரவேண்டும்?" என்றேன்.

"அப்போதுதான் நம் லேவாதேவிக்கு அத்தாட்சி (க்ரெடிட் லைன்) இருக்கும். நான் சொல்கிற மாதிரி செய்யும். முதலில் கொஞ்சம் தொகை கடன் வாங்கும். சொன்ன கெடுவில் அதைத் திருப்பிக் கொடுத்துவிடும். இரண்டொரு மாதம் பொறுத்து அதைவிடப் பின்னும் கொஞ்சம் அதிகமாகவே கடன் வாங்கும். முன்மாதிரியே சொன்ன கெடுவில் அதையும் திருப்பிக் கொடுத்துவிடும். இப்படிச் செய்துகொண்டே போனால் ஒரு சமயம் ஏதாவது வியாபாரம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் உமக்குத் தேவையான முதல் கிடைக்கும்" என்றார்.

"எனக்கென்னவோ இது அர்த்தம் இல்லாத விஷயம் என்று படுகிறது. எதற்காகக் கடனைச் சும்மா ஏற்றிக்கொண்டே போக வேண்டும்? அப்புறம் திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடுவதற்கா?" என்றேன். "அப்படி இல்லை. இன்றைக்கு இராவிட்டாலும் பின்னால் எப்போதாவது நம் லேவாதேவிக்கு அத்தாட்சி வேண்டியிருக்கும். இப்போதே கடன் வாங்கப் பழகினால்தான் அது நாலு பேருக்குத் தெரியும்" என்றார்.

இருந்தாலும் நான் அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. எப்போதும் போலவே வாங்குகிற சாமானுக்கு உடனுக்குடன் விலை கொடுத்து வந்தேன்.

பாங்கிகளில் பொதுவாக இந்த மாதிரி ஒரு கெட்ட வழக்கம் இருந்து வருகிறது என்று என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் என்னிடத்திலேயேகூடச் சில பேர் இந்த ரீதியில் கடன் வாங்கி வந்தார்கள். முதலில் ஓர் ஐந்து வாங்குவார்கள்; அதைக் கொடுத்துவிடுவார்கள். அப்பால் ஒரு பத்து வாங்குவார்கள்; கொடுப்பார்கள். பிறகு இருபது வாங்குவார்கள்; கொடுப்பார்கள். இப்படியே கடன் தொகை நூற்றுக்கு வந்துவிடும்.

பல வியாபாரங்களில் ஈடுபடுபவர்கள் இந்த மாதிரி ரீதியில்தான்

காப்பிரைட்: ஸவுண்டு (ஆங்கிலம்: மார்ச் '51), பம்பாய்.

மேலும் மேலும் அதிகமாகக் கடன் வாங்கிக்கொண்டே வந்து தம் லேவாதேவிக்கு அத்தாட்சி ஏற்படுத்திக்கொள்வது வழக்கம். 'விடாமல் இப்படிக் கடன் வாங்கிக் கொண்டே யிருக்கிறார்களே இந்த ஆசாமிகள்! பாங்கிக்காரர்கள் இவர் களுக்கு எப்படிக் கடன் கொடுக் கிறார்களோ தெரியவில்லையே; இதை நம்பவே முடியாது. ஒருவன் கடன் வாங்காமல் இருந்தால் தானே பின்னால் எப்போதாவது வேண்டும்போது உடனே அவனுக் குக் கடன் கிடைக்கும்? எப்போதும் கடன் வாங்குகிற பேர்வழிக்குக் கொஞ்சத்தில் கடன் கிடைக்குமா?' என்றுதான் எண்ணிக்கொண் டிருந்தேன்.

ஆனால் சமீபத்தில் என் உறுதி யைச் சோதிப்பது போல் ஒரு விஷயம் நடந்தது. மூன்று வரு ஷத்துக்கு முன் ஒரு புதிய ஊருக் குக் குடி போனேன். அங்கே இருந்த பாங்கியில் 'கரண்டு அக் கௌண்'டில் கொஞ்சம் பணம் போட்டேன். முன்னே நான் இருந்த ஊரின் பாங்கிக்காரரிட மிருந்து ஒரு கடிதம் கொண்டு வந் திருந்தேன்; அதையும் இங்கே கொடுத்தேன். அந்தப் பாங்கியில் நான் அக்கௌண்டு வைத்துக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட் டிருந்தார்கள்; ஆனால் நான் கடனே வாங்கியிராததால் அதைப்பற்றி அவர்கள் ஒன்றுமே எழுதவில்லை.

புதிதாகக் குடி வந்த ஊரிலும் நான் வழக்கம் போலவே உடனுக் குடன் விலை கொடுத்துச் சாமான் களை வாங்கி வந்தேன். ஆனால் ஒரு நாள், வரவேண்டிய பணம் சமயத் தில் கைக்கு வராததால் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டுவிட்டது. எனக்கு இன்னார் இன்னாரிடமிருந்து இவ்வளவு தொகை வரவேண்டுமென்பதற்கு அத்தாட்சியாக அவர்கள் கைப்பட எழுதிய கடிதங்களை எடுத்துக் கொண்டு உள்ளூர்ப் பாங்கிக்கார ரிடம் போனேன். ஒரு பிரசுரால யத்திலிருந்தும் பத்திரிகை ஆபீசி லிருந்தும் எனக்குப் பெருந் தொகை வரவேண்டியிருந்தது. அதில் மூன்றில் ஒரு பங்குதான் இந்தப் பாங்கியில் கடனாக வாங்க எண்ணினேன்; அது என் வருஷ வருமானத்தில் 10 சதவிகிதந்தான் இருக்கும். ஆகவே, நான் கேட் கும் கடன் தொகை சகஜமாகக் கிடைத்துவிடும் என்று எண்ணி னேன்.

பாங்கிக்காரர், "சரி. லேவா தேவிக்கு அத்தாட்சி ஏதாவது இருக்கிறதா?" என்றார்.

"நான் எது வாங்கினாலும் உடனே பணம் கொடுத்து விடுவது வழக்கம்" என்றேன்.

"அப்படியானால் இங்கே வந்த பிற்பாடு நீங்கள் எதுவுமே கடனாக வாங்கினதில்லையா?"

"இல்லை."

"பாங்கிகளிலாவது இதற்கு முன்னே கடன் வாங்கியிருக்கிறீர் களா?"

"இல்லை."

அவர், "உம்.." என்று சொல்லித் தயங்கினார். பிறகு, "சரி. நீங்கள் இந் தக் கடன் மனுவைப் பூர்த்தி செய்து கொடுங்கள். நாளைக்கு மறுநாள் வாருங்கள். மனுவை அதற் குள்ளே பார்த்து வைக்கிறேன்" என்றார்.

கடன் மனுவைப் பூர்த்தி செய் யும்போது திண்டாட்டமாகிவிட் டது. நான் யார் யாரிடம் இதற்கு முன் கடனாகச் சாமானோ பணமோ

வாங்கினேன் என்று அதில் குறிப்பிட வேண்டியிருந்தது. பழைய நண்பர்கள் இரண்டொருவரிடம் முன் எப்போதோ கொஞ்சம் கடன் வாங்கினதுண்டு; அவர்கள் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை என் செலவிலேயே இங்கே அழைத்து விசாரித்துக்கொள்ளலாம் என்று எழுதினேன். ஆனால் எனக்குப் பழக்கமான மற்றவர்கள் எழுத்தாளர்களாகவோ, பத்திரிகையாளராகவோ, சித்திரகாரர்களாகவோ, புரொபஸர்களாகவோ இருந்ததால் பாங்கியில் அவர்கள் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பார்களா என்று சந்தேகம் வந்துவிட்டது. அவர்கள் எனக்குப் பழக்கமுள்ளவர்களே யொழிய அவர்களிடம் நான் இது வரைக்கும் கடனே வாங்கியதில்லை. எப்படியோ ஒரு விதமாக அந்த மனுவைப் பூர்த்தி செய்து கொடுத்துவிட்டு வந்தேன். இரண்டு நாள் கழித்துக் கடன் தொகையைக் கேட்கப் பாங்கிக்குப் போனேன்.

பாங்கிக்காரர் நிஜமாகவே கடன் கொடுக்கத் தயாராகத்தான் இருந்தார். ஆனால் லேவாதேவிக்கு அத்தாட்சி வேண்டுமே; அது இராததுதான் இப்போது பெருந் தடையாக நின்றது.

"நீங்கள் மெய்நம்பிக்கையாகக் கடன் கொடுப்பது உண்டோ இல்லையோ?" என்றேன்.

"என் இல்லாமல்? இது சர்வ சகஜமாச்சே!"

"எப்பேர்ப்பட்டவர்களுக்கு?"

"லேவாதேவி அத்தாட்சி இருப்பவர்களுக்கெல்லாந்தான்."

"அதாவது, வழக்கமாகக் கடன் வாங்கிக் குறித்த கெடுவில் திருப்பிக் கொடுக்கிறார்களே, அவர்களுக்குத்தானே?"

"ஆமாம்."

"சரி. இதோ பாருங்கள்: நான் இந்த இரண்டு வருஷமாக டாக்டர்கள், ஆஸ்பத்திரி அதிகாரிகள், நர்ஸ்கள், மருந்துக் கடைக்காரர் இப்படி எத்தனையோ பேருக்குச் 'செக்' கொடுத்திருக்கிறேன். ஒன்று தவறாமல் மாறியிருக்கிறது. இவ்வளவு தொகைகளையும் மாதம் மாதம் பல வருஷ காலமாகக் குறித்த கெடுவில் கொடுத்து வந்திருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது லேவா தேவிக்கு அத்தாட்சி ஏற்பட்டிருக்குமோ இல்லையோ?" என்றேன்.

"ஏற்பட்டிருக்கும்."

"அப்படியானால் யாரையும் காக்க வைக்காமல் உடனுக்குடன் அவர்களுக்குக் கொடுத்துவந்தது சரியில்லை என்றுதானே சொல்லுகிறீர்கள்?"

"அப்படி இல்லை."

"பின்னே என்னவாம்?"

"முன்னாலே லேவாதேவி நடத்தினதற்கு ஏதாவது அத்தாட்சி இருக்கவேண்டுமோ இல்லையோ? உடனுக்குடன் பணம் கொடுப்பதை விடக் கொடுத்த கடனை அந்த அந்தக் கெடுவில் திருப்பித் தருவது தான் லேவாதேவிக்குச் சரியான அத்தாட்சி" என்றார் அவர்.

"நானும் கொடுக்க வேண்டியதைத்தானே கால தாமதமில்லாமல் கொடுக்கிறேன். நிலுவைக்காரரைக் காக்கப் போட்டுக் கொடுக்கிறவனைவிட நான் எந்த விதத்தில் குறைவு?"

அவர் மறுபடியும், "அது அப்படி இல்லை. இரண்டும் ஒரேமாதிரி என்று சொல்லி விட முடியாது" என்றார்.

எனக்கென்னவோ இரண்டுக்கும் வித்தியாசம் இருப்பதாகப் படவில்லை. அவருக்கு ஒரு வேளை அப்படிப் பட்டிருக்கலாம்; பாங்கிக்

காரர் இந்த மாதிரி சில விதிகளை அநுசரித்து நடப்பார்கள்போல் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டேன். அவர் என் விஷயத்தில் இன்னொரு குறையும் இருப்பதாகச் சொன்னார். எனக்குச் சொந்தச் சொத்து எதுவும் இல்லையாம்!

"பின்னே சொந்தச் சொத்து இல்லாதவர்களுக்குக்கூட மெய் நம்பிக் கையில் கடன் கொடுக்கிறீர்களே; அதெப்படி?" என்றேன்.

"ஆமாம். ஆனால் லேவாதேவி அத்தாட்சி என்று ஒன்று இருக்கிறதோ இல்லையோ?"

"சரி, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் எடுத்திருக்கிறேனே; அது அத்தாட்சி யாகாதா?"

"அதைத்தான் உங்கள் மனைவியின் பேருக்கு, 'அஸைன்' செய்திருக்கிறீர்களே?"

"அவள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால்?"

"அது போதாது."

"சரி. என் பேருக்கே அதை மாற்றிக் கொள்கிறேன்" என்றேன். இது எனக்கு விசித்திரமாகப் பட்டாலும் அவருக்கு என்னவோ சகஜமாக இருந்தது. சற்று யோசித்துப் பார்த்ததும் அவர் சொன்னது சரி என்றுதான் எனக்கும் பட்டது. சட்டென்று ஒரு யுக்தி தோன்றியது. "சரி, புதிதாக வியாபார ரீதியில் நானும் கடன் வாங்க ஆரம்பிக்கிறேன். அப்போது லேவாதேவிக்கு அத்தாட்சி ஏற்பட்டுவிடுமோ இல்லையோ?" என்றேன்.

பாங்கிக்காரர் ஒரு விதமாகச் சிரித்தார்.

"50 டாலர் வாங்கலாமா?" என்றேன்.

"ஆகா! வாங்கலாமே!"

"100?"

"ஓ! வாங்கலாமே."

"200."

"என், அவ்வளவு தொகை கொடுக்கவும் தயார்தான்?"

"இப்போது இருநூறு வரை வாங்கி நான் திருப்பிக் கொடுப்பேன் என்று நீங்கள் நம்பத் தயார்; அப்படி இருக்கும்போது இந்தக் கடிதங்கள், என் சராசரி வருஷ வருமானம் இவைகளை ஆதாரமாகக் கொண்டு மேலே கொஞ்சம் தொகை வாங்கினால் திருப்பித் தராமலா போய்விடுவேன்?"

அவர், "மன்னிக்கவேண்டும். என்ன இருந்தாலும் சரி, லேவாதேவிக்கு ஓர் அத்தாட்சி வேண்டியதுதான்" என்று பழைய பல்லவியையே பாடினார்.

"சரி. போய் வருகிறேன்" என்று சொல்லி அவரிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

கடைசியில் ஒரு நண்பரிடமிருந்து அந்தத் தொகையைக் கடனாகப் பெற்றுக்கொண்டேன். கொஞ்ச நாளில், வரவேண்டிய 'செக்'குகளெல்லாம் கிடைத்தன. கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். 'எல்லாப் பாங்கிகளிலும் இந்தமாதிரி ஒரு வழக்கம் உண்டா?' என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. விஷயம் என்னதான் பார்க்கலாம் என்று இன்னொரு பாங்கிக்காரரிடம் போய் விசாரித்தேன். அவரும் இதே மாதிரிதான் பதில் சொன்னார்.

'அடாடா! நம்மைப் போல் அப்பாவிகளான அமெரிக்கர் லட்சக் கணக்கில் இருப்பார்களே; அவர்களும் சமயத்தில் இப்படித்தானே திண்டாடுவார்கள்? கடன் வாங்காமல் உடனுக்குடன் பணம் செலுத்துவதற்குத் தண்டனை விதிக்கிற

மாதிரியல்லவா இருக்கிறது இது' என்று எண்ணினேன்.

அப்போது தினசரி ஒன்றில் வெளியான ஒரு துணுக்கு ஞாபகத்துக்கு வந்தது. ஓர் ஆசாமி இன்னொருவனைப் பார்த்து, "உமக்கு வருகிற சம்பாத்தியம் குடும்பம் நடத்தப் போதுமா?" என்று கேட்கிறான். அதற்கு இரண்டாம் ஆசாமி, "அட கடவுளே! அதை என் கேட்கிறாய்? என் லேவாதேவி நாணய பலத்தைக்கொண்டே காலந்தள்ளிக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொல்கிறான்.

'இந்த மாதிரியும் ஒரு வழக்கம் இருப்பது அவசியமா?' என்றுதான் எனக்குப் புரியவில்லை. இருக்கிற நிலையைப் பார்த்தால், யோக்கியமானவர்கள் சமயத்தில் பணம் இல்லாமல் திண்டாடும்போது, கொள்ளை வட்டி வாங்கும் ஆள் விழுங்கி முதலைகளிடம் கடன் வாங்குவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே இல்லை. இந்த முதலைகளுக்கு மனித சுபாவம் நன்றாகத் தெரியும். உடனுக்குடன் பணம் கொடுத்து ஒரு சாமானை வாங்குகிறவன், கடன்பளு மென்னியை அழுத்தினால் எப்படியாவது சிரமப்பட்டு அதைத் திருப்பிக் கொடுத்துவிடுவான் என்று இவர்களுக்குத் தெரியும்.

ஒரு தரம் கடன் வாங்கினால் அதுவே கடைசியில் ஒரு பழக்கமாகிவிடும்; நாளடைவில் நாடு முழுதும் இந்தக் கெட்ட பழக்கம் பரவி, பரஸ்பரம் வாங்கின கடனை யாருமே திருப்பித் தரமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். அப்போது தேசத்தின் பொருளாதார நிலையே கலகலத்துப் போகும். 1929-இல் இப்படித்தான் நேர்ந்தது. ஆகவே, இந்த முறையை யாருமே ஆதரிக்கக் கூடாது என்றுதான் சொல்வேன். கூடியவரைக்கும் கடன் வாங்காமல் இருக்கப் பழகுவதுதான் நல்லது. எதையும் உடனுக்குடன் காசு கொடுத்து வாங்குவதுதான் லேவாதேவிக்குச் சரியான அத்தாட்சி என்று ஜனங்களின் மனசில் பதியும்படி செய்யவேண்டும். கடன் வாங்கித்தான் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எப்போதாவது ஏற்படுவது எல்லாருக்குமே சகஜந்தான். அதற்காக ஒருவன் வேண்டுமென்றே முன்னதாகவே பாங்கிக்காரரிடம் அடிக்கடி கடன் வாங்கி நல்ல பெயர் எடுப்பதென்றால் அது எனக்கென்னவோ விசித்திரமாகத்தான் இருக்கிறது!

சுருக்கமான வேண்டுகோள்

அமெரிக்க விவசாய இலாகாவுக்குப் பலர் தங்கள் சந்தேகங்களை எழுதி, அவைபற்றிய தகவல்களைத் தெரிவிக்கும்படி கடிதம் எழுதுவது வழக்கம். அந்த இலாகாதாரும் தங்களால் சாத்தியமான மட்டும் தகவல் சேகரித்துப் பதில் தருவார்கள். ஒரு சமயம் இப்படி ஒருவர் தகவல் வேண்டி எழுதிய கடிதந்தான் மிகவும் தெளிவானது; சுருக்கமானது. ஆனால், விவசாய இலாகாதாரை அந்த வேண்டுகோள் மிகவும் திணற அடித்துவிட்டது. அந்த வேண்டுகோள் இதுதான்: "அன்பார்ந்த ஐயா, தங்களால் இயன்ற தகவலையெல்லாம் சேகரித்து எனக்கு எழுதியனுப்புங்கள்."

—டேவிட் ஏ. ஹெல்லர்

கடைசிப் பந்தயம்

★

கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கிவிட்டது. பில்லி மிஸ்கின் குடும்ப நிலை சரியாக இல்லை. பில்லி அமெரிக்காவிலே ஸெயிண்ட் பால் நகரில் வசிப்பவர்; குத்துச் சண்டையில் தேர்ந்தவர்; பல பேரைத் தோற்கடித்தவர். ஏராளமாகப் பணம் சம்பாதித்து, ஒரு மோட்டார் வியாபாரத்தில் போட்டு இழந்தவர். சில மாதகாலமாக அவருக்குக் கடுமையான நீரிழிவு நோய். இதனால் அவர் குத்துச் சண்டையில் கலந்து கொள்வதில்லை. அவருக்கு வயது 29 இருக்கும். இப்போது கையில் பணம் இல்லாமல் திண்டாடினார்.

சட்டென்று ஏதோ தோன்றவே பழைய குத்துச் சண்டை மானேஜரிடம் போனார்; தமக்கு ஒரு குத்துச்சண்டையை ஏற்பாடு செய்யச் சொன்னார். முதலில் மானேஜர், "ஐயையோ! உங்கள் உடம்பு சரியாக இல்லை. இந்த நிலையில் நான் சம்மதிக்கவே மாட்டேன்" என்றார். ஆனால் பில்லி தம் நிலையைச் சொல்லி மிகவும் கெஞ்சவே, கடைசியில் மானேஜர் இணங்கினார்.

குத்துச்சண்டையும் தொடங்கியது. பில்லி தம் பழைய திறமை முழுவதும் காட்டி, பிரென்னன் என்ற எதிரியோடு வெகு மும்முரமாகச் சண்டை போட்டு ஜயித்துவிட்டார்! இந்தத் தடவை 2,400 டாலர் அவருக்குக் கிடைத்தது. உடனே கடை வீதிக்குப் போனார்; அவர் மனைவி வெகு நாளாக விரும்பிய பியானோ வாத்தியத்தை வாங்கினார். குழந்தைகளுக்குச் சைக்கிள், பொம்மை எல்லாம் வாங்கினார். தம் பெற்றோருக்குக் கிறிஸ்துமஸை உத்தேசித்துக் கொஞ்சம் பணம் அனுப்பி வைத்தார். பிறகு ஓய்ந்து போய்ப் படுக்கையில் வந்து படுத்தார். உடம்பில் வலி பொறுக்க முடியவில்லை. இருந்தாலும் எப்படியோ சமாளித்துக்கொண்டார். வீட்டில் கிறிஸ்துமஸ் மரத்துக்கு அலங்காரம் செய்திருந்ததைப் பார்த்து மகிழ்ந்தார். விருந்தின்போது மனைவியோடும் குழந்தைகளோடும் தமாஷாகப் பேசினார். ஆனால் அதிகமாக ஒன்றும் சாப்பிடவில்லை. இதை அவர் மனைவி கவனித்தாள். உடனே அதை மறைப்பதற்காக, "உன் சமையல் இன்றைக்குப் பலே ஜோர்!" என்று ஆவலுடன் உண்பது போல் பாவனை செய்தார்.

மறுநாள் வலியைச் சமாளிக்க முடியாமல் குத்துச்சண்டைக் கம்பெனி மானேஜருக்குப் 'போன்' செய்து அவரை வரவழைத்தார். அவரோடு ஆஸ்பத்திரிக்கு போகும்போதுதான் பில்லி தம் மனைவியிடம் உண்மையை வெளியிட்டார்.

ஆறு நாள் கழித்துப் புது வருஷப்பிறப்பு நாளன்று காலையில் பில்லி உயிர் நீத்தார்.

க்ஷய அணுவுடன் பேட்டி

காப்டன் நாஜூசாகேப் கோகலே

★★★

'டி. பி.' என்ற க்ஷய நோயால் நம் நாட்டில் 5 லட்சம் பேர் சாகிருர்கள். இந்தக் கொடிய வியாதியை உண்டாக்கும் அணுவுடன் கற்பனைப் பேட்டி ஒன்றை வர்ணிக்கும் இந்தக் கட்டுரையில் ரசமான பலவித விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

★★★

ஒருநாள் இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். குளிர்ந்த காற்று வீசிக்கொண் டிருந்தது. யாரோ மணி அடிக்கும் சத்தம் கேட்கவே, ஒரு பக்கம் கொஞ்சம் சந்தோஷம், ஒரு பக்கம் கொஞ்சம் அலுப்பு இவைகளோடு படுக்கையை விட்டு எழுந்தேன். சட்டையை மாட்டிக்கொண்டேன். வந்திருப்பது யார் என்று பார்க்கச் சென்றேன். நடு நிசியில் கூப்பிடுவதால் ஏதோ அவசரமான கேசாக இருக்க வேண் டும், நிறைய பீஸ் வாங்கலாம் என்ற சந்தோஷம் ஒரு பக்கம்; சுகமாய்த் தூங்கிக்கொண் டிருக்கும்போது எழுந்து போக வேண்டியிருக் கிறதே என்ற அலுப்பு ஒரு பக்கம். விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து பார்த்தேன். கப்பைக் காலும் கூனல் முதுகும் மெலிந்த தோற்றமும் கொண்ட நெட்டை யான ஓர் ஆசாமி நின்றுகொண் டிருந்தான். எனக்கு வந்த ஆச்சரி யத்துக்கு அளவில்லை. உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை யில் சிவப்பு நிறமான ஆடைகளை அவன் அணிந்திருந்தான். என்னை நல்ல தைரியசாலி என்றுதான் எல்லாரும் சொல்லுவார்கள். ஆயி னும் இந்த மனிதனைக் கண்டதும் என் உடம்பு வெடவெடவென்று நடுங்கத் தொடங்கியது. மெல்லச் சமாளித்துக்கொண்டு, "யார்? என்ன வேண்டும்?" என்று விசாரித்தேன். வாயைக் கோணிக்கொண்டு புன் சிரிப்புச் சிரித்துக்கொண்டே அவன், "என்ன, டாக்டர்? டி. பி. நிபுணர் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; என்னைத் தெரியவில்லை என்கிறீர்களே?" என்ருன்.

இந்த வார்த்தைகள் எனக்கு மேலும் கலவரத்தை உண்டாக் கின. "என்னப்பா, நான் ஒரு டி. பி., நிபுணன் என்ருல் உன்னைத் தெரிந்திருக்க வேண்டுமா? உனக் கும் எனக்கும் என்ன சம்பந்தம்?" என்றேன்.

"சம்பந்தம் நிறைய இருக்கிறது, டாக்டர். நான் ஒரு டி. பி., அணு வுயிர். உம்மைப் பார்ப்பதற்காகத் தான் வந்தேன்" என்று அவன் சொன்னதைக் கேட்டு நான் சிறிது யோசனையில் ஆழ்ந்தேன். பிறகு, "உள்ளே வாருங்கள்" என்று அழைத்தேன்.

"மன்னிக்கவேண்டும். அவ்வளவு பிரகாசமான வெளிச்சத்தில்

மூலம்: இந்தியன் மெடிகல் ஜர்னல் (ஆங்கிலம்), புன.

வேண்டாம். இந்த இருட்டான இடமே தேவலை'' என்றான் அந்த மனிதன்.

''சரி. உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்'' என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக் குலுக்க என் கையை நீட்டினேன்.

''வேண்டாம், டாக்டர். உங்களுடன் கை குலுக்க எனக்கு இஷ்டமில்லை. உங்கள்மேல் விரோதம் என்று நினைத்துவிடாதீர்கள். ஆனால் என்னுடன் கை குலுக்குவது துன்பத்தை விலைக்கு வாங்குவது போல் ஆகும். இது உங்களுக்கு நன்றாகத் தெரியுமே. உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லுகிறேன்: நாகரிகம், நாகரிகம் என்று பிரமாதப்படும் இந்தக் காலத்தில் நானும் என் இனத்தாரும் மிகவும் சௌக்கியமாயிருக்கிறோம். உங்கள் செயற்கை வாழ்க்கையும் ஜனநெருக்கமும் நீங்கள் உட்கொள்ளும் சத்தில்லாத உணவும் எங்களுக்கு அமோகமான சம்பத்தை அளித்து வருகின்றன. உங்களை இன்று சந்தித்துப் பேச வேண்டும் என்ற உத்தேசத்தோடு வந்தேன். ஏனென்றால், நீங்கள் மற்ற டாக்டர்களைப்போல் இல்லை. எங்கள் இனத்தையே ஒழித்துவிடப் போகிறீர்கள் என்று எங்களில் சிலர் உங்களைத் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அப்படியெல்லாம் செய்ய முடியாது. நாங்கள் மேலும் மேலும் விருத்தியாவதை வேண்டுமானால் நீங்கள் ஒருவேளை தடுக்கலாம். எங்களை அடியோடு மாய்த்து ஒழித்து விடுவதற்கு வேண்டிய ஆயுதங்கள் உங்களிடம் ஏது? நாங்கள் உயிரோடு இருக்கும் போது செய்யும் தீங்கு ஒரு மடங்கு; நாங்கள் செத்த பிறகு செய்யும் தீங்கோ பல மடங்கு. அது உங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். கி. மு. 2,000 வருஷத்துக்கு முன்பிருந்தே எங்கள் வம்ச விருத்தி சௌக்கியமாக நடந்து வருகிறது. எங்கள் வெற்றிச் சின்னங்களுக்கு எகிப்து தேசத்து 'மம்மி'கள் உறை போடக் காணா. தொத்து வியாதியாகப் பரவும் எங்கள் சக்தியை லானக், வில்லமின், சரகர் முதலியவர்கள் மிகவும் வியந்தார்களே யொழிய அதற்குமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், 1882-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ஆம் தேதி எங்களுக்குப் பெரிய எமனாக ராபர்ட் கோச் என்பவர் தோன்றி எங்களைக் கண்டுபிடித்து விட்டார். நாங்கள் யார், எப்படி வாழ்கிறோம், எங்கள் இயல்புகள் என்ன என்ற சகல விவரங்களையும் அவர் தெரிந்துகொண்டார். ராபர்ட் கோச் எங்கள் விரோதியாக இருந்தாலும் அவருடைய அருஞ் சாதனையை எங்கள் முன்னோர் பாராட்டினார்கள். அதற்கு அடையாளமாக 'ராபர்ட் கோச் அணுவுயிர்' என்று அவர் பெயரையே நாங்கள் சூட்டிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அது இருக்கட்டும், டாக்டர். எங்களை நீங்கள் உங்கள் விரோதியென்று சொல்லுகிறீர்களே; நாங்களும் கடவுள் சிருஷ்டிதானே? எங்களுக்கும் உயிர் வாழ்வதற்கு அதிகாரம் இல்லையா? மனிதர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்கள் மீன், மாமிசம் இவைகளைச் சாப்பிடுவார்கள். மீன்களும் ஆடுமாடுகளும் மனிதர்களைத் தங்கள் விரோதிகள் என்று சொன்னால் அதற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்லுவீர்கள்?'' என்று கேட்டான்.

''டி. பி., அணுவுயிர் அவர்களே,

நீங்கள் சொல்வதெல்லாம் மிகவும் சுவாரசியமாயிருக்கிறது. ஆனல் மனிதனுடைய உடம்பில் மற்ற எல்லா அங்கங்களையும்விடச் சுவாசப் பை (லங்ஸ்) என்ற உறுப்பையே நீங்கள் ஏன் அதிகமாக விரும்புகிறீர்கள்? அதைச் சொல்ல முடியுமா?'' என்று நான் கேட்டேன்.

“அதுவா? சொல்கிறேன் கேளுங்கள்'' என்று அவன் ஆரம்பித்தான்: “எங்கள் தாயாதிகளை உங்களுக்குத் தெரியுமா? 'பொவைன்' என்ற பசுமாடுபற்றிய அணுவுயிர்களைத்தான் சொல்லுகிறேன். நாங்களோ பிறரைச் சுரண்டி ஜீவிப்பவர்கள்; தவிர, பெரிய சோம்பேறிகள். இதுவும் உங்களுக்குத் தெரியும். நாங்கள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போக வேண்டுமானல், நாங்களாகப் போகமாட்டோம்; யாராவதுதான் எங்களைத் தூக்கிச் செல்லவேண்டும். நாங்கள் சோம்பேறிகளாய்ச் சுகம் அநுபவித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் தாயாதிகள் கிளம்பி, மனிதர்களைச் சிறு வயதில் தாக்கினர்கள். பசுவின் பால் மூலம் குழந்தைகளின் உடம்பில் நுழைந்தார்கள். உடம்பிலே 'லிம்பாயிட் டிஷ்யூ' என்ற இணை அணுக்கள் நிறைந்த எலும்பு, மூட்டு, சுரப்பி (கிளாண்டு) ஆகிய உறுப்புக்களையும், மூளை, முதுகெலும்புத்தொடர் இரண்டையும் சூழ்ந்திருக்கும் 'மெனிஞ்ஜஸ்' என்ற மெல்லிய ஜவ்வையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த மாதிரி வபையான இடங்களையெல்லாம் எங்கள் தாயாதிகள் போய்ப் பிடித்துக் கொண்ட பிறகுதான் நாங்கள் விழித்துக்கொண்டோம். எங்களுக்கு இந்த இடங்களில் ஒன்று கூட அவர்கள் மிச்சம் வைத்திருக்கவில்லை. அப்போது நாங்கள் ஒரு தூதுக்கோஷ்டியை அனுப்பினேம். அந்த மனித உடம்பிலே எங்களுக்குச் சௌகரியமான இடம் பாக்கி இருக்கிறதா என்று பார்த்துவரச் சொன்னேம். அந்தக் கோஷ்டி சென்று உடம்பு முழுவதையும் நன்ருய் ஆராய்ந்து பார்த்துவிட்டுத் திரும்பி வந்தது. இணை அணுவுயிர்கள் நிறைந்து, பஞ்சுபோல் மிருதுவாயிருக்கும் வெகு சௌக்கியமான இடம் ஒன்று மிச்சம் இருப்பதாகவும், அதில் போய் நுழைவது மகா சுலபம் என்றும் அது தெரிவித்தது. அதுதான் சுவாசப் பை.''

“சரி. இடது சுவாசப் பையைக் காட்டிலும் வலது சுவாசப் பையை நீங்கள் ஏன் அதிகமாய் விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

“நாங்கள் அமைதியை விரும்பும் பிராணிகள். உங்கள் வலது சுவாசப் பையின் மேல்பகுதி நாங்கள் சுலபமாய்ப் புகுந்து வசிக்கக் கூடியதாய் இருக்கிறது. மனிதர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் வலதுகைப் பழக்கமுள்ளவர்கள். அந்தக் கையை அவர்கள் மேலும் கீழும் அசைக்கும்போது அந்த ஆட்டம் எங்களைக் கலக்கும். நாங்கள் நாலு பக்கமும் சிதறிப் பரவுவோம். உங்கள் இடது சுவாசப் பை அப்படி இல்லை.''

“இப்போது எனக்கு எல்லாம் நன்ருக விளங்குகிறது. ஆயினும் வைத்தியத்துக்கோ சஸ்திர சிகிச்சைக்கோ ஒன்றுக்கும் அசையாமல் நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்? கொஞ்சம் சொல்ல முடியுமா?'' என்று கேட்டேன்.

அவன் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு, "நல்லது. நீங்கள் என்னைப் பிரியமாய் வரவேற்றுப் பேசியதால், உங்களுக்குச் சொல்லுகிறேன். எங்களைச் சுற்றி மூடியிருக்கும் மெழுகு போன்ற உறையை உங்கள் மருந்துகள் ஒன்றும் செய்ய முடியாது. அதைப் பீறிக்கொண்டு வந்து எங்களைக் கொன்றுவிட்டால்கூட, அதனால் நாங்கள் வசித்த மனித உறுப்புக்குத் தீமையே தவிர நன்மை இல்லை. நான் முன்னே சொன்னதுபோல் நாங்கள் உயிரோடு இருந்த பொழுதைவிட இறந்த பின்தான் எங்களால் அதிகக் கெடுதல் ஏற்படும். நாங்கள் இறந்ததும் எங்களுடைய விஷம் (டாக்ஸின்) வெளிப்பட்டு மனித உடம்பிலுள்ள சதைக்குப் பெருங்கெடுதியை உண்டாக்கிவிடும். அதனால்தான் நீங்கள் சிகிச்சையாகச் சொல்லும் நல்ல காற்றும் உள்ளுக்குக் கொடுக்கும் தங்கபஸ்மம், ந்யூமோதொராக்ஸ், ந்யூமோ பெரிடோனியம் ப்ரெனிக் - அவல்ஷன், லோபெக்டமி, ந்யூமோனெக்டமி, தோராவோஸ்ப்ளாஸ்டிஸ், ஸ்ட்ரெப்டோமைஸின் ஆகிய மருந்துகளும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. எங்களை அடைத்துப் போட்டு மேற்கொண்டு வளரவொட்டாமல் செய்வதுதான் அந்த நோக்கம். அதற்குமேல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அடிமை நாடுகளை ஆளும் ராஜதந்திரிகளைப்போல, டாக்டர்களும் எங்கள் விஷயத்தில் பிரித்தாளும் உபாயத்தை ஓரளவு கடைப்பிடிக்கிறார்கள். கால்மோர், குவோரின் என்ற இரண்டு கெட்டிக்கார டாக்டர்கள் எங்கள் தாயாதிகளான 'பொவைன்' இனத்தாரை மெதுவாய் ஏமாற்றித் தங்கள் பக்கம் இழுத்துச் சென்று அவர்களுடைய தோஷத்தையெல்லாம் களைந்து அவர்களையே எங்களுக்கு விரோதமாய்ப் பிரயோகிக்கிறார்கள். இதுவே பி. ஸி. ஜி., வாக்ஸைன் என்பது. அது எங்கள் வேலையை வெகுவாய்த் தடுத்து நிறுத்திவிட்டது. ஆயினும் பி. ஸி. ஜி., என்ற அந்த மருந்து எங்களை வராமல் தடுப்பதற்கு உதவியாகுமே தவிர, நாங்கள் பீடித்தவரைக் குணப்படுத்த அதனால் முடியாது. ஆகவே, உங்கள் சந்ததியாரை நாங்கள் வந்து தாக்காதபடி வேண்டுமானால் நீங்கள் முன்ஜாக்கிரதையாக பி. ஸி. ஜி., உபயோகிக்கலாம். எங்களைக் கொன்று ஒழிப்பதற்கோ மற்றொரு ராபர்ட் கோச் தோன்றினால்தான் முடியும். சரி, டாக்டர். சொல்லக் கூடாதவைகளையெல்லாம் சொல்லும்படி செய்துவிட்டீர்கள். சூரியன் உதயமாவது போல் தோன்றுகிறது. அதற்குள் நான் போக வேண்டும்" என்று சொல்லி அந்த ஆசாமி நிறுத்தினான். அவனுக்கு வந்தனமளித்து விடை கொடுப்பதற்குள் அவன் எழுந்து போய்விட்டான்.

மனிதன் - உணர்ச்சிக் களஞ்சியம்

மனிதனின் உடம்பிலே அபாரமான உணர்ச்சி இருக்கிறது. அவன் முதுகைத் தடவிக் கொடுத்துவிட்டால் போதும்; உடனே அவன் தலை கனத்து விடுகிறது.

—'கார்ஸ் பிளேம்,' இண்டியானபோலிஸ்.

நீரிலே போக்கு வரத்து நடத்த இத்தனை வித வாகனங்கள் இருந்தன கேரளத்திலே.

மலையாள வாகனங்கள்

பி. கே. கருணாகர மேனன்

மலையாளத்தில் பெரும்பாலும் போக்கு வரத்து ஜல மார்க்கமாகவே நடந்து வந்தது. தரை மார்க்கம் வண்டிப் போக்கு வரத்துக்கு ஏற்றபடி அகலமாகவும் கெட்டியாகவும் இராததே இதற்குக் காரணம். தரையில் யானை, குதிரை முதலிய மிருகங்கள் வாகனமாகப் பயன்பட்டு வந்தன. மலைமேலிருந்து பெரிய மரங்களைக் கீழே இறக்குவதற்கும் ஆலயங்களில் ஸ்வாமி பவனி வருவதற்கும் யானையை உபயோகித்து வந்தார்கள். குதிரைகள் சவாரிக்கு உதவியாக இருந்தன. கட்டை வண்டியும் வில் வண்டியும் கொஞ்ச காலமாகத்தான் இங்கே பழக்கத்தில் இருந்து வருகின்றன.

'மஞ்சல்' என்று ஒரு வாகனம் இருக்கிறது. இது ஏணிபோல் இருக்கும். இதில் மனிதர் படுத்துக்கொண்டால்தான் தூக்கச் சௌகரியமாக இருக்கும். ஆட்கள் உறுதியான தடியில் இதை மாட்டித் தோளில் சுமந்து செல்வார்கள்.

தொட்டில் போல் அமைந்தது 'டோலி'. இதில் பெண்கள் ஏறிக்கொள்வார்கள். இதையும் ஆட்கள் சுமந்து செல்வதுதான் வழக்கம். பல்லக்கும் 'தண்டு'ம் 'மேனா'வும் இதே மாதிரிதான் ஆள் தூக்கி வாகனங்களாகப் பயன்பட்டு வந்தன. வைதிகர்கள் மேனாவில் ஏறிப் பிரயாணம் செய்வார்கள். இதில் மூடித் திறக்கத் 'தள்ளு கதவுகள்' உண்டு. தண்டில் ஆடம்பரமான பேர்வழிகள் சவாரி செய்வது வழக்கம்.

மலையாளத்தில் ஜலமார்க்கமாகப் பயன்படும் வாகனங்களில் முக்கியமானது 'வஞ்சி' என்ற ஒரு வகைத் தோணிதான். அரசாங்கத்தார், சில இடங்களில் குறித்த நேரம் தவறாமல் போக்குவரத்துக்கு உதவியாக இப்படி வஞ்சிகளை உபயோகித்து வந்தார்கள். இவைகளைக் 'கேவ்' வஞ்சிகள் என்பார்கள். நிதானமாகச் செல்ல விரும்புகிறவர்களுக்கு இதில் பிரயாணம் செய்வதே ஓர் இன்பமாக இருக்கும்.

'இருட்டுக் குத்தி' என்பதும் வஞ்சி போன்ற ஒரு படகுதான். ஆனால் இதில் முன் பக்கம், பின் பக்கம் என்ற வேற்றுமை இல்லை. எப்படி வேண்டுமானாலும் இதைச் செலுத்திக்கொண்டு போகலாம்.

'சுண்டன் வள்ளம்' என்ற ஒரு வகைப் படகு 'வஞ்சி விளையாட்டு' என்ற விழாவுக்காக மட்டுமே உபயோகமாகிறது. ஆவணியில் உத்தரட்டாதி நட்சத்திரத்திலும் ஆனியில் மூல நட்சத்திரத்திலும் இந்த விழா நடைபெறும். இந்த வகை வஞ்சியின் முகப்பில் துதிக்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 11-2-'51), கள்ளிக்கோட்டை.

கையைச் சுருட்டியிருப்பதுபோல் யானை முகம் செதுக்கியிருக்கும். துதிக்கை நுனியில் வெள்ளி அல்லது பித்தளைப் பூண் போட்டிருக்கும். இந்தப்படகைப் பாட்டுக்கேற்றபடி தாளத்தோடு தள்ளிக்கொண்டு போவார்கள். நீர் மட்டத்திலிருந்து இது அதிக உயரமாக இருக்கும்.

அகலம் குறைந்து நீளம் அதிகமாக இருக்கும் வஞ்சியை 'ஓடி' என்கிறார்கள். இதில் மூன்று நான்கு பேருக்குமேல் ஏற இடம் இராது. இது வேகமாகச் செல்லும்.

'கல்லு வஞ்சி' என்பது பாரமான பொருள்களை ஏற்றிச் செல்லும் ஒரு வகைப் படகு. எவ்வளவு அலை மோதினாலும் இது கவிழவே கவிழாது. இதைத் தள்ள மாட்டார்கள். பாய் கட்டிக் காற்றின் போக்குக்கு ஏற்றபடி இதைச் செலுத்துவது வழக்கம்.

'பத்தேமாரி' என்ற மரக்கலம் கடல் பிரயாணத்துக்கு ஏற்றது. முன் காலத்தில் ரோமாபுரியோடு இந்தியா வியாபாரம் நடத்தி வந்தபோது இந்தமாதிரி மரக்கலங்கள் மிகவும் பயன்பட்டன.

பெரிய பெரிய சாமான்களை ஒரு கரையிலிருந்து மறு கரை சேர்க்கச் 'சங்காடம' என்ற படகு பெரிதும் பயன்படுகிறது. இரண்டு பெரிய வஞ்சிகளை இணைத்துக் குறுக்கே பலகைகளைப் போட்டுக் கட்டினால் சங்காடம் ஆகிவிடும். நாலு பக்கம் நாலு பேர் நின்றுகொண்டு கழியை நீரில் ஊன்ற, இது நகர்ந்து அக்கரை சேரும். திருவாங்கூர் பஸ் போக்குவரத்தில் இடை இடையே கால்வாய்களைக் கடப்பதற்கு இது அவசியமாக இருக்கிறது.

'கட்டு வள்ளம்' என்ற படகு 'கல்லு வஞ்சி' மாதிரிதான் இருக்கும். ஆனால் இதற்குப் 'பன்னகம்' என்று சொல்லும் கூரை உண்டு. பல நீண்ட பலகைகளைச் சேர்த்து உள்ளே நீர் ஏறுதபடி கயிற்றால் நெருக்கமாகக் கட்டியிருப்பதால் இதற்கு இந்தப் பெயர் வந்தது. மற்ற வஞ்சிகளை மரத்தால் மட்டுமே இணைத்திருப்பார்கள்.

'பள்ளியோடம்' என்ற படகில் மன்னர்கள், சீமான்கள் முதலியவர்கள் போவது வழக்கம். இதில் பாதிப்பாகம் ஜன்னல் வைத்து அழகான வீடுபோல் காட்சியளிக்கும். இதன் உள்ளே உட்காரவும் படுக்கவும் நல்ல வசதி உண்டு. திறந்திருக்கும் பாகத்தில் இருந்து கொண்டு படகோட்டிகள் அதை ஓட்டுவார்கள்.

'படவு' என்றும், 'பாய்க்கப்பல்' என்றும் வழங்கும் கலமும் 'பத்தேமாரி' போல் கடல் பிரயாணத்துக்கு உதவும். பழங்காலத்தில் வெளி நாடு சென்றுவர வியாபாரிகள் இதை உபயோகித்து வந்தார்கள்.

'பொதும்பு தோணி' என்ற படகு, வெள்ளம் பொங்கும்போது அதில் மிதந்து வரும் மரங்களைக் கரை சேர்க்க உதவுகிறது.

'சாளத் தடி' என்ற படகு மீன் பிடிக்கப் பயன்படும். இரண்டு மூன்று மரக்கட்டைகளைச் சேர்த்துக் கட்டினால் சாளத் தடி ஆகிவிடும்.

இவைகளெல்லாம் வெகு நாளாக உபயோகத்தில் இருந்து வந்தன. ஆனால் யந்திரப் படகு வந்த பிறகு இவைகளுக்கு இருந்த மவுசு குறைந்துவிட்டது.

உலகத்திலேயே மிகச் சிறந்த சீர்திருத்தக்காரன் யார் தெரியுமா? தன்னைச் சீர்திருத்திக்கொள்பவனே. —பெர்னார்டு ஷா

சீதை மரவுரி தரித்தல்

சீதை தன்னையும் காட்டுக்கு அழைத்துக் கொண்டுதான் போக வேண்டுமென்று ராமனிடம் மன்றாடவே அவன் வேறு வழியின்றி அதற்குச் சம்மதித்தான். உடனே லட்சுமணன் தானும் கூட வரப் போவதாகப் பிடிவாதம் செய்தான். ராமன் எவ்வளவு தடுத்துப் பார்த்தும் தம்பியை நிறுத்த முடியவில்லை. கடைசியாக ராமன் அவனையும் தன்னோடு அழைத்துப் போகச் சம்மதித்தான். கட்டில், படுக்கை, ஆடை அணிகள், உடைமை எல்லாவற்றையும் லட்சுமணனைக் கொண்டு பல முனிவர்களுக்குத் தானமாக வழங்கினான்.

பிறகு ராமன் தன் தந்தையிடம் விடை பெற்றுச் செல்லப் புறப்பட்டான். சீதா லட்சுமணர்களுடன் அவன் வீதியில் நடந்து வருவதைப் பார்த்து மக்கள் மிகவும் வருத்தமுற்றார்கள். "ராமன் தர்மத்தில் பற்று உள்ளவன். அதனால் தந்தையைப் பொய்யனாக்க அவன் விரும்பவில்லை. சந்தனம் அணிந்த சீதையின் மேனி, வெயிலும் மழையும் குளிரும் பட்டுக் குன்றி விடுமே! தசரத மகாராஜன் தானாக ராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லியிருக்க மாட்டான். ஏதோ ஆவேசத்தில்தான் இப்படிப் பேசியிருப்பான். ராமன் கஷ்டப்பட்டால் உலகம் வேரற்ற மரம் போல் அழிந்து போய் விடும். ஆகவே, நாமும் லட்சுமணனைப்போல் ராமனைப் பின்

வால்மீகி ராமாயணம் மகோன்னத மான காவியம் என்பது உலகப் பிரசித்தம். அதன் முக்கியப் பகுதி கள் ஒவ்வொன்ருக 'மஞ்சரி'யில் வரும். இது ஆருவது பகுதி.

தொடச வேண்டியதுதான். நாம் அங்கே போனல் காடு நாடாகும். மனிதர் இல்லாமல் இந்த நகரம் பாழ் அடைந்து காடாகட்டும். அப் புறம் இதைக் கைகேயியே ஆளட் டும்" என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

தந்தையின் அரண்மனையை அடைந்ததும் ராமன் அங்கே சுமந்திரன் வருத்தத்தோடு அமர்ந் திருப்பதைக் கண்டான். தான் வந்திருப்பதாக மன்னனிடம் தெரி விக்கச் சொன்னன். கிரகணம் பிடித்த சூரியன் போல் கிடந்த மன்னனை வணங்கிச் சுமந்திரன், "ஜய விஜயீ பவ" என்று வாழ்த் தினன். பிறகு பேச்சுத் தடுமாற, "ஸ்ரீராமன் தன் உடைமை எல்லா வற்றையும் அந்தணர்களுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் புறப் படப் போகிருன். அதற்கு முன் தங்களிடம் விடை பெற்றுக்கொள்ள இதோ வந்திருக்கிருன்" என்ருன்.

இதைக் கேட்டதும் தசரதன், "என் மனைவிமார் எல்லாரையும் அழைத்து வா. எல்லாரோடும் சேர்ந்து ராமனைப் பார்க்கவேண்டு மென்று எனக்கு ஆவலாக இருக் கிறது" என்ருன். சுமந்திரன் உடனே அந்தப்புரம் போய் மன்ன னின் கட்டளையைத் தெரிவித் தான். அவர்கள் எல்லாரும் உடனே கௌசல்யையோடு மன் னன் இருக்குமிடம் வந்தார்கள். மன்னன் ராமனையும் அழைத்து வரச் சொல்லிச் சுமந்திரனை

அனுப்பினான். வெகு தூரத்திலிருந்தே கை கூப்பியபடி ராமன் வந்தான். அவனைக் கண்டதும் தசரதன் ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்து அவனை நோக்கி வேகமாக ஓடி வந்தான். ஆனால் நடு வழியிலேயே நினைவிழந்து கீழே விழுந்துவிட்டான். ராமன் தந்தையிடம் ஓடி வந்தான். பெண்கள் கூக்குரலிட்டார்கள். எங்கும், "ஹா ராமா!" என்ற சத்தமே கேட்டது. ராமன், சீதை, லட்சுமணன் மூவரும் மன்னனைத் தாங்கி அழுதுகொண்டே அவனைக் கட்டிலில் தூக்கி வைத்தார்கள். சற்று நேரமானதும் மன்னனுக்கு மூர்ச்சை தெளிந்தது; ராமன் கை கூப்பி, "காட்டுக்குப் புறப்பட விடை கொடுக்கவேண்டும்" என்றான்.

தசரதன், "நான் கைகேயியின் வரத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன். நீ என்னை அடக்கி விட்டு அயோத்திக்கு அரசனாக இரு" என்றான். ஆனால் ராமன், "நீங்கள் ஆயிரக்கணக்கான வருஷமாக ஆண்டு வருகிறீர்கள். எனக்காகப் பொய் சொல்ல வேண்டாம். நான் பதினாலு வருஷம் காட்டில் சுற்றிவிட்டு வந்து தங்கள் காலில் விழுந்து வணங்குவேன்; வருத்தப்படாதீர்கள். பரதனுக்கே ராஜ்யத்தைக் கொடுங்கள். என் தாய் கைகேயி சொன்னபடி காட்டுக்குப் போக இசைந்துவிட்டேன். தந்தையின் சொல்லை மீறமாட்டேன். பழமும் கிழங்கும் தின்று மலை, அருவி, குளம் இவைகளைக் கண்டு இன்பமாக வாழ்வேன்" என்றான்.

தசரதன் சோர்ந்து போய் ராமனைத் தழுவிக்கொண்டான்; பிறகு நினைவிழந்து விட்டான். சுமந்திரனும் மூர்ச்சையானான்; பிறகு தெளிந்தெழுந்து கோபத்தோடு கைகேயியை இகழ்ந்து பேசலானான். கைகேயி கொஞ்சங்கூடக் கலங்கவே யில்லை.

தசரதனும் சற்று நேரங் கழித்து நினைவடைந்து பெருமூச்சு விட்டபடி சுமந்திரனைப் பார்த்து, "சதுரங்க சேனை, வாத்தியம் இவைகளோடு எல்லாரும் புறப்பட்டு என் மகன் ராமனோடு காட்டுக்குப் போகட்டும். பரதன் அயோத்தியை ஆளட்டும்" என்றான்.

இதைக் கேட்டதும் கைகேயி திகிலடைந்து விட்டாள்; "ஜனங்கள் இல்லாத ராஜ்யத்தைப் பரதன் ஆளமாட்டான். அப்போப் பட்ட ராஜ்யம் யாருக்கு வேண்டும்! ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்? உங்கள் வம்சத்தைச் சேர்ந்த சகரர் தம் மூத்த மகனான அசமஞ்சனை விரட்டவில்லையா? அவனைப் போல் ராமனும் போகட்டுமே!" என்று வெட்கம் இல்லாமல் சொன்னாள். இதைக் கேட்டதும் தசரதன் வெறுப்புற்று அவளைப் பலவாறாக இகழ்ந்தான். அங்கே கூடியிருந்த எல்லாரும் கைகேயியின் சொல்லைக் கேட்டு வெட்கினார்கள்; ஆனால் அது அவளுக்குத் தெரிந்தால்தானே?

பிறகு ராமன் வணக்கத்தோடு, "அரசே, உலகபோகத்தை வெறுத்துக் காட்டில் வாழப்போகும் எனக்கு யானை, சேனை, பரிவாரம் எல்லாம் எதற்கு? ஒன்றுமே வேண்டாம். மரவுரி, மண் வெட்டி, கூடை இவைகளைக் கொண்டு வரச் சொல்லுங்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் கைகேயி தானே துளிகூட வெட்கமின்றி மரவுரிகளைக் கொண்டு வந்து, "கட்டிக்கொள்" என்று சொல்லி ராமனிடம் கொடுத்தாள். ராமனும் உடனே அவைகளை வாங்கிக்

கொண்டான். தான் அணிந்த மெல்லிய வஸ்திரங்களை அகற்றி மரவுரியை அணிந்தான். கைகேயி கொண்டு வந்த மரவுரியைப் பார்த்ததும், வலையில் அகப்பட்ட பெண் மான் போல் சீதை நடுங்கினாள். கண்களில் நீர் சுரக்கத் தன் கணவனை நோக்கி, "காட்டில் வசிக்கும் முனிவர்கள் எப்படி இதை உடுத்துக்கொள்கிறார்களோ, தெரியவில்லையே!" என்று திகைப்புடன் சொன்னாள். ஒரு மரவுரியைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு மற்றொன்றைப் பிரித்து அதைக் கட்டிக்கொள்ளும் வகை அறியாமல் வெட்கி நின்றாள். உடனே ராமன் தானே அதை எடுத்து அவளுடைய பட்டாடையின் மேல் உடுத்தினான். இதைக் கண்டு அங்கே இருந்த பெண்கள் எல்லாரும் கண்ணீர் உகுத்தார்கள்; "ராமா, உன் தந்தை இவளைக் காட்டுக்குப் போகும்படி சொல்லவில்லையே! நீ லட்சுமணனோடு போ. உனக்குப் பதில் சீதையை யாவது பார்த்து மனசைத் தேற்றிக்கொள்ளலாம் என்று இருந்தோமே! காட்டில் முனிவர்களைப் போல் இவள் வாழ முடியாதே! எங்களுடைய இந்தக் கோரிக்கையை மட்டும் தட்டாதே!" என்று மிகவும் வருத்தத்தோடு கேட்டுக்கொண்டார்கள். வசிஷ்டர் கைகேயியிடம், "குலத்தைக் கெடுக்க வந்தவளே, நீ அரசனை ஏமாற்றுவதோடு நில்லாமல் அளவுக்கு மீறிப் போகிறாயே! சீதை காட்டுக்குப் போகவேண்டியதில்லை. கிருகஸ்தனுக்கு மனைவி ஆத்மா போன்றவள். ஆகவே, ராமனுக்குப் பதில் சீதை ஆளட்டும். சீதை போனால் நாங்களும் புறப்பட்டு விடுவோம். பரத சத்துருக்னர்களும் மரவுரி உடுத்து ராமனோடு காட்டில் வசிக்க வந்துவிடுவார்கள். பாழடைந்த இந்த இடத்தை நீயே ஆள். தந்தை கொடுக்காத ராஜ்யத்தைப் பரதன் ஏற்கக் கூடாது; வம்ச சரித்திரத்தை அறிந்தவன் பரதன்; அதற்கு மாறாக நடந்துகொள்ள மாட்டான். கைகேயி, ஜனங்கள் மட்டுமல்ல; பாம்பு, பசு, பறவை, மரங்கள் கூட ராமனோடு புறப்பட்டு விடும்; நீயே பார்க்கப் போகிறாய்!" என்று சொல்லிச் சீதை மரவுரி உடுப்பதைத் தடுத்தார்.

சீதை இப்படி அநாதைபோல் நிற்பதைக் கண்டு ஜனங்கள் எல்லாரும் துக்கம் தாங்காமல் கதறி அழுதார்கள்; தசரதனை இகழ்ந்தார்கள். தசரதன் மறுபடியும் கைகேயியைப் பார்த்து, "இந்தக் கொடுமை ஏன்? சீதை உனக்கு என்ன தீங்கு செய்தாள்?" என்று சொல்லித் தலை குனிந்தபடி இருந்தான்.

ராமன் தந்தையைப் பலவிதமாகத் தேற்றி விடை கொடுத்தருளும்படி கேட்டுக்கொண்டான்.

ஆபீஸ் பையன்

முதலாளி: பையா, இங்கே வேலை செய்கிறபோது, சீட்டியடிக்கக் கூடாது. என்ன, தெரிகிறதா?

ஆபீஸ் பையன்: அது சரிங்க, எஜமான். இப்ப நான் வேலை செய்யவில்லை; சும்மா இருக்கிறேன்.

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

சிங்கப்பாட்டி உபதேசம்

கிளீலாண்டு ஸ்காட்

ஆப்பிரிக்கக் காட்டில் உள்ள ஒரு சிங்கம் தன் பேத்திகளுக்கு உபதேசிப்பது போல, சிங்கங்களின் பழக்க வழக்கங்களை விளக்குகிறது இந்த ரசமான கட்டுரை.

பெரிய வேட்டைக்காரர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெருமை எல்லாருக்கும் கிடைக்காது. உனக்கு அது வேண்டுமென்றால், எவனாவது வேட்டைக்காரன் உன்னைப் பார்த்துச் சுட்டிருக்க வேண்டும். பெரிய முதலாளியோ, காட்டிலாகா அதிகாரியோ எவனாவதுதான் அப்படி வந்து சுடுவது வழக்கம். உணவில் எல்லாருக்கும் நியாயமான பங்கு கிடைக்கவேண்டும் என்று விலங்குகளாகிய நாம் பாடுபடுகிறோம். இது பிடிக்காமல் அவர்கள் நம்மைச் சுட வந்து விடுகிறார்கள். சிங்கம், புலி ஆகிய நம் இனத்தாரைப்பற்றிய மட்டில், ஆட்டு மாட்டு இறைச்சி, ஆப்பிரிக்க மக்கள் விளைக்கும் சோளம் இரண்டையுமே முற்றும் தின்கிறோம். பேரன், பேத்திகளான சிங்கக் குட்டிகள் இருக்கிறீர்களே, உங்களுக்கு ஏதோ கிழவி சொல்லுகிறேன்; கவனமாய்க் கேளுங்கள்: நீங்கள் சௌக்கியமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்க வேண்டும்; ஆனால், மனிதர்களுக்கு உங்களைப்பற்றிக் கேட்டாலே உண்மையில் பிடிக்கக் கூடாது-இதற்குத் தான் நான் உபாயம் சொல்லுகிறேன்.

என் கண்ணே எல்ஸி, நீ முதல் முதல் செய்யவேண்டிய காரியம் என்ன தெரியுமா? உனக்கு ஒரு வயசு ஆனதும், ஓர் ஆண் சிங்கத்தைப் பிடித்துக்கொள். முடிந்தால் சற்று வாலிபப் பிள்ளையாகவே பார்த்துப் பிடி. வேறு பெண் சிங்கத்திடம் பற்றில்லாத பிள்ளையாக இருப்பது நல்லது. ஆனால், ஒன்று: பின்னால் வேறு பெண்ணை, உன் புருஷன் நாடக் கூடும். அதைச் சட்டை பண்ணாதே. இந்த ஆண் மிருகங்களுக்கே அது இயல்பு.

எல்லா ஆண் மிருகங்களுமே சற்று முட்டாள்கள்தான்; சிங்கங்களும் இதற்கு விலக்கல்ல. சட்டுச் சட்டென்று ஒரு பெண்ணிடம் காதல் கொள்ளுவதும் பிறகு அவளைக் கைவிடுவதும் ஆண்களுக்குச் சகஜம். என்றாலும், அவர்கள் கொண்ட பெண்களைப் பாதுகாக்கத் தவறுவதில்லை. எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டு, விவாக ரத்தும் ஜீவனாம்சமும் கோரத் தொடங்கி விடாதே!

என்றாலும், ஒரு விஷயம் உனக்குக் கொஞ்சம் எரிச்சலாகத்தான் இருக்கும். ஒரு விலங்கை நீ உன் கையால் கொன்றிருப்பாய். உன் புருஷனைப் போலவே உனக்கும் நல்ல பசியாகத்தான் இருக்கும்.

மூலம்: பம்பாய் கிரானிக்கிள் வீக்லி (ஆங்கிலம்: 25-3-'51), பம்பாய்.

அதோடு இரண்டு மூன்று குட்டிகளுக்கு வேறு நீ பால் கொடுத்துக் கொண்டும் இருப்பாய். இத்தனை இருந்தும், ஊணுக்கு உன் புருஷனே முந்திக்கொள்ளுவான். வயிறு சம்பந்தப்பட்டமட்டில், 'எனக்குப் பிறகே உனக்கு' என்பதுதான் ஆண்களின் சூத்திரம்.

ஒரு புருஷனை நீ பிடித்துக் கொண்ட பிறகு, காட்டிலே சில காலம் செழிப்பாயிருக்கும்; சில காலம் வறட்சியாயிருக்கும். வறட்சியான காலங்களில், ஆப்பிரிக்க ஜனங்களின் ஆடுமாடுகளைத்தான் போய்க் கவரவேண்டும். ஆனால், ஜாக்கிரதை: யோசிக்காமல் எவன் மந்தையிலும் போய்க் கை வைத்து விடவேண்டாம். ஒருவனைப்போல் மற்றொருவன் இருக்கமாட்டான்.

உன் புருஷனுடன் ஆலோசித்து நீ ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும்: 'போமா' என்ற முள்வேலி அடைப்புக்குள் கால்நடைகளின் மந்தை இருக்கும். நீ, உன் புருஷன் இரண்டு பேருக்குள் கால் நடைகளை மிரட்டி வெளியே கிளப்புவது யார்? அவற்றை உண்மையிலேயே கொல்வது யார்? இந்த விஷயத்தை நிச்சயித்துக் கொள்ளவேண்டும். நீயோ உன் புருஷனே அந்த வேலியடைப்புக்குள் புகுந்தும் கால்நடைகளைக் கொன்று வெளியே இழுத்துவரலாம். ஆனால், இது மகா உபத்திரவமான காரியம்; இதனால் அநாவசியமாக உங்கள் தொப்பையிலோ, பாதத்திலோ முள் குத்தி வலி ஏற்படும்.

உனக்கு எவ்வளவு பசியாயிருந்தாலும் சரிதான்: முள்ளம் பன்றியை மாத்திரம் ஒருபோதும் கொல்ல முயலாதே! ஒரு முள்ளம் பன்றியிடம் பால் குடித்துக்கொண்டிருந்த அதன் குட்டியை என் தோழி எலிஸா ஒரு சமயம் இப்படித்தான் இழுக்கப் பார்த்தாள். அப்போது முள்ளம் பன்றியின் இரண்டு முட்கள் அவளுடைய முன்னங்கால் துடையில் பாய்ந்து விட்டன. அதற்குப் பிறகு இரண்டு மாதகாலம் அவள் விந்தி விந்தி நடந்தாள். முள்ளம் பன்றியின் முட்கள் நம் தோலுக்குள் புகுந்து முறிந்து புரையேறி வேதனை தரும்.

காட்டெருமையையும் நீ அண்டாதே! காட்டெருமைக் கன்றைக் கூடத் தொடவேண்டாம். கிழச் சிங்கமான ஜோ என்ற என் சிநேகிதன் ஒருவனுக்கு ஒரு வேட்டையும் ஒரு நாள் கிடைக்கவில்லை. என்ன வந்தாலும் சரி என்று துணிந்து ஆண் எருமை ஒன்றை ஜோ தாக்கினன். அதைக் கொல்லவும் கொன்று விட்டான். ஜோவுக்கு ஜயந்தான். ஆனல் அந்த எருமைக்குச் சில கஜ தூரத்தில் இவனும் செத்துக் கிடந்தான்.

'போமா' என்ற வேலி அடைப்புக்குள் இருக்கும் கால்நடைகளை மிரட்டி வெளியே கிளப்ப இனி வழி சொல்லுகிறேன்: எந்தத் திசையிலிருந்து அந்த வேலி அடைப்பை நோக்கிக் காற்று அடிக்கிறதோ அந்தத் திசையிலே நீயும் போ. வேலி அடைப்புப் பக்கமாகச் செல். முதலில் மெதுவாகவும், பிறகு வேலி அடைப்பு நெருங்க நெருங்க வரவர உரத்தும் கர்ஜனை புரி. கால்நடைகளுக்கு உன் கர்ஜனை கர்ணகடோரமாயிருக்கும். அந்த முட்டாள் விலங்குகளால் இதைச் சகிக்க முடியாது. அவை வெறித்து அலங்கோலமாய் வேலி அடைப்பை விட்டு வெளியே ஓடிவரத் தொடங்கும். தன் திசையில் வரும் கால்நடைகளில் ஒன்றை, உன் புருஷன் கவ்

விப் பிடித்துக் கொல்லுவான். நீயும் ஒன்றின்மீது பாய்ந்து கொல்வதிலும் தவறில்லை.

அப்புறம் உங்களுக்கு இரண்டு வழிகள் உண்டு: சில காலம் கழித்து அதே வேலி அடைப்புக்கு நீங்கள் திரும்பவும் செல்வது ஒரு வழி; அந்த அடைப்பில் உள்ள கால்நடைகளில் பாதியை இந்தத் தடவையே கொன்று விடுவது மறு வழி. இரண்டாவது வழியைக் கடைப்பிடித்தால், நீங்கள் கொன்ற தீனியை எல்லாம் காட்டிலே மரங்கள் அடர்ந்த மறைவிடம் ஒன்றுக்கு உடனே இழுத்துச் சென்றுவிடவேண்டும். இல்லாவிட்டால், கழுகுகள் வந்து அதைக் கொத்திக்கொண்டு போய்விடும். மறைவிடத்தில் தீனியைக் கொண்டு போய்ச் சேர்த்த பிறகும், நீயோ, உன் புருஷனோ அதை எப்போதும் காவல் செய்துகொண்டேயிருக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், அகம்பாவம் பிடித்த ஏதாவது கழுதைப்புலி வந்து உங்கள் தீனியை அபகரித்து விடும்.

ஒரே மந்தைக்கு நீங்கள் திரும்பத் திரும்ப அடிக்கடி போகக் கூடாது. போனால் அந்தச் சனியன் பிடித்த காட்டிலாகா அதிகாரிகள் உங்களை வேட்டையாட வந்துவிடுவார்கள். எந்தப் பக்கத்திலிருந்து வருகின்றன என்று உங்களுக்குத் தெரியாமலே துப்பாக்கி ரவைகள் புற்றீசல் போல் திடீரென்று பறந்துவந்து உங்கள் மீது பாய்ந்துவிடும். இப்படித்தான் ஒரு புருஷனை நான் இழந்துவிட்டேன்.

இப்போது நீ ஒரு கேள்வி கேட்கலாம்: "பல மைல் தூரத்துக்கு வேறு கால்நடைகளே இல்லை; நானோ சில குட்டிகளுக்குப் பால் வேறு கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி வைத்துக்கொள்வோம். இந்த நிலையில் என்ன செய்வது?" என்று கேட்பாய். அதற்கும் ஒரு வழி இருக்கிறது. எப்போதும் போல் புத்தம் புதிய மாட்டிறைச்சியையே தின்றுகொண்டு அப்போதும் நீ வாழ முடியும். ஓரிடத்தில் வழக்கம் போலவே மந்தையில் புகுந்து கால்நடை ஒன்றைக் கொன்று தின்ன வேண்டும். பிறகு, அந்த இடத்தை விட்டுக் குறைந்த பட்சம் பத்து மைல் தூரத்துக்கு அப்பால் ஓடிவிடவேண்டும். இள இள என்று புல் வளர்ந்த பத்தையிலோ, கரடு முரடான கல் செறிந்த தடத்திலோ செல்ல வேண்டும். அப்போதுதான் உன் அடிச்சுவடு பூமியில் பதியாது. இதற்குப் பிறகு பழைய இடத்துக்குத் திரும்புவதுபற்றிக் கனவிலும் நினைக்காதே. திரும்பினால், உன்னைத் துப்பாக்கியால் சுட்டோ, உனக்கு விஷம் வைத்தோ கொன்றுவிடுவார்கள். ஜாக்கிரதை!

அபாயம் நிறைந்த வாழ்க்கையில் உனக்கு ஆசை என்றால்தான், நீ இங்கே குடியிருக்கும் வெள்ளைக்காரர்களின் கால்நடை மந்தையில் கை வைக்கலாம். அவர்கள் பயங்கரமான ஆசாமிகள். மகா மோசமான சூழ்ச்சிகளையெல்லாம் கையாளக் கூடியவர்கள். கீழே குழி பறித்துக்கொண்டு அதிலே அவர்கள் ஒளிந்துகொண்டிருப்பார்கள். உன் கண்ணுக்கு இது ஒன்றும் தெரியாது. உனக்கு எவ்விதமான சந்தேகமும் ஏற்படாது. அடிவானத்துக்கு எதிரே 'ஸிலுவெட்' என்ற மொத்தை உருவப் படம் போல் நீ நிற்பதைப் பார்த்துக் குறி தவறாமல் அவர்கள் சுட்டுவிடுவார்

கள். வேறு சிலர் மரங்களின்மீது பரண் அமைத்துப் படுத்துக் கொண்டு, டார்ச்சு விளக்கின் உதவியால் உன்னைக் குறி பார்த்துச் சுட்டுவிடவும் கூடும்.

புல் பத்தையின்மீது எந்த விலங்கு கிடந்தாலும் அதைத் தின்னலாமா என்று அன்றொரு நாள் என்னைக் கேட்டாய். தின்னவும் தின்னலாம்; தின்னாமலும் இருக்கலாம். இது அந்த அந்த இடத்து நிலைமையைப் பொறுத்து முடிவு செய்யவேண்டிய விஷயம். வெள்ளைக்காரர் வேட்டையாடுவதற்கென்றே சில இடங்களை ஒதுக்கி வைத்திருப்பார்கள். அங்கெல்லாம் நமக்கு இரையாகக் கூடிய விலங்குகளுக்கு விஷம் வைத்துப் போட்டிருக்க மாட்டார்கள். எப்படியானாலும் சரி; புல் பத்தையில் இப்படிக் கிடக்கும் விலங்குகளைத் தின்றபிறகு, பொழுது விடியும் வரையில் ஓடிக்கொண்டே இரு. வெகு தூரம் ஓடிவிடு. மறுபடி அஸ்தமிக்கும் வரைக்கும் அந்த இடத்துக்குத் திரும்பவே திரும்பாதே.

மேலே சொன்னேனே, இந்த மாதிரி வேட்டைக் கோஷ்டி ஒன்றை நான் ஒருமுறை வேடிக்கை பார்த்து விழுந்து விழுந்து சிரித்திருக்கிறேன். அவர்களுடைய வேட்டைக் காட்டிலே புகுந்து வயிறு நிறைய இரை தின்றுவிட்டு ஒரு சிறு குன்றுக்கு நான் ஓடி விடுவது வழக்கம். அதன் மேல் இருந்துகொண்டு பார்த்தால், சுற்றிலும் பல மைல் தூரம் கண்ணுக்குத் தெரியும். சாம்பல் போல் முகம் வெளுத்த இரண்டு பேர் தென்படுவார்கள். அவர்களில் ஒருவனே வெள்ளைக்கார வேட்டையாடி. அவன் மற்றவனுக்கு வழி காட்டிக்கொண்டு முன்னால் வருவான். அந்த மற்றவன் தான் முதலாளி.

முதலாளிக்குப் பின்னால் ஆப்பிரிக்கச் சுதேசிகள் இரண்டு பேர் வருவார்கள். அவர்களிடம் ரைபிள் என்ற சிறு துப்பாக்கிகளும் புகைப்படம் பிடிக்கும் காமிராக் கருவியும் இருக்கும். 'நானே தனியாக இந்தச் சிங்கத்தைக் கொன்றேன்' என்று காட்டக்கூடிய விதமாக முதலாளி படம் பிடித்துக்கொள்ள வேண்டுமே; இதற்காகவே அந்தக் காமிரா! வேட்டைக் களத்துக்கு வந்த பிறகுதான், அந்த இரண்டு வெள்ளைக்காரர்களும் சுதேசிகளின் பெருஞ் சுமைகளைத் தாங்கள் வாங்கிக்கொள்ளுவார்கள். உலகத்துச் சுமையையெல்லாம் தாங்களே தாங்கிக்கொண் டிருப்பதாக இந்த வெள்ளைக்காரர் சொல்லுகிறார்களே, அது இவ்வளவுதான்; சுத்த ஹம்பக்! வேட்டையாடியும் முதலாளியும் ஒரு புதருக்குப் பின்னே ஒளிந்துகொள்வார்கள். சுதேசிகள் சற்று எட்டிப் போய்விடுவார்கள். கொழுத்த கோவேறு கழுதை ஒன்றோ, ஒரு பெரிய மானோ ஏற்கனவே விழுந்து கிடந்து காணமற் போன ஓர் இடத்துக்குச் சிறிது தூரத்திலே உள்ள ஒரு புதரிலேயே அந்த வெள்ளைக்காரர்கள் இப்படிப் பதுங்கியிருப்பார்கள்.

அந்த இடத்துக்கு நம் இனத்தவர் வரும்போது, வேட்டையாடி சுடுவான். வேட்டையாடி சுடக்கூடாது, தாங்களே சுடவேண்டும் என்று முதலாளி சொல்வதும் உண்டு. நம் இனத்து ஆண்களை வேட்டையாடிகள் கொல்லாமல் காயப்படுத்துவதோடு நின்றுவிட்டால், அவர்கள் பாடு ஆபத்துத்தான். நம் புருஷர்கள் பெருங்

கோழைகள். என்றாலும், தங்களை அடித்தவர்மீது அவர்கள் பழி தீர்த்துக்கொள்வதில் தீரர்கள். வேட்டையாடிகளில் புத்திசாலி யான சிலர் நம் இனத்துப் பெண் களைப் பார்த்துச் சுட்டுவிடுவார்கள். அப்போது பார்க்கவேண்டுமே நம் ஆண் சிங்கங்களை! 'செத்தேன், பிழைத்தேன்' என்று ஓட்டம் பிடித்துவிடுவார்கள்.

உண்மையில் இந்த வேட்டைக் கோஷ்டிகளின் செயலெல்லாம் நமக்கு வெகு தமாஷாய் இருக்கும். இது கிடக்கட்டும். என் கிழவர் ஒரு சமயம் பெரிய யானை ஒன் றுடன் சண்டை போட்டாராம். அந்தக் கதையைக் கேட்டபோது, என்னால் சிரித்து மாளவில்லை.

ஆனால் அதை உனக்கு இன் னொரு நாள் சொல்லுகிறேன். என் தோழி எடித் இருக்கிறாளே, அவளுடைய குட்டிகளுக்கு நான் தேகப்பயிற்சி செய்து வைக்க வேண்டும். நாழிகை ஆகிறது. போய் வருகிறேன். கடைசியில், என் கண்மணிகளே, உங்களுக்கு ஒரு விஷயம்மட்டும் சொல்லு கிறேன்: இந்த இரண்டுகால் பிராணிகள் இருக்கின்றனவே, இவற்றைப்பற்றிப் பிரமாதமாய் நீங்கள் சட்டை செய்யவேண்டாம். அதிலும் இந்தக் காமிரா வைத்துக் கொண்டிருக்கிறார்களே, இவர்கள் மகா அப்பாவிகள்.

கிளிப் பிள்ளை விமரிசனம்!

முந்தின நாள் இரவு நாடகம் நடந்து முடிந்தது. அதில் நடித்த முக்கிய நடிகை மறுநாள் காலை படுக்கையில் சாய்ந்தபடி அன்றைத் தினசரிகளில் அந்த நாடகத்தைப்பற்றி வெளியான விமரிசனத்தைப் படித்துக்கொண் டிருந்தாள். அநேகமாக எல்லாத் தினசரிகளிலும் அவளைப் பாராட்டியே எழுதியிருந் தார்கள். ஆனால் ஒன்றில் மட்டும், 'அந்த அம்மாளின் நடிப்பு மகா மோசம்' என்று எழுதியிருந்தது.

உடனே நடிகை அந்த நாடகத்தை எழுதிய ஆசிரியருக்குப் 'போன்' செய்து, "இந்தப் பயல் எழுதியிருக்கிறதைப் பார்த் தீர்களா?" என்று ரோஷத்தோடு விசாரித்தாள்.

அவர், "அதைச் சட்டை செய்யாதீர்கள். இந்த விமரி சகனுக்குச் சொந்தமாக ஒன்றும் தெரியாது. கிளிப் பிள்ளை மாதிரி ஊரில் உள்ளவர் பேச்சையெல்லாம் கேட்டு அப்படியே எழுதியிருக்கிறான்" என்று சமாதானப்படுத்தினர்.

—'பாயிண்ட் டி வியூ', பாரிஸ்.

சிறுவனின் எச்சரிக்கை

ஒரு நாள் பெண்மணி ஒருத்தி வீட்டுக்குப் போய்க்கொண் டிருந்தபோது ஒரு பையன் ரஸ்தாவிலே சைக்கிள் விட்டுக் கொண்டிருந்ததைக் கண்டாள். அந்தச் சைக்கிளிலே தொங்கிய அட்டையில் எழுதியிருந்த எச்சரிக்கை இது: "அபாயம்! - புது டிரைவர்."

—'திஸ் வீக் மகஸீன்'

விவேகானந்தர் -- வாழ்வும் வாக்கும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷ ரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது

நாஸ்திகரின் பக்தி: விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் போய் இந்து தர்மத்தைப் பரப்பியதற்குத் தமிழர் அளித்த ஊக்கமே காரணம். ஆரம்ப நாளில் தீர்த்த யாத்திரையின்போது அவர் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். அப்போது அவருடைய கம்பீரமான தோற்றத்தையும் முக வசீகரத்தையும் கண்டு பண்டிதர் பாமரர், ஏழை பணக்காரர் எல்லாருமே அவரிடம் பக்தி செலுத்தினர்கள். அவருடைய அபாரமான வடமொழிப் புலமையையும் ஆங்கில அறிவையும் கண்டு



சென்னையில் இருந்த அறிஞர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்.

அந்த நாளில் சென்னையிலுள்ள காலேஜ் ஒன்றில் சிங்காரவேலு முதலியார் என்று ஒரு புரொபஸர் இருந்தார். அவர் பிரபல நாஸ்திகர். அவரோடு தர்க்கம் செய்ய யாராலுமே முடியாது. "இந்த இளந் துறவியைப் பார்த்துப் பேசி இவரைத் தர்க்கத்தில் வென்று வருகிறேன், பார்" என்று சொல்லிக் கொண்டு ஒரு நாள் முதலியார் தாமாகவே விவேகானந்தரைக் காண வந்தார். நாஸ்திகராக இருந்தாலும் மட்டு மரியாதை தெரிந்தவர் முதலியார். அதனுல் ஒழுங்கான முறையிலேயே தர்க்கம் செய்ய ஆரம்பித்தார். முதலில் விவேகானந்தர் அவர் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். பிறகு சிரித்த முகத்தோடு ஒவ்வொரு கேள்விக்கும் ஆணித்தரமாகப் பதில் அளித்தார். முதலியார் இப்படி நேரும் என்று எதிர்பார்க்கவேயில்லை. சற்று நேரம் வரையில் திகைத்திருந்



தார். விவேகானந்தர் உடனே முதலியாரை நெருங்கி அவரை அன்போடு தழுவிக்கொண்டார். அந்த ஒரே நிமிஷத்தில் முதலியார் அடியோடு மாறிவிட்டார். அதுமுதல் விவேகானந்தரின் சிறந்த பக்தரானார். பின்னால் விவேகானந்தரிடமே சந்நியாசம் ஏற்றுச் சமூகத்தொண்டில் ஈடுபட்டார். முதலியாரின் அறிவுத் திறனை விவேகானந்தர் வீணாக்கவில்லை: 'பிரபுத்த பாரதம்' என்று ஒரு மாதப்பத்திரிகை ஆரம்பித்து அதன் ஆசிரியராக அவரை அமர்த்தினார். —(வாழ்வு)

புகழ்பெற்ற பிரசங்கம்: சர்வ மத மகாநாட்டில் கலந்துகொள்ள விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். அங்கே போய்ச் சேர்ந்த கொஞ்ச நாளில் அவர் எதிர்பாராத அளவுக்குச் செலவு ஏற்படவே கையில் இருந்த பணம் முழுதும் ஆகிவிட்டது. அவர் தங்க இடம் இல்லாமல் தவித்தார். அவர் காஷாயம் தரித்துத் தெருவில் திரிவதைக் கண்டு அங்கிருந்த ஜனங்கள், 'இதேதடா அதிசயப் பிராணி!' என்று முதலில் ஆச்சரியப்பட்டார்கள். கையில் பணம் இருந்தபோதுகூட அமெரிக்க ஒட்டல்காரர்கள் அவரை ஏமாற்றி அவரிடமிருந்து இரண்டு மடங்காகப் பணம் வசூலித்தார்கள். மகாநாடு கூட இன்னும் சிலமாதகாலம் ஆகும் என்று தெரிந்தது. 'இனி யாரை அண்டி இந்த ஊரில் பிழைப்பது?' என்று அவருக்குப் புரியவில்லை. கடைசியில் பாஸ்டன் நகரில் சொற்ப வருவாயில் ஜீவிக்க முடியும் என்று கேள்விப்பட்டார். அங்கே போய்ச் சேர்ந்தார். ஒரு நாள் ஹார்வர்டு சர்வகலாசாலையைச் சேர்ந்த ரைட் என்ற புரொபஸர், விவேகானந்தரைத் தற்செயலாகப் பார்த்தார். அவருடைய வாக்கு வன்மையைக் கண்டு புரொபஸர் பிரமித்துப் போனார்; விவேகானந்தரின் யோகாப்பியாச மகிமையை உணர்ந்து அவருடைய நெருங்கிய நண்பரானார். சர்வமத மகாநாட்டில்விவேகானந்தர் கலந்துகொள்வதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் புரொபஸர்தான் செய்து உதவினார். 1893 செப்டம்பர் 11 - ஆம் தேதி மகாநாடு ஆரம்பமாயிற்று. பிரம்மசமாஜம், ஜைன மதம், பிரம்மஞானம் இவைகளைப் பற்றிப் பேச வந்திருந்தவர்கள் சிறந்த பிரசங்கிகள் என்று பெயர் எடுத்தவர்கள். அவர்கள் பேசி முடித்ததும், தலையில் காஷாய முண்டாசும் உடம்பில் காஷாய அங்கியுமாக விவேகானந்தர் பேச எழுந்தார். அங்கே ஏராளமான மக்கள் கூடியிருந்ததை அப்போதுதான் அவர் கவனித்தார். என்ன பேசுவதென்றே முதலில் புரியவில்லை. இருந்தாலும் தம் இஷ்ட தெய்வத்தின் நாமத்தைச் சற்றுத் தியானித்துவிட்டு, "அமெரிக்கச் சகோதர சகோதரிகளே" என்று ஆரம்பித்தார். உடனே சபை முழுதும் ஒரே கைதட்டலும் சந்தோஷ

ஆரவாரமும் கேட்டன. சில நிமிஷங்கள் வரையில் ஆரவாரம் அடங்கவேயில்லை. முதலில் விவேகானந்தருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'ஒரு வேளை நம்மை ஏளனம் செய்கிறார்களோ?' என்றுதான் எண்ணினார். ஏனென்றால், அதுவரையில் புரொபஸரைத் தவிர வேறு யாரும் அவரோடு நெருங்கிப் பேசியதில்லை. ஆனால் இரண்டொரு நிமிஷத்தில் ஆரவாரம் அடங்கி அவர்கள் ஆவலோடு தம்மைக் கவனிப்பதைக் கண்டதும் அவருக்கு உற்சாகம் பிறந்தது; "இப்படி நீங்கள் மனப்பூர்வமாக என்னை வரவேற்றதற்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்" என்று சொல்லித் தங்கு தடை இல்லாமல் இந்து மதத்தின் உட்கருத்துக்களைத் தெளிவாகவும் அழகாகவும் விளக்கினார். இது முடிந்ததும் எல்லாரும், "இவருடைய பிரசங்கந்தான் சிறந்தது" என்று கொண்டாடினார்கள். மறு நாள் அமெரிக்கத் தினசரிகளிலெல்லாம் அவருடைய படமும் பிரசங்கமும் வெளியாயின. ஒரே நாளில் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டார் விவேகானந்தர்!

—(வாழ்வு)

பெண்களும் ஞானமும்: "பெண்கள் ஞானம் பெறத் தகுதியற்றவர்கள் என்று எந்தச் சாஸ்திரத்திலும் சொல்லவில்லை. பிற்காலத்தில் சிலர் இப்படி எழுதிவைத்திருக்கலாம். வேத உபநிஷத காலங்களில் பெண்மணிகள் பிரம்மத்தைப்பற்றி வாதித்ததாக வருகிறதே; மற்ற முனிவர்களுக்கு அவர்கள் எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை என்று இதிலிருந்தே தெரியவில்லையா? யாக்ஞவல்கியரைப் பெரிய சபை ஒன்றில் கார்க்கி தர்க்கத்துக்கு அழைத்தாள். அந்த முனிவர் தர்க்கத்தில் சிறந்தவர்தான்; இருந்தாலும் கார்க்கி பெண்பிள்ளைதானே என்று அவளை அவர் அவமதிக்கவில்லை. அவரைப்போல் நாமும் இனிப் பெண்களுக்கு மதிப்புக் கொடுத்தால் அவர்கள் மறுபடியும் சிறந்த ஞானிகளாய் விளங்குவது நிச்சயம்."—(வாக்கு)

பிறருக்கு உபதேசம்

வெகு கண்டிப்பாகப் பிறருக்கு உபதேசம் செய்பவர்களைக் கண்டால் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்குப் பிடிக்காது. அவர் ஒரு சமயம், "மற்றவருக்கு உபதேசம் செய்பவனைக் கண்டால், 'இவன் இதை விட்டு, தேனீக்களுடன் போராடுகிறவனைப் போல் செயல் புரிந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்' என்ற எண்ணமே என் மனத்தில் உண்டாகிறது" என்றார்.

—பென் பங்க்

நாடெங்கும் வனமகோற்சவம் நடந்ததே; மரஞ் செடி களிலே சிலவற்றின் குணங்களை அறிவது நல்லதில்லையா?

மரமும் செடியும்

'எம்'

இப்போது நாட்டில் மர வளர்ப்பில் கவனம் குறைந்துவிட்டது. ஆனால் எங்கெங்கே எந்த எந்த வகையான மரம் நடலாம் என்பது குடியானவர்களுக்குத் தெரிந்த விஷயந்தான். ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுகிறது. புன்க மரம், வேம்பு, வாதநாராயணம், ஆல், அரசு, கல்யாண முருங்கை முதலியவை நிழல் தருபவை. எருக்கு, ஆவாரை, சீமை ஆவாரை, ஆடாதோடை முதலிய செடிகளின் பசுந்தழை உரமாகப் பயன்படும். தேக்கு, கருங்காலி, கொறுக்காய்ப் புளி, கருவேல், சவுக்கு ஆகியவை பெட்டி, மேஜை, நாற்காலி முதலிய தட்டு முட்டுச் சாமான்கள் செய்யவும் எரிக்கவும் உபயோகமாகும்.

புன்க மரம்: புன்க மரத்தைச் சாலையின் இரு புறங்களிலும் நடலாம். உலர்ந்த புன்கங் காய்களை உடைத்து விதைகளைக் குழிகளில் புதைக்க வேண்டும். விதைகள் பதினைந்து நாட்களில் முளை காணும். மூன்று மாதம் ஆனதும் இந்த நாற்றுக்களை எடுத்து வேறிடத்தில் நடலாம். புன்கஞ் செடிகள் இரண்டு வருஷத்தில் நன்றாக வளர்ந்து வருஷத்தில் இருமுறை பசுந்தழை உரம் கொடுக்கும். புன்கங் காயிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். இதன் பிண்ணாக்கு எருவாகும்.

வேம்பு: வேப்பமரம் வளர மூன்று நான்கு வருஷமாகும். என்றும் பசுமை குன்றாத மரங்களில் இதுவும் ஒன்று. மேஜை, நாற்காலி செய்ய உதவும். வேப்பங் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். பிண்ணாக்கை எருவாகப் போடலாம். வேரை அரைத்துப் பல மருந்துகள் செய்யலாம். முற்றிய மரத்திலிருந்து கோந்து கிடைக்கிறது. குஷ்டரோகத்தைத் தீர்ப்பதற்கு இது எடுத்தது. நிழல் கொடுப்பதற்கும் பசுந்தழை உரத்துக்கும் பேர் போனது.

சீமை ஆவாரை: இது அடர்ந்து வளரும். விதைகளை நட்டே வளர்க்கலாம். சத்துள்ள பசுந்தழை உரம் கொடுக்கும்.

ஆடாதோடை: நாற்று நட்டு இதை வளர்க்கவேண்டும். இதை ஆடு தின்னாது. ஒன்பது மாதத்தில் பசுந்தழை உரம் கொடுக்கிறது. இலை பல மருந்துகளுக்கு உபயோகமாகும்.

தேக்கு: நாற்று வேண்டுமென்றால் காட்டிலாகா அதிகாரிகளிடம் வாங்கிக்கொள்ளலாம். மரச்சாமான்கள் செய்வதற்கு மற்ற எல்லா மரங்களையும்விடத் தேக்கு உயர்ந்

மூலம்: பிரக்ருதி (தெலுங்கு), விஜயவாடா.

தது. அதனல் இதை ஏராளமாகப் பயிராக்க வேண்டும்.

கருங்காலி: இதுவும் மரச் சாமான்கள் செய்யச் சிறந்தது.

நாவல் மரம்: சிறு தொட்டிகளில் விதை முளைவிட்டு நாற்ருனபின் அதை எடுத்து நடவேண்டும். என்றும் பசுமையாக இருக்கும் மரங்களில் இதுவும் ஒன்று. மரச் சாமான் செய்ய உபயோகமாகும். நாவல் பழம் ருசியாக இருக்கும். புளிப்பு நாவல் பழம் வாய் அருசியைப் போக்கும்.

கருவேல்: கருவேல மரத்தின் உபயோகம் நம் விவசாயிகள் எல்லாருக்கும் தெரிந்ததே. வண்டியும் கலப்பை முதலிய உழு படைகளும் செய்வதற்கு இது முதல் தரமானது. மரத்தைத் துண்டுகளாக வெட்டி வேலிகளுக்கு நடலாம். கறவை மாடுகளுக்கு இந்தக் காய்களை உணவாகக் கொடுத்தால் நல்ல பால் தரும்.

புளிய மரம்: புளியம் விதைகளைத் தொட்டிகளில் நட்டுச் செடிகள் முளைத்து ஆறு மாதத்துக்குப் பின் வேரில் ஒட்டிய மண்ணேடு பறித்து வேறு இடத்தில் நட்டால் நன்ருக வளரும். குழிகளில் விதைகளை நட்டு வளர்ப்பது சரியல்ல. இதன் உபயோகம் எல்லாருக்கும் தெரிந்ததே. புளியம் விதைகளைப் பன்றிகள் தின்னும். புளியம் விதைகளை வறுத்துக் குத்தி, ஓர் இரவு ஊற வைத்துச் சிலர் சாப்பிடுகிருர்கள். பசுந்தழை யாகவும் சரி, உதிர்ந்த இலையாகவும் சரி, இது உரமாகப் பயன்படும்.

மா மரம்: விரைவில் பலன் தர வேண்டுமானல் நாட்டு மா வகைகளே சிறந்தவை. நட்ட ஐந்தாறு வருஷங்களுக்குள்ளே காய்க்கத் தொடங்கும். செடிகளை நட்டால் அக்கறையாகப் பாதுகாக்க வேண்டும். செடிகளின் விலையும் அதிகம். மாங்கொட்டைகளைச் சேகரித்துக் குழிகளில் நட்டு, நாற்றுக்களை ஆறு மாதத்துக்குப் பின் வேறோர் இடத்தில் நடவேண்டும்.

பலா மரம்: வாய்க்கால் கரைகளிலும் தோட்டங்களிலும் காலி மனைகளிலும் இதை வளர்க்கலாம். என்றும் பசுமையாய் இருக்கும் மரம் இது. பலாப்பழத்தின் ருசி தெரிந்ததுதானே? இதனல் லாபமும் உண்டு. மரச்சாமான் செய்யப் பலா மரம் உபயோகமாகும். இலைகளைத் தைத்துச் சாப்பிட உபயோகிக்கலாம். புதிய பலாக் கொட்டைகளைச் சிறு தொட்டிகளில் நட்டுச் செயற்கை உரம் போட்டு வளர்க்கலாம். தொட்டிகளுக்குக் காலையிலும் மாலையிலும் தண்ணீர் ஊற்ற வேண்டும். செடிகளை வெகு நாட்கள் வரையில் தொட்டியிலே வைக்கக் கூடாது. வேறிடத்தில் நடும்போது ஆணி வேருக்கு அடிபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோய்யா மரம்: நாற்ருகவோ பதியமாகவோ வேர் விட்ட செடியாகவோ இதை நடலாம். கொய்யா மரம் வெயில் மழைகளுக்கு ஈடு கொடுக்கும் உறுதி உடையது. விதைகள் இல்லாத கொய்யாப் பழத்துக்கு நல்ல கிராக்கி உண்டு. கொய்யா பிறந்ததே விசாகபட்டணம், கோதாவரிப் பிரதேசந்தான். நட்ட மூன்று வருஷங்களில் இது காய்க்கத் தொடங்கும். அக்கறையாகக் கவனிக்காவிட்டாலும் இது வளர்ந்து விடும். பெரிய தோட்டங்கள் போடும்போது பதியங்கள் நடுவதே சிறந்த வழி.

சபோடா: பதியம் போட்டும் நட்டும் இதை வளர்க்கலாம். செடிகள் நட்டால் காய்க்கப் பத்து வருஷம் செல்லும். பதியம் போட்டால் நாலைந்து வருஷத்தில் காய்க்கும். குடியானவர்கள் சபோடா மரங்களை ஏராளமாகப் பயிராக்க முடியாமல் ஓர் அசௌகரியம் உண்டு; இந்தப் பழம் நீடித்து நிற்காததால் அருகிலேயே விலையாகக்கூடிய வசதி வேண்டும். பழங்களைப் பாதுகாக்கும் பாக்டரிகள் அருகில் இருந்தால் சபோடா நல்ல லாபம் தரும்.

பப்பாளி: இதன் விதைகளைச் சிறு தொட்டிகளிலோ சற்று உயர்வாகக் கட்டிய பாத்திகளிலோ நட்டு நாற்ருன பின் அரை அடிக்கு மேல் வளர்ந்ததும், எடுத்து நடவேண்டும். பப்பாளியில் ஆண் ஜாதி அவ்வளவு லாபம் கொடுக்காது. சாதாரணமாகக் காய்களில் காம்பின் பக்கம் விதைகள் இருக்கும் பழம், பெண் வகை என்று சொல்வார்கள். ஆரம்பத்தில் செடிகளின் அடிப்புறத்தில் தளிர்க்கும் இலைகளைக் கிள்ளி எறிந்துவிட வேண்டும். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும்போது வேரில் படாமல் ஊற்றவேண்டும். அஜாக்கிரதையாக இருந்தால் செடிக்கு அழுகல் நோய் பற்றிக்கொள்ளும். முறையாக நல்ல உரம் போட்டால் சரியானபடி பலன் தரும். அருகிலேயே விலையாகக்கூடிய வசதி இதற்கும் இருக்கவேண்டும். பப்பாளிப் பாலிலிருந்து 'பாப்பெயின்' என்ற மருந்து ஒன்றைத் தயாரிக்கிருர்கள். இது ஜீர்ண சக்திக்கு மிகவும் பயன்படும்.

நாரத்தை: நாரத்தை, எலுமிச்சை, கமலா இவைகளை ஒட்டுச் செடிகளாக வளர்க்கலாம். ஐந்து வருஷங்களில் காய்க்கத் தொடங்கும். நாரத்தைச் செடிகளை நட்ட பின் ஆறுமாதம் வரையிலும் எருவே போடக் கூடாது. செடிகளை நட்ட அன்றும் அதற்குப் பின் இரண்டு நாளும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் ஊற்ற வேண்டும். பிறகு ஒரு வாரம் வரைக்கும் தண்ணீர் ஊற்ற வேண்டாம். தினந்தோறும் தண்ணீர் ஊற்றுவதைவிடச் சில நாட்களுக்கு ஒரு முறை தாராளமாகத் தண்ணீர் ஊற்றுவது நல்லது.

இலைகளைத் தின்னும் பூச்சி புழுக்களை அவ்வப்போது கவனித்து எடுத்துவிட வேண்டும். இரண்டு சின்னச் செடிகளுக்கு ஒரு கூடை வீதம் சாண எருப் போடலாம். இரண்டு வருஷங்களுக்குப் பின் வேர்க்கடலைத் தூளும் எலும்புத் தூளும் போடலாம். ஆரம்ப தசையில் செடிக்கு 3 அவுன்ஸ் வீதம் அம்மோனியா ஸல்பேட் போட்டால் நன்ருக வளரும். இதோடு சாண எருவும் சேர்த்துக்கொள்ளலாம். பொதுவாகச் செடிகளைக் கத்தரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

நாரத்தை வகைத் தோட்டங்களில் இடைவெளிகளை உழுது பண்படுத்தி, வேர்க்கடலையையும் கேழ்வரகையும் பசுந்தழை உரத்துக்காகப் பயிர் செய்யலாம். சணல், நரிப்பயறு, காராமணி முதலிய பயிர்களையும் வளர்த்து எருவாக உழுதுவிட வேண்டும்.

வருஷந்தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் செடிகளுக்குப் பசுந்தழை உரம் போட வேண்டும். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். செடியின் தண்டைச் சுற்றி 2 அங்குலம் அகலத்துக்கு மண்

மேடு கட்டிவிட வேண்டும். செடிக்கு ஊற்றும் ஜலம் தண்டில் படக்கூடாது. அப்படிப் பட்டால் தண்டில் ஒருவகை நீர் கசியும்; பட்டை வெடித்து விடும்; தளிர் கருகிவிடும். காய்த்துப் பழுக்கும் நிலையில் எருவின் அளவை அதிகப் படுத்த வேண்டும். காய்க்கும் மரத்துக்கு மழைக் காலத்துக்கு முன் ஒரு தரமும் ஜனவரிக்கு முன் ஒரு தரமும் எருப் போட வேண்டும்.

அரச மரம்: கிளைகளை ஒடித்து நட்டாலே இது வேர் விட்டுத் தளிர்த்து விடும். இதன் இலைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகும்; எருவாகவும் பயன்படும். இளங் கொம்புகளிலிருந்து நார் உரித்து முரட்டுக் கயிறுகள் திரித்து உழவு முதலியவைகளுக்குப் பயன்படுத்தலாம். சாலைகளில் நிழலுக்காக நடும் மரங்களில் சிறந்தது இது.

ஆல மரம்: இது நீடித்து இருக்கக்கூடிய மரம். சாலைகளில் நிழல் தருவதற்கு முதல்தரமான மரம். ஆனால் இதை வீடுகளுக்குப் பக்கத்திலும் கொல்லைகளிலும் வளர்க்கக் கூடாது. முற்றிய விழுதுகள் பல வகை மரச் சாமான்கள் செய்யப் பயன்படும்.

ஆண்களின் மூன்று முட்டாள்தனம்

சமாதானவாதியான ஒரு கிழவி வேதாந்த மனோபாவம் கொண்டவள். ஆண்கள் மூன்று முட்டாள் தனங்கள் புரிவதாக அவள் எப்போதும் சொல்வது வழக்கம்.

முதல் முட்டாள்தனம் ஆண்கள் யுத்தம் புரிந்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொல்வது; பேசாமல் போதிய காலம் காத்திருந்தால், இயற்கையான சாவு வருகிறது. எதற்காக யுத்தத்தில் சாகவேண்டும்?

இரண்டாவது முட்டாள்தனம் ஆண்கள் ஒரு மரத்தில் ஏறி அதைக் குலுக்கிப் பழத்தை உதிர்ப்பது. பேசாமல் போதிய காலம் காத்திருந்தால் பழம் தானாகவே உதிர்கிறது. எதற்காக ஏறிக் குலுக்கிச் சிரமப்பட வேண்டும்?

மூன்றாவது முட்டாள்தனம் ஆண்கள் ஒரு பெண்ணைப் போய்த் துரத்துவது. போதிய காலம் காத்திருந்தால், அந்தப் பெண் தானாகவே இவர்களை வந்து துரத்துகிறாள். இவர்கள் ஏன் துரத்திக் களைக்கவேண்டும்?

—'ஹைவேஸ் அவ் ஹாப்பினஸ்'

சரியான தலைவன்

சரியான தலைவனுக்கு லட்சணம் சொல்ல வேண்டுமானால், ஓர் உபதேசியாரைத்தான் உதாரணமாகச் சொல்லவேண்டும். அந்த உபதேசியார் சொன்னது இது: "நான் எழுந்திருப்பேன், கூட்டத்தினருக்கு என்ன சொல்லப்போகிறேன் என்பதைச் சொல்வேன்; பிறகு நான் சொல்ல வந்ததைச் சொல்வேன்; அப்புறம் அதைத் திரும்பவும் சொல்வேன்; கடைசியில் நான் சொன்னது இன்னதென்று விளக்கிச் சொல்வேன்."

—'அவுட்ஸ்பான்,' தென் ஆப்பிரிக்கா.

கலைச் சொல்

விநோபா பாவே

எந்தப் பாஷையின் மூலம் கல்வி அளிப்பது என்பதைக் குறித்து வீண் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. உண்மையில் போதனைக்கு உதவும் சாதனம் பாஷையல்ல; செயலே. பாஷை தெரியாதபோதிலும் தாகமெடுத்த மனிதன் தன் அவதியைப் பிறருக்குத் தெரிவிக்க முடியும்.

நம் பாஷைகளுக்குச் சக்தியில்லை என்கிறார்களே! எந்த விஷயத்தை வெளியிடுவதற்கு அவைகளுக்குச் சக்தியில்லை? விஞ்ஞானத்தைத்தானே? இந்த விஞ்ஞானத்தின் சோதனைகளைக் கையினால் செய்ய வேண்டுமே தவிர, வாய்ப் பேச்சால் அல்ல. அப்படியானால் எங்கே சிரமம் தோன்றக்கூடும்?

இந்தக் கலைச் சொல் இருக்கிறதே இதை இவர்கள் பெரிய பூச்சாண்டியாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஞானமாயினும் சரி, விஞ்ஞானமாயினும் சரி, கலைச் சொல்லிலே அடங்கி விடவில்லை. அநுபவம் முதலில் தோன்ற, அதை வெளியிடுவதற்கு உதவும் கலைச் சொல், பிறகு அமைகிறது. நிதர்சனமான செயல், அநுபவத்தை நேருக்கு நேரே தருகிறது. நிதர்சனமான செயலின் மூலமாகவே ஒன்றைச் செய்வதென்பது சாத்தியம். ஒன்றைச் செய்யும்போது சொல்லையும் கையாளுகிறோம்.

இப்போதைக்குச் சிறிது காலம் வரையில் ஆங்கிலக் கலைச் சொற்களையே கையாண்டு வருவதனால் ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டு விடாது. 'ஹைட்ரொஜன் என்பதைக் குறிப்பிட உத்ஜன் என்பதா? உத்ரஜன் என்பதா? வேறு ஏதாவது சொல்லை உபயோகிப்பதா?' என்பது தீர்மானமாகும் வரையில் ஹைட்ரொஜன் என்றே சொல்லிவருவோமே. இதனால் நம் பாஷைக்குத் தீங்கு ஒன்றும் நேர்ந்து விடாது; அதன் அழகு கெட்டுப் போகாது. சுயராஜ்யத்தில் சிறிது காலத்துக்கு மவுண்ட்பாட்டன் தலைமை வகிக்கலாம் என்றால், நம் பாஷையில் மட்டும் ஹைட்ரொஜன் ஏன் செலாவணியாகக்கூடாதோ தெரியவில்லை! அதற்கு வாரிசான சொந்தச் சொல் வரும்போது, அது தானாகவே விலகிப் போய்விடும்.

—'கதர் மலர்', திருப்பூர்.

பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களில் 4½ லட்சம் பேர் வசிக்க இவை அமைந்து வருகின்றன.

புதிய நகரங்கள்

★

பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டது. இடம் பெயர்ந்தோர் குடியிருப்பதற்கு என்றே தனியாகப் பல நகரங்களைச் சர்க்கார் அமைக்கப்போகிறார்கள். இதன்படி 14 நகரங்கள் புதிதாகச் சிருஷ்டியாகும். 4,36,000 பேர் வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் இந்த நகரங்களில் இருக்கும். இந்தப் புதிய நகரங்களை எந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்தப் போகிறார்கள்? இவைகளுள் ஒவ்வொன்றிலும் உத்தேசமாக எவ்வளவு பேர் குடியிருக்கலாம்? இவற்றின் பெயர்கள் என்ன? இந்த விவரங்களைக் கீழே காணலாம்:

பிரதேசத்தின் பெயர்.	ஜனத்தொகை
போபால்:	
1. பைராகட்	15,000
பம்பாய்:	
2. உல்லாச நகர் (கல்யாண்)	1,30,000
3. குபேர நகர் (அகமதாபாது)	30,000
கட்ச்:	
4. காந்திதாம் (காண்ட்லா)	25,000
பஞ்சாபு:	
5. பரீதாபாது (குர்காம் ஜில்லா)	40,000
6. நீலோகேரி (கர்னல் ஜில்லா)	10,000
7. சண்டிகட் (அம்பாலா ஜில்லா)	60,000
பெப்சு:	
8. ராஜ்புரா	15,000
9. திரிபுரி (பாடியாலா)	6,000
ராஜஸ்தானம்:	
10. பிரதாப் நகர் (உதயபுரி)	20,000
உத்தரப் பிரதேசம்:	
11. கோவிந்தபுரி (மோதி நகர்)	30,000
12. அஸ்தினாபுரி (மீரத் ஜில்லா)	10,000
மேற்கு வங்காளம்:	
13. ஹப்ரா பைகாச்சி (கல்கத்தாவுக்கு அருகே)	40,000
14. புலியா (நதியா ஜில்லா)	5,000
	4,36,000

இந்தியாவைப் பிரித்ததும் மேற்குப் பஞ்சாபிலிருந்து பலர் கிழக்குப் பஞ்சாபுக்கு ஓடிவந்தார்கள். அங்கேயே அவர்கள் நிலையாகத் தங்கிவிட்டார்கள். ஆனால் சிந்து, பகவல்பூர், எல்லைப்புற மாகாணம் இவைகளிலிருந்து ஓடிவந்தவர்கள் தாங்கள் பிறந்த மாகாணங்களையே விட்டு விட்டு இந்தியாவில் வேறு இடங்களைத் தேடிச் செல்லவேண்டியதாயிற்று. அவர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாக வாழ்வதற்கென்று தனி இடம் வேண்டியிருந்தது. அவர்களுக்காகப் பல புதிய நகரங்களை அமைக்க இந்திய சர்க்கார் முடிவு செய்தார்கள். சிந்திகளுக்கு என்றே 5 புதிய நகரங்களைக் கட்டி வருகிறார்கள். அவையே பைராகட், உல்லாச நகர், குபேர நகர், காந்திதாம், பிரதாப் நகர் என்பவை. இதைப்போலவே ராஜ்புரா, திரிபுரி என்னும் இரண்டு நகரங்களையும் பகவல்பூரிலிருந்து வந்தவர்களுக்காக அமைக்கிறார்கள். எல்லைப்புற மாகாணத்திலிருந்து வந்தவர்களுக்

மூலம்: ஓரியெண்ட் (ஆங்கிலம்: 28-1-'51), கல்கத்தா.

குப் பரீதாபாது என்ற நகரத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். மேற்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த பல இடங்களிலிருந்து வந்த பலர் சேர்ந்து பஞ்சாபிலும் உத்தரப் பிர தேசத்திலும் இருக்கும் மற்ற இரண்டு நகரங்களிலும் வசிப்பார்கள். இதே போலக் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த பலரும் மேற்கு வங்காளத்தில் புதிதாக அமையும் இரண்டு நகரங்களில் குடியேறுவார்கள்.

இடம் பெயர்ந்த மக்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே செய்துகொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள். இதன் பலனாகவே நீலோகேரி நகரம் அமைந்து வருகிறது. இந்த நகரம் டில்லியிலிருந்து வடக்கே 85 மைல் தூரத்தில் இருக்கிறது. இது கிராமத்துக்குக் கிராமம், பட்டணத்துக்குப் பட்டணமாகக் காட்சியளிக்கிறது. இந்த நகரத்தில், 10,000 பேர் சௌகரியமாக வாழ்க்கை நடத்தக் கூடிய வசதிகள் இருக்கின்றன. நீலோகேரி நகரம் பூர்த்தியாக அமையும் நிலையில் இருக்கிறது. பலவகைத் தொழிற்சாலைகள், தொழிற் பயிற்சிக் கூடங்கள், கோடைக்கல்வி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், அச்சுக்கூடம், ஹாஸ்டல், சினிமா, வாசகசாலை முதலிய பல வசதிகளும் இந்த நகரத்தில் இருக்கின்றன. இவ்வளவு வசதிகள் கொண்ட நீலோகேரி நகரத்தை அமைத்து முடிக்க, கிட்டத் தட்ட ஒரு கோடி ரூபாய் செலவாயிற்று.

எல்லைப்புறத்திலிருந்து வந்த மக்களின் முயற்சியால் நீலோகேரியைப் போலவே தோன்றிய மற்றொரு நகரம் பரீதாபாது. டில்லிக்குத் தெற்கே 18 மைல் தூரத்தில் இது அமைந்திருக்கிறது. இதில் 4,000 வீடுகளைச் சுறுசுறுப்பாகக் கட்டிவருகிறார்கள். 4 பள்ளிக் கூடங்கள், 4 பொழுதுபோக்கு நிலையங்கள், பெண்கள் வேலை செய்வதற்கான தொழிற்சாலை ஆகியவைகளைக் கட்டிவிட்டார்கள். ஓர் ஆஸ்பத்திரி, 5 சுகாதார ஸ்தலங்கள், 5 டிஸ்பென்சரிகள், ஓர் உயர்தரத் தொழிற்பயிற்சிப் பள்ளிக்கூடம் இவைகளைக் கட்டுவதற்கான வேலை மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது. தண்ணீர் வசதிக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன. சாக்கடை அமைக்கும் வேலையும் பாதி முடிந்துவிட்டது. தொழிற்சாலைகள், கிணறுகள், தெரு விளக்குகள் இவைகளுக்கு வேண்டிய மின்சாரத்தை விநியோகிக்க 300 கிலோவாட் பவர் தரும் தாற்காலிக பவர் ஸ்டேஷன் ஒன்றும் அமைத்திருக்கிறார்கள். இடம் பெயர்ந்த சுமார் 4,000 பேர் இந்த நகர நிர்மாண வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் நிரந்தரத் தொழிற்சாலைகளுக்கென்று 400 ஏகரா நிலத்தைச் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள்.

பகவல்புரிலிருந்து வந்தவர்களுக்காக அமைத்துவரும் ராஜ்புரா நகரத்தில், இப்போது 2,500 வீடுகள் தயாராகி இருக்கின்றன. தவிர 300-க்கு மேற்பட்ட கடைகளையும் கட்டியிருக்கிறார்கள். தண்ணீர் வசதிக்காகக் குழாய்க் கிணறுகள் இரண்டு வெட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 140 கைப்பம்புகள் தினந்தோறும் வேலை செய்கின்றன. பல விதத் தொழில்களை 400 பேருக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய பெரிய தொழிற்பள்ளிக்கூடம் ஒன்றையும் அமைத்திருக்கிறார்கள். நகரத்து மக்களுக்கு வேறு வேலைகள் தரு



வதற்காகப் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் போகிறார்கள். இதற்கு வேண்டிய நிலங்களை நான்கு தொழில் பிரமுகர்களுக்குச் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள்.

பழைய கராச்சியின் வசதிகள் கொண்ட புதிய நகரமொன்றை, சிந்துவிலிருந்து வந்தவர்களுக்காக அமைத்து வருகிறார்கள். இந்த நகரத்துக்குக் காந்திஜியின் ஞாபகார்த்தமாகக் காந்திதாம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். கட்ச் வளைகுடாவின் ஒரு மூலையில் கடற்கரையோரமாக உள்ள காண்ட்லாவுக்கு அருகில் இந்த நகரம் இருக்கிறது. காண்ட்லா பெரிய துறைமுகமாக மாறிக்கொண்டிருக்கிறது. கடற்கரையிலிருந்து உள்நாட்டில் 170 மைல் தூரத்தில் இருக்கும் டெஸ்ஸாவுக்கும் காண்ட்லாவுக்கும் இடையே ரெயில் பாதை போடுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். டில்லியிலிருந்து காண்ட்லாவுக்கு உள்ள தூரம் டில்லிக்கும் பம்பாய்க்கும் இருப்பதைவிட 210 மைல் குறைவு. ராஜஸ்தான், பஞ்சாபு, பெப்சு, டில்லி, உத்தரப் பிரதேசத்தின் சில பாகங்கள் இந்த இடங்

களுக்குக் காண்ட்லா துறைமுகம் சமீபமாக இருக்கிறது. எனவே இந்தப் பிரதேசங்களின் இறக்குமதி, ஏற்றுமதிச் செலவுகள் குறையும். காந்திதாம் நகர நிர்மாணம், காண்ட்லா துறைமுக விஸ்தரிப்பு, காண்ட்லா-டெஸ்ஸா ரெயில்பாதை இணைப்பு ஆகிய இந்த வேலைகளைச் செய்து முடிக்க ரூபாய் 20 கோடி செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

பாண்டவர்களின் தலைநகரமான அஸ்தினாபுரத்துக்குச் சமீபமாக 1,000 ஏகரா நிலத்தில் புதிய அஸ்தினாபுரத்தையும் கட்டப்போகிறார்கள். இந்த நகரத்துக்கு அருகே கங்கா காதிர் விவசாயக் காலனி இருப்பது அஸ்தினாபுரத்துக்கு மிகவும் வசதியாக இருக்கும். 10,000 மக்கள் சௌகரியமாக இருப்பதற்கு ஏற்ற வசதிகளை இந்த நகரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 300 கிலோவாட் சக்தி ஸப்ளை செய்யக்கூடிய பவர் ஸ்டேஷன் ஒன்று ஏற்கனவே கட்டி முடித்தாயிற்று. இந்த நகருக்கு வேண்டிய தண்ணீர் வசதி, சாக்கடைத் திட்டம், ரோடுகள், பள்ளிக்கூடங்கள், டிஸ்பென்சரி முதலியவைகளைக் கட்டுவதற்கான திட்டங்களும் தயாராகி விட்டன.

இடம் பெயர்ந்து வந்தவர்களுக்காகக் கட்டிய நகரங்களுக்குள் இந்தியாவிலேயே மிகப் பெரியது உல்லாச நகர். இந்த நகரம் பம்பாய்க்கு 40 மைல் தூரத்தில் உள்ள கல்யாண் என்ற இடத்துக்குச் சமீபத்தில் இருக்கிறது. இதில் உடனடியாக லட்சம் பேர் வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் இப்போது அமைந்திருக்கின்றன. மேலும் ஒன்றரை லட்சம் பேர் குடியேறத்தக்க வசதிகளைப் பின்னால் அமைக்கப் போகிறார்கள். இந்த நகரத்தின் நிலப்பரப்பு 3,000 ஏகரா.

மேற்கு வங்காளத்தில் நதியா ஜில்லாவில் புல்லா என்னும் ஒரு நகரத்தைக் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களுக்காகச் சர்க்கார் அமைத்து வருகிறார்கள். பஞ்சாபில் உள்ள நீலோகேரி நகர அமைப்பை ஒட்டியே இந்த நகரமும் உருவாகி வருகிறது. சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் 15,000 மக்களின் வியாபாரமெல்லாம் காலக்கிரமத்தில் இந்த நகரத்தின் மூலமே நடைபெறும். இதை நிர்மாணிக்கும் வேலை 1950-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் தொடங்கி விட்டது. இதன் கட்டிட வேலைகளுக்காக 1,000 ஏகரா நிலத்தை வாங்கினார்கள். இந்தப் பிரதேசத்தில், தொழிற்சாலைகளுக்காக எட்டுக் கொட்டகைகளும் மற்ற வேலைகளுக்காக 25 கொட்டகைகளும் அமைத்திருக்கிறார்கள். இப்போது இங்கே இருக்கும் மக்களுக்காகச் சில தொழிற்சாலைகளைச் சிறிய அளவில் ஆரம்பித்திருக்கிறார்கள். 250 பேர் வேலை கற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தொழிற் பள்ளிக்கூடமும் தொடங்கியிருக்கிறார்கள்.

பக்தரின் இயல்பு

மலர்களுக்கு வெளியே தேனீ ரீங்காரமிடுகிறது. மலருக்குள் இருக்கும்போதோ அது சத்தம் செய்யாமல் தேனைக் குடிக்கிறது. பக்தர்களின் இயல்பும் இதுவே. —ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ரூஸ்வெல்ட்டின் வெற்றி ரகசியம்

★

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்ட் 1923-இல் நியூ யார்க் கம்பெனி ஒன்றில் பிரதான உத்தியோகஸ்தராக இருந்தார். அப்போது பாரமௌண்ட் பிக்சர்ஸ் என்ற பிரபல ஸினிமாக் கம்பெனிக்கு ஒரு கதை எழுதவேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. அதன் முதலாளிக்கு ஒரு கடிதம் எழுதினார். மிஸ் ஜேன் வெஸ்ட் என்பவள்தான் இந்த மாதிரி கதைகளை அந்த ஸினிமாக் கம்பெனியில் பரிசீலனை செய்வது வழக்கம். முதலாளி, "இப்போது அதை எடுத்துக்கொள்வது சாத்தியமில்லை, ஜேன். ஆனால் பெரிய இடத்தைச் சேர்ந்தவரானதால் ஏதாவது சாக்குச் சொல்லி மழுப்பிவிடுங்கள்" என்றார்.

முதல் தடவை ரூஸ்வெல்ட்டை ஜேன் பார்க்கப் போனபோது அவர் உற்சாகமாக, "என் கதை விஷயம் என்ன?" என்று விசாரித்தார். அதற்கு ஜேன், "முன்னதாகவே திட்டம் போட்டு விடுகிறோம். அதனால் இதை எப்போது எடுப்பது என்று யோசித்துத்தான் சொல்லவேண்டும்" என்று மழுப்பினாள். மூன்று மாத காலம் இப்படிச் சொல்லிக்கொண்டே வந்த ஜேன், கடைசியில் ஒரு நாள் உண்மையைச் சொல்லிவிட்டாள். ரூஸ்வெல்ட்டுக்கு ஒரே வருத்தம். அப்படியே குன்றிவிட்டார்.

பிறகு அமெரிக்கக் கப்பற்படை அதிகாரியான காப்டன் வால்டன் என்பவரை ஜேன் மணந்துகொண்டாள். பதினைந்து வருஷம் கழித்து ரூஸ்வெல்ட் இரண்டாம் முறை ஜனாதிபதியாக வந்தபோது காப்டன் வால்டனைக் குடும்பசகிதம் ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார். அப்போது, ஜேனை அடையாளங் கண்டு கொண்டார். க்ஷேமம் விசாரித்துவிட்டு ரூஸ்வெல்ட் சிரித்தபடி, "அந்தக் கதையை எழுதிப் பெரிய எழுத்தாளனாக வேண்டுமென்று எனக்கு அப்போது ஆசை. நீங்கள் அது வேண்டாம் என்று சொன்னபோது என் வாழ்வே இருண்டு விட்டதாகத்தான் எனக்குப் பட்டது" என்றார்.

"ஆனால் அந்த ஸினிமாக் கம்பெனியார் அதை எடுத்துக் கொள்ளாமற்போனோமே என்று இப்போது மிகவும் வருத்தப்படுகிறார்கள்" என்றாள் ஜேன்.

"இருக்கலாம். ஆனாலும் அதிலிருந்து, 'நம் முயற்சி தோற்றாலும் அதோடு நம் வாழ்வு தீர்ந்துவிடப் போவதில்லை. போனதை மறந்து புதிய துறையில் வெற்றி பெறப் பின்னும் அதிகமாக ஊக்கம் செலுத்த வேண்டும்' என்ற முக்கியமான விஷயத்தைத் தெரிந்துகொண்டேன். என் கதையை மட்டும் அவர்கள் எடுத்துக்கொண் டிருந்தால் இப்போது நானும் நீங்களும் அரசாங்க மாளிகையில் இப்படிப் பேசிக்கொண் டிருக்க முடியுமா?" என்று தமாஷாகச் சொல்லிச் சிரித்தார் ரூஸ்வெல்ட்.

—ஆதாரம்: 'காரொனெட்.'

வழி வழி வந்த வசனநடை : 16

திருவிளக்குத் தர்மம்

★

இலக்கியங்களின் உரைகளில் அமைந்த வசனநடை இலக்கியச் சுவை உடையதாகவே இருக்கும். ஆனால் பேசும் தமிழ் தெளிவாய், சுற்றி வளைக்காமல் நேரே கருத்தைப் புலப் படுத்தும். பழங்கால வசனநடைக்கு உதாரணம் பல உண்டு; ஆனால் பேச்சு நடைக்கு உதாரணமே இல்லை. இந்த இரண்டுக்கும் இடையே பெரும்பாலும் பேச்சு வழக்கைத் தழுவிய வசனம் ஒன்று உண்டு. அதுவே சாஸனங்களில் வரும் தமிழ். காலத்துக்குக் காலம் சாஸனத் தமிழ்நடையும் வேறுபட்டு வந்திருக்கிறது.

கீழே வருவது திருப்பதியிலுள்ள சாஸனங்களில் ஒன்று; கி. பி. 1013 முதல் 1045 வரையில் ஆட்சி புரிந்த ராஜேந்திர சோழன் காலத்தது. அக்காலத்தில் சோழனுடைய ஆட்சிக்குள் அமைந்த தமிழ்நாட்டைச் சார்ந்திருந்தது திருப்பதி.

சிலா சாஸனம்: ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது நாள் அதிகாரி கொற்றமங்கலமுடையான், செயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெருமபாணப்பாடி திருவேங்கடக் கோட்டத்துக் குடவூர் நாட்டுத் தேவர் தேவதானம் திருச்சுகனூரில் நாம் விட்ட விட்டிலில் முன்பு கொட்டிலிலேயிருந்து கோயிற்காரியம் ஆராய்ந்த இடத்து, குடவூர் நாட்டுவகை செய்கிற சிறுதனத்துப் பணிமகன் கடப்பங்குடையானையும் திருவேங்கடத் தேவர் கன்மிகளையும் அழைத்துத் திருவேங்கடத் தேவர் ஸ்ரீமுகந்தப்படி உள்ளன சொல்லுங்கோளென்று வினவின இடத்து, இத்தேவர் தேவதானம் திருமுண்டியத்து ஸபையார் பல கல்வெட்டின்படி பொன் கைக்கொண்டு, கற்பூரவிளக்கு ஒன்று உட்படக் கட்டக்கடவ திருநுந்தா விளக்கு 24. இவையிற்றுள் இவர்கள் எரித்துவரும் திருவிளக்கு இரண்டு நீக்கி இத் திருமுண்டியம் குடி பற்றுமையில், திருச்சுகனூரில் அகப்பட்ட முதலுக்கு உடைய பொன் 20 கழஞ்சும், இவர்கள் இத் தேவர்க்குப் பரிசாரகம் செய்து தேவர்

பண்டாரத்தில் உடைய பொன் 3 கழஞ்சும் ஆகப் பொன் 23 கழஞ்சும், இவர்கள் கடவர்கள் கன்மிகளுக்கு முட்டாமல் நிசதப் படியோமே கூட எண்ணெய் கட்டித் திருமிலக்கு ஏற்றி எரிப்பிக்கக் கடவர்களாக நிமந்தம் செய்க என்று அதிகாரி கொற்றமங்கலம் உடையான் சொல்ல, இப்பரிசு திருமுண்டியத்து ஸபையார் கடவ திருநந்தா விளக்குக்கும், இவர்களுடைய பொன் 23 கழஞ்சும் இத்தேவர் பண்டாரத்துக்கு முதலாக்கிக்கொண்டு, இத்தேவர் பண்டாரத்துக்குத் திருமிலக்கு ஏற்றி, திருநந்தா விளக்கும் கற்பூரவிளக்கு ஒன்றும் உட்படத் திருவிளக்கு, திருவேங்கடத் தேவர்க்கு ஸ்ரீ காரியம் செய்வாரும் தேவகன்மிகளுமே சந்திராத்தித்தவரை எரிப்பதாக நிவந்தம் செய்தது ஸ்ரீவைஷ்ணவர்களோம்.

குறிப்பு: ராஜேந்திர சோழன் அரசாளத் தொடங்கிய பின் ஏழாவது ஆண்டில் இந்த சாஸனம் வைஷ்ணவர்கள் பலர் சேர்ந்து வெட்டச் செய்தது. சோழ அரசனுடைய அதிகாரியாகிய கொற்றமங்கலமுடையான் என்பவன் ஒருகொட்டிலில் இருந்து கோயில் காரியங்களெல்லாம் சரிவர நடைபெறுகின்றனவா என்று விசாரித்தான். திருவேங்கடமாகிய திருப்பதி குடவூர் நாட்டைச் சார்ந்தது. திருவேங்கடத்தைச் சார்ந்த திருச்சுகனூர் என்ற ஊரில் (இப்போது திருச்சானூர் என்று வழங்குவது) இந்த விசாரணை நடைபெற்றது. அந்தப் பகுதியின் சிறிய அதிகாரியாகிய கடப்பங்குடையான் என்பவனையும், வேங்கடேசப்பெருமாள் திருக்கோயிலைச் சார்ந்த ஊழியக்காரர்களையும் அழைத்துப் பெருமாளுக்குரிய கட்டளைகள் எவையென்று சொல்லுங்கள் என்று கொற்றமங்கலமுடையான் கேட்டான். திருவேங்கடப் பெருமாளுக்குரிய ஊராகிய திருமுண்டியம் என்ற ஊரில் உள்ள சபையினர் அவ்வக்காலத்தில் பொன்னைப் பெற்றுக்கொண்டு திருப்பதிப் பெருமாளுக்கு இருபத்து நான்கு விளக்கு எரித்து வருவதாகப் பல சாஸனங்கள் இருந்தன. அந்த இருபத்துநான்கு விளக்குகளில் கற்பூர விளக்கு ஒன்று. விசாரணையில் இப்போது இரண்டே விளக்குகள் எரிப்பதாகத் தெரியவந்தது. உடனே அங்கே உள்ள பொன்னையெல்லாம் தொகுத்துப் பார்க்கையில் திருச்சுகனூரில் 20 கழஞ்சுபொன் அகப்பட்டது. அந்தச் சபையினர் வேங்கடேசப் பெருமாள் திருக்கோயிற் கருவூலத்தில் மூன்று பொன் வைத்திருந்தார்கள். இந்த 23 கழஞ்சு பொன்னையும் கொண்டு திருப்பதிக்கு 24 விளக்குகளை ஏற்றும்படி ஏற்பாடாயிற்று. சந்திரனும் ஆதித்தனும் உள்ள வரையில் இந்த அறம் நடக்கவேண்டும்.

எப்போது படிப்பது?

உங்களிடம் ஏராளமாகப் புத்தகங்கள் இருக்கலாம்; ஆனாலும் அவைகளில் எதைப் படிப்பது என்றும், எல்லாவற்றையும் படிக்க நேரமில்லையே என்றும் திகைப்பீர்கள். இதோ சொல்லியிருக்கும் சில யோசனைகளின்படி நடந்தால் பல புத்தகங்களைப் படிக்க நேரம் கிடைக்கும், பாருங்கள்:

1. அதிகமாகப் பேசாதீர்கள்.

2. வெளியே புறப்பட்டுப் போகும்போது கூடவே பையில் ஒரு புத்தகமும் எடுத்துக்கொண்டு போங்கள்.

3. இரவு படுக்கப் போகும்போது தலையணைக்கு அடியில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொள்ளுங்கள். தூக்கம் வராவிட்டால் அப்போது அதை எடுத்துப் படியுங்கள்.

4. தினந்தோறும் காலையில் வழக்கத்தைவிடப் பத்துப் பதினைந்து நிமிஷத்துக்கு முன்னால் எழுந்து ஏதாவது புத்தகம் படியுங்கள்.

5. வீட்டில் சாதாரணமான சில்லறைக் காரியங்கள் செய்யும் போது கையில் ஒரு புத்தகம் இருப்பது நல்லது.

6. சந்திக்கக் குறித்த நேரத்தில் சிலர் வரத் தவறுவார்கள்; அந்த மாதிரி சமயங்களில், கையில் தயாராக ஒரு புத்தகம் இருந்தால் வீண் பொழுது போக்காமல் ஏதாவது படிக்கலாம்.

7. சாமான் வாங்கக் கடைகண்ணிக்கோ சலூன் முதலிய இடங்களுக்கோ போகும்போது கையில் ஒரு புத்தகம் இருந்தால் நல்லது. அங்கே கிடக்கும் பழைய பத்திரிகைக் குப்பைகளைக் கிளறி வீண் பொழுது போக்காமல் இருக்கலாம்.

8. காரில் போகும்போது, நெருக்கமான தெருவில் வண்டிகள் போகாதபடி ஏதாவது தடை ஏற்படலாம். காரில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுப் பழுது பார்க்கவேண்டி யிருக்கலாம். இந்த மாதிரி சமயங்களில் கைக்குக் காவலாக ஒரு புத்தகம் இருப்பது நல்லது.

9. எங்காவது பிரயாணம் போவதாக இருந்தால் கட்டாயம் ஒரு புத்தகம் கையில் இருக்கவேண்டும். உங்களோடு வரும் பிரயாணியைக் கண்டால் அருவருப்பு ஏற்படலாம்; அப்போது புத்தகத்தில் கவனம் செலுத்திவிடலாம்.

10. பீரோவில் ஏராளமான புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பவரைவிட எப்போதும் கையிலே ஒரு புத்தகம் வைத்திருப்பவரே மேல்.

—லிடியா லியான் ராபர்ட்ஸ்

சிறுகதை:

ஒத்திகை

ரவீந்திரநாத் டாகூர்

****

இந்த அமரகவி பிறந்த நன்னாளை மேமீ 5-ஆம் தேதியன்று உலகம் முழுவதிலும் கொண்டாடுவார்கள். கருத்தும் கவிச்சுவையும் நிரம்பிய இந்தக் கதையை விசேஷ அநுமதி பெற்று வங்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் த. நா. சேனாபதி.

****

போர் முனையிலிருந்து தூதன் கொண்டு வந்த செய்தி திருப்திகரமாக இல்லை. மன்னன் கவலையோடு அரண்மனை உத்தியான வனத்தில் உலாவப் போனான். மதில் சுவர் ஓரமாக ஒரு மரத்தடியில் ஒரு பையனும் பெண்ணும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். மன்னன் அவர்களை நெருங்கி, "என்ன விளையாடுகிறீர்கள்?" என்று விசாரித்தான். அவர்கள், "ராம சீதா வனவாச ஆட்டம்" என்றார்கள்.

மன்னன் அங்கேயே உட்கார்ந்துவிட்டான். பையன் உடனே, "இதுதான் தண்டகாரணியமாம். நான்தான் ராமனும். இங்கே ஒரு பர்ணசாலை கட்டிக்கொண்டிருக்கிறேன்" என்று சில உடைந்த சுள்ளிகளையும் கொஞ்சம் பசும் புல்லையும் காட்டினான். அந்தப் பெண் இரண்டொரு பச்சிலையை வைத்துக் கொண்டு விளையாட்டு அடுப்பில் நெருப்பை ஊதிச் சமைப்பது போல் பாவனை செய்தாள்.

மன்னன் தமாஷாக, "அது சரி; ராட்சசர்களைக் காணோமே?" என்றான்.

பையனுக்கும் அது குறை என்றுதான் பட்டது. மன்னன், "சரி. நான்தான் ராட்சசனும். இனிமேல் விளையாடலாம், வாருங்கள்" என்றான். பையன் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அப்படியானால் நீ என்கிட்டத் தோற்றுப் போகவேண்டுமே?" என்றான்.

மன்னன், "இதுதானே? பிரமாதம்! எத்தனை தடவை வேண்டுமானாலும் நான் தோற்றுப் போகத் தயார்!" என்றான். அன்று பத்துத் தடவைக்குக் குறையாமல் மன்னன் ராட்சசனாக வந்தான்; பையனும் அவனை ஒவ்வொரு தடவையும் 'கொன்று' தீர்த்துவிட்டான். மன்னன் திணறினான்.

திரேதா யுகத்தில் பஞ்சவடியில் பட்சிகள் கூவின மாதிரியே இன்றும் கூவின. காலையொளியும் அன்று போலவே இன்றும் மரம் செடி கொடிகளிடையே புகுந்து இனிய காட்சி அளித்தது. மன்னனின் மனத்தில் இருந்த பாரமெல்லாம் நீங்கிவிட்டது. அவன் மந்திரியை அழைத்து, "இவர்கள் யாருடைய குழந்தைகள்?" என்று கேட்டான்.

மந்திரி, "இவள் என்னுடைய மகள்; பெயர் ருசிரா. பையன் பெயர் கௌசிகன்; இவன் தகப்பனார், பாவம், ஓர் ஏழைப் பிராம

மணர்; கோயிலில் அர்ச்சகம் பண்ணிப் பிழைக்கிறார்" என்றான்.

மன்னன், "சரி. உரிய வயசு வந்ததும் இவர்களுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டான்.

மன்னனின் உத்தரவுக்குக் குறுக்காகப் பேச மந்திரிக்குத் துணிவில்லை. அவன் தலை குனிந்தபடி மன்னனின் பின்னே சென்றான்.

2

நாட்டில் சிறந்த பண்டிதர் என்று பெயர் பெற்ற ஒருவரிடம் மன்னன் கௌசிகனை அனுப்பி வைத்தான். உயர் குடும்பத்துப் பிள்ளைகளெல்லாம் அவரிடத்தில் தான் படித்துவந்தார்கள். மந்திரி குமாரி ருசிராவுக்கும் அவர்தான் ஆசிரியர். கௌசிகன் வந்தது அவருக்கும் மற்றவர்களுக்கும் ஏனோ பிடிக்கவேயில்லை. ஆனால் மன்னனுடைய உத்தரவாயிற்றே; என்ன செய்வது?

எல்லாரையும் விட ருசிராவுக்குத்தான் மிகவும் சங்கடமாக இருந்தது. மற்றப் பிள்ளைகளெல்லாம் காதோடு காது வைத்து ஏதோ பேசிக்கொண்டார்கள். அவள் முகம் நாணத்தால் சிவந்தது; ரோஷம் தாங்காமல் கண்களில் நீர் சுரந்தது. கௌசிகன் அவளிடம் எப்போதாவது புத்தகத்தை நீட்டினால் அவள் அதை வீசி எறிவாள். பாட சம்பந்தமாக அவன் ஏதாவது கேட்டாலும் அவள் பதில் சொல்வதேயில்லை.

கௌசிகனைவிட ருசிரா மிகவும் கெட்டிக்காரியென்று பெயர் எடுக்க வேண்டும் என்று பண்டிதருக்கு ஆவல். கௌசிகனுடைய சுபாவம், எந்த விஷயத்திலும் நீடித்துக் கவனம் செலுத்தமாட்டான்; கொஞ்ச நேரம் நீந்துவான்; அப்புறம் வெளியில் சுற்றுவான்; ஆடுவான்; பாடுவான். இதனால் ருசிரா படிப்பில் சுலபமாக அவனை முந்திக்கொண்டு விடுவாள் என்றுதான் பண்டிதர் எண்ணினார்.

"ஏண்டா, படிக்கிறதேயில்லை?" என்று சில சமயம் அவனைக் கண்டித்துக் கேட்பார்.

"படிக்கத்தானே படிக்கிறேன்; அதோடு இன்னும் பல விஷயங்களும் தெரிந்துகொள்ள வேண்டாமா?" என்றான்.

"அதெல்லாம் கூடாது."

"அப்படியானால் எனக்குப் படிப்பின் மேலேயும் இனிமேல் புத்தி ஓடாது" என்று சொல்லிவிட்டான் கௌசிகன்.

3

மன்னன் ஒரு நாள் பண்டிதரை அழைத்து, "குழந்தைகளெல்லாரும் சௌக்கியமா? யார் நன்றாகப் படிக்கிறார்கள்?" என்று கேட்டான்.

பண்டிதர், "ருசிராதான்" என்றார்.

"கௌசிகன்?"

"அவன் படிப்பில் கவனம் செலுத்துவதாகவே தெரியவில்லை."

"கௌசிகனுக்கும் ருசிராவுக்கும் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டுமென்று எனக்கு எண்ணம்."

பண்டிதர் ஒருவிதமாகச் சிரித்து, "எனக்கென்னவோ இந்த ஸம்பந்தம் பொருத்தமாகப் படவில்லை" என்றார்.

ஆனாலும் மன்னன் மந்திரியை அழைத்து, "என்ன, கௌசிகனுக்கும் உன் மகளுக்கும் கல்யாண ஏற்பாடு செய்யவேண்டியதுதானே?" என்றான்.

மந்திரி: மகாராஜா, அவனைப் பண்ணிக்கொள்ள என் மகளுக்கு இஷ்டமில்லையே!

மன்னன்: பெண்களின் மனசில் இருப்பது நமக்குத் தெரியாது. வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள், தெரியுமா?

மந்திரி: இந்தப் பேச்சை எடுத்தாலே அழ ஆரம்பித்துவிடுகிறாளே!

மன்னன்: அப்படியானால் கௌசிகன் தனக்குத் தகுதி இல்லை என்று அவளுக்கு எண்ணமா?

மந்திரி: மகாராஜா, மன்னிக்க வேண்டும்; விஷயம் அதுதான்.

மன்னன்: சரி; அப்படியானால் இரண்டு பேருடைய படிப்பும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று நானே பரீட்சித்துப் பார்த்துவிடுகிறேன். தர்க்கத்தில் கௌசிகன் ஜயித்துவிட்டால் அப்புறம் உன் மகள் கல்யாணத்துக்குத் தடை சொல்ல மாட்டாளே?

மந்திரி தன் மகளைப் போய்ப் பார்த்துவிட்டு, "அப்படியானால் அவளுக்குச் சம்மதந்தானும்" என்று மன்னனிடம் தெரிவித்தான்.

4

சபை கூடியது. சிம்மாசனத்துக்கு அருகில் மன்னனின் காலடியில் கௌசிகன் அமர்ந்திருந்தான். பண்டிதர் தாமே ருசிராவை அழைத்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தார். கௌசிகன் தன்



இடத்தை விட்டு எழுந்து அவரையும் ருசிராவையும் வணங்கினான். ருசிரா அவனை லட்சியமே செய்யவில்லை.

பாடசாலையில்கூட இதுவரையில் கௌசிகன் ருசிராவோடு தர்க்கம் செய்ததே இல்லை; மற்றப் பிள்ளைகளோடு தர்க்கம் செய்ய வந்தாலும் அவர்கள் அவனை மதிப்பதில்லை. இன்று அவன் பளிச்சுப் பளிச்சென்று ஒவ்வொரு கேள்விக்கும் கூரிய அம்பு பாய்வது போல் பதில் சொன்னான். பண்டிதருக்கு வியப்பாகவும் இருந்தது; வெறுப்பும் ஏற்பட்டது. ருசிராவின் நெற்றியில் வேர்வை அரும்பிற்று. கௌசிகன் கேட்கும் கேள்விக்கு ருசிராவினால் பதில் சொல்லவே முடியவில்லை.

பண்டிதருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; ஆனாலும் ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்து நின்றார். 'தோற்றுவிட்டோமே!' என்று அவமானம் தாங்காமல் ருசிராவின் கண்களிலிருந்து நீர் பெருகியது.

மன்னன் மந்திரியைப் பார்த்து, "என்ன, இனிமேல் முகூர்த்த நாள் குறிப்பிட வேண்டியது தானே?" என்றான்.

அப்போது கௌசிகன் எழுந்து நின்று மன்னனை வணங்கி, "மகாராஜா, மன்னிக்கவேண்டும். நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதில்லை" என்றான்.

மன்னன் ஆச்சரியமடைந்து, "நீதான் ஜயித்துவிட்டாயே? சம்மானம் வேண்டாமா?" என்றான்.

கௌசிகன் ரோஷத்தோடு, "ஜயித்திருக்கலாம்; ஆனால் எனக்குச் சம்மானம் வேண்டாம்; வேறு யாராவது வாங்கிக்கொள்ளட்டும்" என்றான்.

பண்டிதர், "மகாராஜா, இன்னும் ஒரு வருஷம் அவகாசம் கொடுங்கள்; மறுபடியும் பரீட்சித்துப் பார்த்து முடிவு செய்யலாம்" என்று கேட்டுக்கொண்டார்.

மன்னனும் அதற்குச் சம்மதித்தான்.

5

கௌசிகன் பாடசாலையை விட்டுப் போய்விட்டான். காலையில் காட்டிலும் மாலையில் மலையிலுமாகத் திரியலானான்.

பண்டிதர் முன்னைவிட அதிக அக்கறையோடு ருசிராவுக்குப் பாடம் போதிக்க ஆரம்பித்தார். ஆனால் அவளுக்கு அதில் கவனம் சென்றால்தானே? பண்டிதருக்கே வெறுப்புத் தட்டிவிட்டது; "ருசிரா, நீ இப்போதே உஷாராக இருந்தால்தான் முடியும். இல்லாவிட்டால் அடுத்த தடவையும் தர்க்கத்தில் தோற்றுவிடுவாய்!" என்று எச்சரித்தார்.

ஆனால் ருசிராவோ, அன்று ஒரு நாள் பார்வதி சிவபெருமானை நினைந்து இலையும் புசியாமல் தவங்கிடந்ததுபோலவே, பாடத்தின்மேல் அக்கறை செலுத்தாமல் இருந்தாள். இரண்டாந் தடவையும் தோற்றுப் போகவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது போல் இருந்தது அவள் நடந்துகொண்ட விதம்.

பண்டிதர் பார்த்தார்; "கபிலர், கணாதர்கள் மேல் ஆணை: இனிமேல் நான் பெண்பிள்ளைகளுக்கே பாடம் சொல்லித் தரப் போவதில்லை. நான் வேத வேதாந்தத்தில் கரை கண்டு என்ன பயன்? ஒரு பெண் பிள்ளையின் மனசை அறிய முடியவில்லையே" என்று எரிச்சலோடு சொன்னார்.

ஒரு நாள் மந்திரி மன்னனிடம்

வந்து, "ஒரு பெரிய இடத்தி விருந்து என் மகளுக்கு வரன் வந்திருக்கிறது. மகாராஜா சம்மதத்துக்குத்தான் காத்திருக்கிறேன்" என்றான்.

மன்னன்: உன் மகளுடைய அபிப்பிராயம் என்ன?

மந்திரி: பெண்கள் தங்கள் மனசில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்லுவார்களா?

மன்னன்: நேற்று இது தெரிந்ததும் அவள் அழுது கண்ணீர் சிந்தியதாகக் கேள்விப்பட்டேனே?

மந்திரி பதில் பேசவில்லை.

6

மன்னன் அரண்மனை உத்தியான வனத்தில் வந்து அமர்ந்தான்; கூடவே மந்திரியும் வந்தான். "சரி; உன் மகளை இங்கே அழைத்துக்கொண்டு வா" என்று மன்னன் உத்தரவிட்டான்.

ருசிரா வந்தாள்; மன்னனை வணங்கி நின்றாள்.

மன்னன், "குழந்தையே, அன்றைக்கு ஒருநாள் ராம சீதா வனவாச ஆட்டம் ஆடினாயே, கவனம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

ருசிரா நாணித் தலை குனிந்தாள். அவள் முகத்தில் முறுவல் மலர்ந்தது.

மன்னன், "மறுபடியும் நீயும் கௌசிகனும் அந்தமாதிரி விளையாடிப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்றான்.

ருசிரா சேலைத் தலைப்பால் முகத்தைச் சற்று மறைத்துக்கொண்டாள்.

மன்னன், "அம்மா, இதோ உத்தியான வனமும் இருக்கிறது; அந்த ராமனும் இருக்கிறான். ஆனால் சீதைதான் பாக்கி. நீ மனசு வைத்தால் அந்த ஒரு குறையும் நீங்கிவிடும்" என்றான்.

ருசிரா மௌனமாக மன்னனின் காலடியில் விழுந்து வணங்கினாள்.

மன்னன் மகிழ்ச்சியோடு, "ஆனால் ஒன்று: இனிமேல் நான் ராட்சச வேஷம் போட்டுக்கொள்ள முடியாது, அம்மா" என்றான்.

ருசிரா அன்பு கனிய மன்னனை நோக்கினாள்.

மன்னன், "உன் வாத்தியாருக்குத்தான் இனிமேல் அந்த வேஷம் பொருத்தம். சொல்லிவிட்டேன், அம்மா" என்றான் தமாஷாக.

ஷாவின் செக் புத்தகம்

"அவ்வப்போது செக்கில் கையெழுத்துப் போடும் சிரமம் உங்களுக்கு எதுக்கு? செக் புத்தகத்தில் மொத்தமாகக் கையெழுத்திட்டு என்னிடம் கொடுங்கள். பில்கள் வரும்போது நான் செக்கில் பெயரும் தொகையும் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்" என்று பெர்னாட் ஷாவின் காரியதரிசி அவரிடம் சொன்னார்.

"அது சரியல்ல. நாம் இருவரும் ஒரே சமயத்தில் செத்துப் போய், வேறொருவரிடம் செக் புத்தகம் அகப்பட்டால் அவர்கள் என் பாங்கிப் பணத்தை அடித்துக்கொண்டு போய் விடுவார்களே!" என்றார் ஷா.

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

மக்ஆர்த்தரின் குலதர்மம்

ஜெனரல் டக்ளஸ் மக்ஆர்த்தரின் தந்தையும், இவரைப் போலவேதான் 50 வருஷங்களுக்கு முன், சிவிலியன் அதிகாரிகளோடு சச்சரவிட்டார்.

ஸ்பெயின் நாட்டுடன் ஐக்கிய அமெரிக்கா போரிட்டுப் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றியது. டக்ளஸ் மக்ஆர்த்தரின் தந்தையான ஆர்த்தர் மக்ஆர்த்தர் 1900 - ஆம் ஆண்டில் பிலிப்பைன் தீவுகளுக்கு ராணுவ கவர்னராகப் பதவி ஏற்று ஆட்சி புரியத் தொடங்கினர்.

அப்போது ரிபப்ளிகன் கட்சியைச் சேர்ந்த மிக்கின் லீ என்பவர் ஜனதிபதியாக இருந்தார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இதுபற்றி ஜனதிபதியின் கொள்கையைத் தாக்கத் தொடங்கினர்கள். "பிலிப்பைன் தீவில் ராணுவ ஆட்சி நடத்துவதால் அபாரச் செலவு ஏற்படுகிறது. அதை நிறுத்திக் கூடிய சீக்கிரம் அங்கே சிவிலியன் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும்" என்று அவர்கள் வற்புறுத்தினர்கள்.

ஆனல், "ராணுவ ஆட்சியால்தான் பிலிப்பைனில் ஒழுங்கை நிலை நாட்டி, மேற்கத்தி நாகரிகத்தை மக்களுக்குப் புகட்ட முடியும்" என்று ஆர்த்தர் மக்ஆர்த்தர் பிடிவாதம் செய்தார்.

சிவிலியன் அரசியலை அந்தத் தீவுகளில் ஸ்தாபிப்பதற்காக, வில்லியம் ஹொவார்டு டாப்ட் என்பவரின் தலைமையில் ஒரு கமிஷனை அங்கே ஜனதிபதி அனுப்பினர்.

கமிஷன் தலைவரான டாப்ட் அங்கே போனதும், தம்மை ஆர்த்தர் மக்ஆர்த்தர் வந்து சந்தித்து மரியாதை காட்டுவார் என்று எதிர்பார்த்தார். ஆர்த்தர் வரவில்லை. தமக்குப் பதிலாக ஒரு லெப்டினண்ட் - கர்னலை டாப்டிடம் அனுப்பினர். கமிஷனைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்குத் தங்கச் சரியான இட வசதிகூட அளிக்கவில்லை; தம்முடைய மாளிகையிலேயே ஒரு சிறிய அறையை அளித்தார். கமிஷனுடன் ஒத்துழைக்கவே இல்லை. டாப்டுக்கும் ஆர்த்தருக்கும் ஓயாத தகராறு இருந்துவந்தது. ஒரு சமயம், "நான் ராஜீநாமாச் செய்துவிடுகிறேன்" என்றுகூட ஆர்த்தர் மிரட்டினர்.

கடைசியில் பிலிப்பைன் தீவுக்கு, சிவிலியன் கவர்னராக டாப்ட் பதவி பெற்ருர். ஆர்த்தர் மக்ஆர்த்தர் தம் ராணுவ கவர்னர் பதவியை இழந்து, ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பிப் பழையபடி சாதாரண ராணுவ அதிகாரியானர்.

அப்புறம் அவருக்குப் பதவி உயர்வே இல்லை. ஏறக்குறைய ஒதுங்கி வாழ்ந்து 1909 ஜூலையில் தமது 64 வயதில் மாண்டு போனர்.

—'நியூ யார்க் டைம்ஸ்'

சென்ன பஸவன்



மூல ஆசிரியர்: **மாஸ்தி வேங்கடேச ஐயங்கார்**

தமிழில் தந்தவர்: **கௌரி அம்மாள்**

கன்னட மறுமலர்ச்சி இலக்கியத்தில் இன்று மிகச் சிறந்த ஸ்தானம் வகிப்பவர் ஆசிரியர். அவருடைய சிறுகதைகள் ஜீவ களை நிரம்பி அலாதி பாணியாயிருக்கும். அவர் பல நாவல்களும் எழுதியிருக்கிறார். ஸ்காட், பங்கிம் சந்திரர் இவர்களைப்போல் சரித்திரக் கதை எழுத எல்லாராலும் முடியாது. அதற்கு ஆழ்ந்த கற்பனை மட்டும் போதாது; பரந்த சரித்திர ஞானமும் வேண்டும். இந்தச் சரித்திரக்கதையிலே சில அருமையான பாத்திரங்களை மாஸ்தி சிருஷ்டித்திருப்பதுடன், ஹைதரின் உருவையும் செயல்களையும் நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறார்.

காப்பிரைட்; 'சென்ன பஸவ நாயகன்' (கன்னட நாவல்), வெளியிட்டோர்:
'ஜீவன' பப்ளிகேஷன்ஸ், பஸவன்குடி, பெங்களூர்.

சென்ன பஸவன்

பிறனூர் நாயகனான பஸவன் காலமாகி ஒன்றரை வருஷம் சென்றுவிட்டது. அவன் மகன் தான் சென்ன பஸவன். நாயகனின் இரண்டாவது மனைவியான வீரம்மாவுக்குப் பிறந்தவன். வீரம்மாவை நாயகன் மணக்கும்போது அவனுக்கு வயது நாற்பத்தைந்து. அவனைவிடப் பதினைந்து வயது சிறியவள் வீரம்மா. என்றாலும் சில வருஷ காலம் அவர்களுடைய மணவாழ்க்கை இன்பமாகவே கழிந்தது. சென்ன பஸவனுக்குப் பத்து வயது ஆகும்போது குடும்பத்தில் பிளவு ஏற்பட்டது. நம்பையன் என்ற ஒரு வாலிப அதிகாரிக்கு ராணி வீரம்மா அதிகச் சலுகை காட்டுவது யாருக்கும் பிடிக்கவில்லை. சென்ன பஸவனும் இதில் வருத்தம் அடைந்தான். தாய்க்கும் மகனுக்குமே இதனால் பலத்த மனஸ்தாபம் ஏற்பட்டது.

ஊருக்கு முக்கியஸ்தனான நேமையன் என்பவனின் தம்பி மகள் சாந்தாவை மகனுக்கு நாயகன் மணம் புரிந்து வைத்தபோது அதற்கும் குறுக்கே நின்றாள் வீரம்மா. தன் உறவினளான ஒரு பெண்ணை மருமகள் ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பது அவளுடைய ஆசை.

நாயகன் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானான். அப்போது ராணி வீரம்மாவின் ஆதிக்கம் வலுத்தது. ராஜாங்கத்தில் லிங்கண்ணன் என்ற ஒருவன் நிதிமந்திரியாயிருந்தான். வீரம்மாவுக்கும் நம்பையனுக்கும் லிங்கண்ணனைப் பிடிக்கவில்லை. அவன்மீது பொய்க் குற்றமெல்லாம் சாட்டி அவனைச் சிறைப்படுத்தினார்கள். நாயகன் எவ்வளவு முயன்றும் அதைத் தடுக்க முடியவில்லை. நாயகனின் ஆயுளும் முடிந்தது. இதற்குப் பிறகு நம்பையனே அரண்மனையில் சர்வாதிகாரியாகிவிட்டான்.

தந்தை இறந்ததும் சென்ன பஸவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவனுக்கு ராணி வீரம்மா பட்டம் கட்டுவாள் என்று ஊரெல்லாம் எதிர்பார்த்தது. அவளோ அதைப்பற்றிய பேச்சே எடுக்கவில்லை.

சென்ன பஸவனின் போக்கு அலாதியாக இருந்தது. யாரும் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கருடி பழகிப் பொன் அலகு போல் பளபளப்பாயிருந்தது அவன் மேனி. தேகப்பயிற்சியில் ஈடுபட்டு, பதினெட்டு அல்லது இருபது வயது வாலிபன்போல் அவன் தோன்றினான். குழந்தைப் பருவ முதலே சுறுசுறுப்பானவன். ஒரு கண நேரம் அவனால் சும்மா இருக்க முடியாது. வேட்டையாடுவதில் புலி. தந்தை நோயுற்றுப் படுத்தது முதல், ஒரே ஒரு காவலாளியைத் தவிர வேறு யாரையும் துணைக்கு அழைத்துக்கொள்ளாமல் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடப் போவதில் முனைந்துவிட்டான். மாதத்தில் பதினைந்து நாள் ஊரில் இருப்பது கூட அரிதாகிவிட்டது. அவன் எங்கே போனான் என்பதே சில சமயம் யாருக்கும் தெரியாது.

சாந்தாவுக்கு இதனாலெல்லாம் மிகுந்த மனவேதனை ஏற்பட்டது. தன் கணவன் சீர்சிறப்போடு சிம்மா

சனம் ஏறி மகிழவில்லையே என் பதில் அவளுக்குப் பெருங் கவலை.

இந்த நிலையில் ராணி வீரம்மா ஒரு சூழ்ச்சி செய்யத் தொடங்கினுள். தன் உறவினளான சண்ணுள் என்ற பெண்ணை அரண்மனையில் அழைத்து வைத்துக்கொண்டாள். அவளைச் சென்ன பஸவனுக்கு மணம் செய்து வைக்கவேண்டும் என்று சில தந்திரங்களைக் கையாளத் தொடங்கினுள். சாந்தா ஜைஞசாரக்காரி என்றும், அவளுக்குச் சைவாசாரம் தெரியவில்லை என்றும் குற்றம் சாட்டினுள். மறுவிவாக யோசனைக்குப் பெரியோர்களின் ஆதரவைப் பெற முயன்ருள். அவர்களெல்லாம் மறுத்துவிட்டார்கள். ராணி ரகசியமாகவே இந்தச் சூழ்ச்சிகளைப் புரிந்தும், இவை சாந்தாவின் தோழி கெஞ்சாள் என்பவளுக்கு எட்டின. அவள் சாந்தாவுக்குத் தெரிவித்துவிட்டாள். சாந்தா மேலும் துயரம் அடைந்தாள்.

இந்தச் சமயத்தில் மைசூர் மன்னரும் அவருடைய தாயான பெரிய ராணியும் தூதர்மூலம் ரகசியமாகப் பிறனூர் வீரம்மாவுக்கு ஓர் அழைப்பு அனுப்பினர்கள். அதில் கண்டிருந்ததாவது:

"சென்ன பஸவனை மைசூர் மன்னர் தம்முடைய அண்ணன்போல் மதிக்கிருர். வருஷந்தோறும் தங்களிடமிருந்து ஸ்ரீரங்கபட்டணத்துக்குக் கப்பம் வரும். சில வருஷங்களாக அது வாராததுபற்றிச் சேனுதிபதியான நவாபு ஹைதர் அலிக்குத் தெரிவித்திருக்கிருேம். ஜனங்கள் பேசிக்கொள்வதுபோல், நவாபிடம் எங்களுக்குப் பயம் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. எதற்கும் சிற்றரசர்களின் ஆதரவு எங்களுக்கு வேண்டும் என்பதுதான் விருப்பம். இந்தத் தடவை நவராத்திரி விழாவில் தாங்களும் வந்து கலந்துகொள்ளவேண்டும். எவ்வளவு சிறிய தொகையைக் கப்பமாக கட்டினுலும் ஏற்றுக்கொள்கிருேம். இதை உத்தரவு என்ருே அவமானம் என்ருே எண்ண வேண்டாம். நம் தொடர்பும் உறவும் வளரவேண்டும் என்பதே எங்கள் ஆவல். இன்னும் சென்ன பஸவனுக்குப் பட்டம் கட்டவில்லை என்பது கேட்டு வியப்படைகிருேம். தங்கள் விருப்பத்தை அறிவித்தால் நலம்."

இதைப்பற்றி நேமையனையும் கலந்துகொண்டு வீரம்மா பதில் அனுப்பினுள். சகல விஷயங்களிலும் மைசூருடன் ஒத்துழைப்பதாக அவள் அந்தப் பதிலில் தெரிவித்தாள். மைசூருக்கு மகனையும் மருமகளையும் அனுப்ப இசைந்தாள். ஆனுல் மைசூருக்குக் கப்பம் கட்டுவதற்குச் சம்மதிப்பதாக மட்டும் தெரிவிக்கவில்லை.

மைசூரை அப்போது ஆண்டு வந்தவர் ஸ்ரீ கிருஷ்ணராஜர். ஆனுல் நாட்டின் முக்கால் வாசிப் பகுதி, அரசாங்கத்தின் சர்வாதிகாரியான ஹைதரின் ஆதீனத்தில் இருந்தது. ஸ்ரீரங்கபட்டணத்து அரண்மனைக்குள்ளே பெரிய ராணியும் ஸ்ரீ கிருஷ்ணராஜரும் அடைபட்டுக் கிடந்தார்கள். சிறை என்ற பெயர்தான் இல்லை. அதிகாரம் முற்றும் ஹைதரின் வசமே இருந்தது.

ஹைதருக்கு ஒரு சாமர்த்தியம். சகல அதிகாரமும் தன்னிடமே இருந்தாலும் தன்னை ஒரு வேலைக்காரன் போலவே வெளியில் காட்டிக்கொண்டான். 'அரசர் உத்தரவு, அரசர் விருப்பம்' என்ற பெயரிலேயே சகல காரியங்களையும்

தன் இஷ்டப்படி நடத்தி வந்தான். தான் ஒரு விஷயத்தை நினைத்தால், அதை அரசர் அல்லது பெரிய ராணியின் வாயிலாகவே வரும்படி செய்வான். ஆனால் இவ்வளவு செல்வாக்கு இருந்தும், 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது தகாது' என்று அவன் எண்ணியிருந்தான். என்றாலும் மைசூர் ராஜ்யத்துக்கே அபாயம் வந்திருப்பது போலவும், தானே அதைக் கட்டிக் காப்பது போலவும் நடித்து வந்தான்.

ஹைதருக்கு எழுத்து வாசனை இல்லை என்று பலருக்கு அபிப்பிராயம். ஆனால் அந்தக் காலத்தில் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொருவர் இருந்துவந்தார்கள்; சகலமும் சரிவர நடந்துவந்தன. அதனால் எழுத்துவேலை எல்லாருக்கும் இராது. இந்தக் காரணம் பற்றியே ஹைதர் ஒன்றும் எழுதுவதில்லை. அவன் மகா உழைப்பாளி. சலிப்பின்றி வேலை செய்வான். தவறு செய்தவரைக் கடுமையாய்க் கண்டிப்பான்.

பிறனூருக்கு மன்னரின் அழைப்புப் போய்ப் பதில் வந்த சமயத்தில் பெங்களூரில் இருந்தான் ஹைதர். அவனுக்கு நம்பிக்கையான முகதம் ஆலியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "வரும் நவராத்திரிக்குப் பல இடங்களிலிருந்து விருந்தாளிகள் வருகிறார்களாம். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்யவேண்டுமாம். பெரிய ராணி நேற்று இதைத் தெரிவித்தார்கள். இப்போதே வரவைச் செலவு மிஞ்சிவிட்டது. முப்பதினாயிரம் வராகன் கடன் ஏற்பட்டிருக்கிறது. எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சமுகம் தெரிவிக்கவேண்டும்" என்பதுதான் அதில் கண்டிருந்த விஷயம்.

உடனே புறப்பட்டு மூன்று நாளில் ஸ்ரீரங்கபட்டணம் வந்து சேர்ந்தான் ஹைதர். பெரிய ராணியையும் மன்னரையும் கண்டு பேசினான்.

அரண்மனையின் சார்பாகக் கடன் ஏற்பட்டதுபற்றி விவரங்கள் கேட்டாள் ராணி.

"இதைப்பற்றியெல்லாம் சொல்ல எனக்குக் கூச்சமாயிருக்கிறது. வேண்டுமானால் சர்வாதிகாரி பதவியை இன்றே ராஜீநாமாச் செய்துவிடுகிறேன். வருமானத்தை மிஞ்சுகிறது அரண்மனையின் செலவு. என்றாலும் அதை மறுக்க எனக்கு இஷ்டமில்லை. தவிர, நாட்டின் பந்தோபஸ்துக்காகவும் அதிகச் செலவாகிறது" என்று பதிலளித்தான் ஹைதர்.

பிறகு, "இதெல்லாம் இருக்கட்டும். இப்போது வெளியிலிருந்து யார் வருகிறார்கள்? என்ன ஏற்பாடாக வேண்டும்?" என்று கேட்டான்.

"உன்மீது எனக்கு அதிருப்தி இல்லை, நவாபு. நாட்டின் நன்மைக்காகவே நீ பாடுபடுகிறாய். நாங்களும் செலவைப்பற்றி எவ்வளவோ யோசித்துப் பார்த்துவிட்டோம். உசிதப்படி அதைப் பிறகு கவனிக்கலாம். நவராத்திரிக்கு வேண்டிய ஏற்பாடுகளை நீயே செய்யவேண்டும் என்பதில்லை. இங்கே இருக்கிற யாராவது செய்யட்டும். நீமட்டும் விழாவுக்கு இரண்டு மூன்று நாள் முன்னதாகவே வந்து சேர். வரும் விருந்தாளிகள் உன்னைப் பார்க்க விரும்புவார்கள்; நீயும் அவர்களைப் பார்க்கலாம்" என்றாள் பெரிய ராணி.

"அம்மணியின் உத்தரவு எப்படியோ அப்படியே நடத்தி விடுவான் முகதம். நவராத்திரிக்கு வரவேண்டும் என்றே எனக்கு விருப்பம். ஆனால், சித்திரதுர்க்கத்துக்குப் பக்கத்திலிருந்து ஏதாவது அழைப்பு வந்தால், நான் போகவேண்டியிருக்கும். உழைப்பிலே சிலர் வெயிலிலும் சிலர் நிழலிலுந்தான் இருக்க நேர்கிறது. எல்லாம் தங்கள் சித்தம்" என்றான் ஹைதர்.

இவ்வளவு நயமாகப் பேசும் ஹைதருக்கு எப்படிப் பதில் சொல்லுவது என்றே பெரிய ராணிக்கும் மன்னருக்கும் புரியவில்லை. நாட்டின் பந்தோபஸ்துக்கு அதிகச் செலவு ஆகிறது என்றால் என்ன அர்த்தம்? நாட்டுக்கு ஆபத்தா வந்திருக்கிறது? இதில் எல்லாம் ஏதோ சூது இருப்பதாக இருவர் மனத்திலும் பட்டது. தாங்கள் இனிமேல் சிறிது ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள்.

அரண்மனையில் நவராத்திரி உற்சவத்துக்குரிய ஏற்பாடுகள் சிறப்பாக நடந்தன. சென்ன பஸவனும் சாந்தாவும் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பெரிய ராணி பரிவோடு க்ஷேமம் விசாரித்து, பிரத்தியேகமான விடுதிகளுக்கு அனுப்பினாள். அங்கே செய்திருந்த வசதிகளும் நடந்த உபசாரங்களும் அவர்கள் இரண்டு பேருக்கும் ஆனந்தம் அளித்தன. தாங்கள் அரச தம்பதி என்ற எண்ணங்கொண்டு இங்கேதான் முதல் முதலாக அவர்கள் மகிழ முடிந்தது. பிறனூரில் இந்த மாதிரி ராஜ மரியாதையெல்லாம் அவர்களுக்குக் கிடைத்ததில்லை.

சென்ன பஸவனின் கம்பீரத்தையும் சாந்தாவின் ஒப்பில்லாத அழகையும் இருவருடைய குணசீலத்தையும் கண்டு மைசூர் மன்னரும் பெரிய ராணியும் மனம் பூரித்தார்கள்.

மறுநாள் மாலையில் இன்னும் நாலு விருந்தாளிகள் வந்து சேர்ந்தார்கள். சென்னைக் கவர்னரின் சார்பாக மேஜர் ஒருவர், பாதிரி ஒருவர், மங்களூர் வியாபாரிகள் சார்பாக இருவர் ஆக இந்த நாலுபேருந்தான். மற்றும் பல சிற்றரசர்களும் பாளையக்காரர்களும் வந்து கூடினார்கள். ஆனால், ஹைதர் மட்டும், "நான் முந்தி அறிவித்தபடியே வர இயலாமல் போயிற்று" என்று செய்தி அனுப்பிவிட்டான். 'எல்லாரும் கூடியிருக்கும் சபையில் நம்மை ஹைதர் வணங்கி நிற்க வேண்டும்' என்று மன்னர் எண்ணிய எண்ணம் கைகூடாதது அவருக்குச் சற்று வருத்தந்தான்.

கொலு மண்டபத்தை அற்புதமாய்ச் சிங்காரித்திருந்தார்கள். சங்கீதம் முதலிய வைபவங்களுடன் விழாத் தொடங்கியது. நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு, பக்தி சிரத்தையுடன் சிம்மாசனத்துக்குப் பூஜை செய்து வணங்கி மன்னர் கொலு அமர்ந்தார்.

ஆட்டங்கள், கேளிக்கைகள், பந்தயங்கள், குத்துச்சண்டைகளெல்லாம் நடந்தன. முறைப்படி பல விருந்தாளிகளும் மன்னரைக் கண்டு பேசினார்கள்.

நவராத்திரி விழா முடிந்தது. சாந்தாவும் சென்ன பஸவனும் சாமுண்டி மலை, நஞ்சன்கூடு முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று கண்குளிரப் பல காட்சிகளைக் கண்டார்கள்.

கடைசியில் விடை பெறும் சமயம்.

"உங்கள் பெரியவர் காலமாகியும் இன்னும் உங்களுக்குப் பட்டம் கட்டாதது எங்களுக்குக் கவலையாக இருக்கிறது. ஊருக்குத் திரும்பியதும் உங்கள் பட்டாபிஷேக விழா நடக்கவேண்டும். அதற்கு என்ன உதவி வேண்டுமானாலும் நாங்கள் செய்கிறோம்" என்று மன்னரும் பெரிய ராணியும் சென்ன பஸவனுக்குத் தெரிவித்தார்கள்.

"இங்கே வந்த முகூர்த்தம் உனக்குக் கூடிய சீக்கிரம் பூச்சூட்டல் நடக்க வேண்டும்" என்று சாந்தாவை அரசி வாழ்த்தினாள்.

பெங்களூருக்குத் திரும்பும் போது ஹைதருக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. 'நமக்குத் தெரியாமல் எதற்காக எல்லாருக்கும் அழைப்புப் போயிற்று? ஏதோ சூழ்ச்சி நடக்கிறது' என்று அவனுக்குத் தோன்றியது. அரசர் தன்னை எதிர்ப்பாரோ என்ற பீதி உண்டாயிற்று. என்றாலும், அவர்மீது கையோங்கத் துணிவு வரவில்லை.

பிறனூர்ச் சென்ன பஸவன் தம்பதியை அழைத்ததுபற்றித்தான் அவனுக்கு அதிக எரிச்சல் மூண்டது.

'மைசூரை நான் ஒன்றும் செய்யக் கூடாது. பிறனூரைச் சுலபமாகக் கைப்பற்றி விடலாம். கப்பம் கட்டும் சுல்தானாக அதில் நான் அமர்ந்து விடலாம்' என்று எண்ணினான்.

பிறனூரில் தாய்க்கும் மகனுக்கும் இருக்கும் மனஸ்தாபத்தையும் அங்குள்ள பிளவுகளையும் அவன் அறிவான். இந்தச் சமயமே அதைக் கைப்பற்றி விடவேண்டுமென்று எண்ணினான்.

பெரிய ராணிக்கோ மன்னருக்கோ தெரிவிக்காமலே, அதைக் கைப்பற்றப் படையுடன் ஹைதர் புறப்பட்டு விட்டான்.

இந்தச் செய்தி பிறனூரெங்கும் பரவிவிட்டது.

நேமையனேயும் மற்றொரு முக்கியஸ்தரான ராமா சாஸ்திரியையும் அழைத்து, தன் மகனைப்பற்றி அவர்களிடம் புகார் செய்யத் தொடங்கினாள் ராணி வீரம்மா. அப்போது அவள் மகன் சென்ன பஸவனும் கூட இருந்தான்.

"தந்தை ஆண்ட ராஜ்யம் மகனுக்கு இல்லை என்று யார் சொல்லிவிடமுடியும், நேமையா? பட்டத்துக்காக வீணே கலகம் செய்வதும் வெளி ஆட்களை உள்ளே விட்டுக் கொள்வதும் அழகா?" என்றாள்.

மைசூர் அரசின் ஆதரவை மகன் நாடியிருக்கிறான், அதனால்தான் ஹைதர் படையுடன் வருகிறான் என்று அவள் மேலும் சொன்னாள்.

சென்ன பஸவனுக்கு அளவற்ற கோபம் வந்தது. "லிங்கண்ணனின் விசாரணையைப் போலவா இதுவும்? யார் அழைத்தார்? யார் கண்டார்? சொல்லுங்கள், பார்க்கலாம்" என்று எரிச்சலோடு சொன்னான்.

ராமா சாஸ்திரிகள் ஒருவாறு சமாதானப்படுத்தினார். "இப்போது ஊரைக் காப்பாற்ற வழி தேட வேண்டும், வீரம்மா. மகனுக்குப் பட்டம் கட்டி அவன் கையில் ராஜாங்கத்தை ஒப்படைப்பதே நல்லது" என்று அவர் தெரிவித்தார்.

இதை மறுத்துப் பேச முடியவில்லை வீரம்மாவுக்கு.

கடைசியாக, ராஜ்யத்தை மகனிடம் ஒப்பிக்க அவள் இசைந்தாள். ஆனால், "அரண்மனைக் கணக்கு வழக்கெல்லாம் எப்போதும்போல நம்பையனிடம் இருக்கட்டும். பொக்கிஷத்தைச் சாஸ்திரிகள் பார்த்துக்

கொள்ளட்டும்'' என்றாள். வேறு வழியில்லாமல் எல்லாரும் இதை ஒரு விதமாய் ஒப்புக்கொண்டார்கள்.

ராஜ்யகாரியங்கள் அனைத்தையும் சென்ன பஸவன் கூர்ந்து கவனிக்கத்தொடங்கினான். சாஸ்திரிகளின் அதிகாரத்தில் பொக்கிஷம் இருந்தாலும், அதன் வரவு செலவுக் கணக்கை அடிக்கடி சென்ன பஸவனே பரிசீலனை செய்யத் தொடங்கினான். இதைக் கண்டு நம்பையனுக்குத் திகில் மூண்டது. சென்ன பஸவனை எப்படியாவது தொலைத்து விட வேண்டும் என்றே தீர்மானித்து விட்டான்.

இரவில் மாறுவேஷம் பூண்டு நகரைச் சுற்றுவது சென்ன பஸவனின் வழக்கம். ஒரு நாள் அவன் இப்படிச் சுற்றி வரும்போது, நம்பையனின் கூலியாட்களான முரடர் இரண்டுபேர் திடீரென்று பின்புறமாக வந்து அவனைத் தாக்கிக் கயிற்றால் கட்டி ஒரு பெட்டியில் போட்டுத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். பெட்டியை ஒரு குழியில் போட்டுப் புதைத்துவிட வேண்டும் என்பது அவர்கள் செய்திருந்த முன் ஏற்பாடு. ஆனால் ரஸ்தாவில் போகும்போது அவர்களுடைய விசித்திர நடத்தையில் சந்தேகம் கொண்ட இருவர் நெருங்கிவந்தார்கள். உடனே பயந்து பெட்டியை அப்படியே போட்டுவிட்டு அந்த முரடர்கள் ஓடிவிட்டார்கள். வந்தவரில் ஒருவர் அந்த இடத்தில் உள்ள பிரபலமான மடத்துச் சாமியார். சாமியாரும் அவருடைய துணைவரும் பெட்டியை மடத்துக்குள் கொண்டுபோய்த் திறந்து பார்த்தபோது, உள்ளே பஸவன் இருக்கக் கண்டார்கள்; பிரமித்துப் போனார்கள். துணைவனிடம், "இந்த விஷயத்தை இப்போது யாரிடமும் சொல்ல வேண்டாம். ரகசியமாக இருக்கட்டும்'' என்று சொன்னார் சாமியார். தனியறையில் தம் படுக்கையில் சென்ன பஸவனைக் கிடத்தித் தம் கையாலேயே சிகிச்சையும் செய்தார்.

அரண்மனையில் சென்ன பஸவன் இல்லை என்ற செய்தி எங்கும் பரவியது. அவன் இறந்தான் என்று நிச்சயமாய் நம்பிச் சந்தோஷமுற்றான் நம்பையன். ஆனால், 'எதிரியிடம் மகனும் போய்ச் சேர்ந்திருப்பானோ? வேறு என்ன நடந்ததோ?' என்று பலவாறு சந்தேகித்துக்கொண்டிருந்தாள் வீரம்மா.

சென்ன பஸவனுக்குப் பூர்ண குணம் ஏற்படப் பத்துப் பதினைந்து தினங்கள் சென்றன. இப்போது அரண்மனைக்குத் திரும்ப அவனுக்கு இஷ்டமில்லை. தன்னைக் கொல்லச் சதிகாரரை ஏவிவிட்டவள் தன் தாயே என்று அவன் சந்தேகப்பட்டான். என்றாலும், ஊரைக் காப்பாற்றியாக வேண்டும். ராஜ்யத்திலோ ஹைதரை எதிர்க்கக் கூடிய சேனை இல்லை. நேரிலே சென்று அவனைச் சமாதானப்படுத்தித் திருப்பி அனுப்பலாம் என்று முடிவு செய்தான்.

ஹைதரின் படை முகாம் போட்டிருந்த இடத்துக்கு அப்படியே தன்னந்தனியாகச் சென்றான். ஹைதரைக் கண்டான். சமாதானமாகத் திரும்பிப் போகும்படி சொல்லிப் பார்த்தான். ஆனால் ஹைதர் இதையெல்லாம் கேட்கவில்லை. ஒரே போடாக, "நீ சென்ன பஸவன்தானா என்பது எனக்கு எப்படித் தெரியும்? ஏதோ சூதாக வந்த யாரோ நீ. என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்'' என்று

சொல்லிப் பஸவனைப் பந்தோபஸ்தில் வைத்துவிட்டான்.

வழியில் உள்ள ஊர்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிடித்து, ஹைதரின் படை முன்னேறிக் கொண்டேயிருந்தது.

பிறனூரில் பீதி அதிகரித்தது. ஹைதரின் படை நாலுபக்கமும் சூழ்ந்து வருகிறது என்ற செய்தி எட்டியது.

"பொக்கிஷமெல்லாம் ரத்தின படிக்குப் போய்ச் சேரட்டும்" என்று ராணி வீரம்மா உத்தரவிட்டாள். அந்த இடம் பல்லாளர் துர்க்கம். அதன்மேல் ஓர் அரண்மனை உண்டு.

'வீரம்மாவும் சாந்தாவும் உடனே அங்கே போய்விடவேண்டும்; துணைக்கு நம்பையனும் இருப்பது நல்லது' என்று ஏற்பாடாயிற்று.

சாந்தா அப்போது கர்ப்பவதியாய் இருந்தாள். "நான் துர்க்கத்துக்குப் போகவில்லை. இங்கேயே இருக்கிறேன்" என்று அவள் சொன்னாள்.

"ரத்தகளத்தை இப்போது நீ பார்க்கக் கூடாது. உன் வயிற்றிலுள்ள கரு நல்லபடியாக இருக்க வேண்டும்" என்று நேமையன் எவ்வளவோ சொன்ன பிறகுதான் சாந்தா போக ஒப்புக்கொண்டாள்.

இவர்களைத் தவிர நூறு குடிமக்களும் அந்தத் துர்க்கத்துக்குச் சென்றார்கள்.

சாந்தாவை வீரம்மா அன்புடன் நடத்தவில்லை. கெஞ்சாள் ஒருத்திதான் அவளைப் பரிவுடன் கவனித்துக்கொண்டாள்.

தன் நாயகன் உயிருடன் இருக்கிறானா, சீக்கிரம் பத்திரமாய்த் திரும்பி வருவானா என்ற ஒரே கவலையில் எந்நேரமும் முழுகியிருந்தாள் சாந்தா. நாயகனின் க்ஷேமத்துக்காகத் தன்னையே பைரவருக்குப் பலி கொடுத்துக் கொள்ளக்கூட ஒரு சமயம் முயன்றாள். ஆனால் கழுத்திலே வாள் விழப் போகிற கடைசி நிமிஷ நேரத்தில் இவள் யார் என்று பூஜாரி அறிந்துகொண்டதால் அந்த முயற்சி பலிக்கவில்லை. மேலே என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. கவலை அதிகரித்தது. இதுவே வியாஜமாக அவளுக்குக் காய்ச்சல் வந்தது. படுத்த படுக்கையானாள்.

இங்கே இப்படி இருக்கும்போது ஹைதரின் பிடியிலிருந்து சென்ன பஸவன் தப்பித்துக்கொண்டு ஊருக்கு வந்தான். ஹைதரின் படையை எதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். துர்க்கத்திலே இருக்கும் மனைவியைப் பார்ப்பதற்காக ஓடி வந்தான். அவனுடன் வேறு சில ஏவலாளரும் வந்தார்கள். அப்போது இரவு நேரம். இவர்கள் குன்றின்மீது ஏறி வருவதைக் கண்ட ராணி வீரம்மா, ஹைதரின் படைதான் வருகிறது என்று எண்ணிவிட்டாள். சாந்தாவை அப்படியே நிர்க்கதியாய் விட்டுவிட்டு, காவலை துர்க்கம் என்ற மற்றொரு குன்றுக்குச் சண்ணையும் நம்பையனையும் அழைத்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

குடிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. வருகிறவர்களை எதிர்க்கத் தடி, கல் முதலிய சஸ்திரங்களுடன் முஸ்தீப்பானார்கள். 'சாந்தா இப்படித் தனியாக இருக்கிறாளே!' என்றுதான் எல்லாருக்கும் கவலை.

சென்ன பஸவனின் கோஷ்டியார் குன்றின் உச்சியை நெருங்கியதும், அரண்மனைக்கு வெளியே, "யார்?

யார்?" என்ற கூச்சல் எழுந்தது. ஆரவாரம் உண்டாயிற்று.

அரண்மனைக்குள்ளிருந்த சாந்தா "என்ன? என்ன?" என்று கேட்டுக்கொண்டே ஜன்னல்பக்கம் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தாள். ஜுர வேகத்தால், கால் தள்ளாடியது. அப்படியே சறுக்கி, மரம் போல் தடாரென்று விழுந்தாள். இந்தச் சத்தம் கேட்டு எல்லாரும் ஓடி வந்தார்கள். முகத்திலே தண்ணீர் தெளித்து விசிறினார்கள். ஒத்தடம் கொடுத்தார்கள். சாந்தாவுக்குப் பிரக்ஞை தெளியவில்லை. முகத்திலே நீலம் பாரித்தது. கண்கள் மூடிவிட்டன. கைகால்களில் சூடு குறைந்தது.

"ஐயோ! ஐயோ! என்ன செய்வேன்?" என்று கதறினாள் கெஞ்சாள்.

இதே சமயத்தில், "நாயகர்தான் வருகிறார்! நாயகர்தான்!" என்ற கூச்சல் எழுந்தது.

வந்து என்ன பயன்? யாருடைய வருகைக்காகச் சாந்தா துடியாய்த் துடித்துக் காத்திருந்தாளோ, அந்த நாயகன் வரும்போது அவனைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. அவள் ஆவி பிரிந்துவிட்டது.

மனைவிக்குரிய உத்தரக்கிரியைகளைச் சென்ன பஸவன் செய்தான். இந்தத் துக்கத்தால் மனம் உருகி, உடம்பு இளைத்துத் துரும்பானான். அப்படியும், ஹைதரை எதிர்த்தோ சமாதானப்படுத்தியோ ஊரைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் கவனமாய்ச் செய்தான்.

அவன் உடம்பு மட்டும் தேறவில்லை. கொடிய காய்ச்சல் வந்தது. "பிறனூரை மட்டும் ஹைதரின் வசம் விட்டுவிடாதீர்கள்!" என்று தன் துணைவருக்குச் சொல்லிக்கொண்டே அவனும் கடைசியில் உயிர் நீத்தான்.

ஹைதரின் படை நெருங்கிவிட்டது. சாம பேத தான தண்டம் எந்த உபாயமும் அவனிடம் பலிக்கவில்லை. பிறனூரை அவன் பிடித்துவிட்டான். ராணி வீரம்மாவும் நேமையனும் சிறைப்பட்டார்கள்.

நான்கு பக்கத்திலும் தன்னைப் பத்திரப்படுத்திக்கொண்ட ஹைதர், மைசூர் மன்னருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"நவராத்திரி விழாவுக்கு முன்பு சித்திரதுர்க்கத்துக்குப் புறப்பட்டு அதை வசப்படுத்தியது வரைக்கும் முன்பு தங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். இப்போது தங்களுடைய க்ஷேமத்தைக் கருதியே பிறனூரைக் கைப்பற்றியிருக்கிறேன். மங்களூர், ஹொன்னுவரம் முதலிய இடங்களைப் பிடிக்கப் படைகளுடன் கிளம்புகிறேன். தங்கள் அன்பும் பெரிய ராணியின் ஆசீர்வாதமும் எனக்குத் துணை நிற்கும்."

இந்தக் கடிதத்தைக் கண்டதும், மன்னரும் பெரிய ராணியும் திடுக்கிட்டுத் திகைத்தார்கள். தாங்கள் யார் யாருடன் நட்புக்கொண்டு பலந்தேட முயன்றார்களோ அவர்களையெல்லாம் அடியோடு ஒழித்து, அவர்களுடைய ஊர்களை அபகரித்துத் தன் வசமாக்கிக்கொள்ளும் சர்வாதிகாரியை என்ன செய்வது? 'வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் இருக்கிறதே இது! இவன் இனி என்ன செய்வானோ?' என்று அவர்கள் நடுங்கினார்கள்.

பிறனூர் நவாபின் வசமானாலும், சென்ன பஸவனை அந்த ஊர்மக்கள் தெய்வமாகக் கொண்டாடினார்கள்.

க்விஸ் விடை

1. அப்பிரதட்சிணமாக.

2. கீழ்நோக்கி வளைந்திருக்கிறது.

3. முதல் தடவையாகத்தான்.

4. சரியல்ல. பிராணவாயுவை மலர்கள் இழுத்துக்கொண்டு வெளியிடும் கரியமிலவாயு மகா அற்பமாகும்.

5. உண்மையில்லை. நீரில் முழுகியவன் மூன்று தடவைக்கு மேலும் மேலே வரலாம்; ஒரே தடவையோடு மூச்சு முட்டியும் சாகலாம்.

6. இதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால், நம் உடம்பு சதா ஓரளவு மாறிக்கொண்டேதான் இருக்கிறது.

7. 'டேப்' வைத்துக்கொண்டு யாரும் அதை அளக்கவில்லை. இரண்டு பெருங் கடலைக் கடந்து அளப்பது யாராலும் சாத்தியமில்லை. கப்பலின் வேகத்தைக் கொண்டு கணக்கிடலாமே என்றால், அதில் பெரும் பிசகு நேரும். பூமத்திய ரேகை (ஈக்வேட்டர்) உள்ள இடத்தில் பூமியின் குறுக்களவு (டயாமீட்டர்) 7,926 மைல் என்று கணித ரீதியாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதிலிருந்து பூமியின் சுற்றளவை 24,902 மைலாகக் கணித்திருக்கிறார்கள். ஆனால், வடதுருவத்துக்கும் தென்துருவத்துக்கும் உள்ள குறுக்களவோ 7,900 மைல்தான். அதன்படி சுற்றளவைத் தெரிந்துகொள்ள 3.1416 என்ற எண்ணால் நீங்களே பெருக்கிக்கொள்ளுங்கள்.

8. தவறு. சிப்பிகளில்மட்டும் அல்ல; கடலில் வாழும் சங்கு முதலிய வேறு பல ஜந்துக்களிலும் முத்துப் பிறப்பதுண்டு.

9. முதல் வழி: மூன்று ரூபாய்களை ஒரு தட்டிலும், மீதி மூன்று ரூபாய்களை மறு தட்டிலும் போட்டு நிறுத்தால் எந்த மூன்றில் கள்ள ரூபாய் இருக்கிறது என்று தெரியும். அதில் ஒன்றை ஒரு தட்டிலும் இன்னொன்றை மறு தட்டிலும் போட்டு நிறுக்கவேண்டும். இரண்டில் ஒன்று கனத்தால், அது கள்ள ரூபாய். இரண்டும் சமமாக இருந்தால், நிறுக்காது மிஞ்சியது கள்ள ரூபாய்.

இரண்டாவது வழி: ஆறில் நாலைமட்டும் எடுத்துக்கொண்டு ஒரு தட்டில் இரண்டும் மறுதட்டில் இரண்டுமாகப் போட்டு நிறுக்க வேண்டும். அப்போது எந்த இரண்டில் கள்ள ரூபாய் இருக்கிறது என்று தெரியும். அந்த இரண்டில் ஒன்றை ஒரு தட்டிலும் மற்றதை மறு தட்டிலுமாகப் போட்டு நிறுத்து, கள்ள ரூபாயைக் கண்டு பிடிக்கலாம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

காந்தியும் கவிஞரும்

[காந்திஜியின் சர்க்கா இயக்கத்தை 1925-இல் கவி ரவீந்திரர் குறை கூறினார். அது பொருமையால்தான் என்று சிலர் சொன்னார்கள். அதற்குப் பதில் கூறும் முறையில் மகாத்மா எழுதியது இது.]

என்னிடம் கவிஞர் எதைப்பற்றிப் பொருமை கொள்வது? போட்டியாக வரக்கூடியவனிடமே பொருமை எழும். என் வாழ்நாளில் ஒரே ஒரு பாட்டுக் கூட நான் எழுதினதில்லை. எனக்கும் கவிதைக்கும் வெகு தூரம். அவருடைய பெருமைக்கு நான் ஆசைப்படவே முடியாது. கவிதை புனைவதில் அவர் நிபுணர். அதில் அவருக்குச் சமதையாக உலகத்திலேயே யாரும் இல்லை. எனக்குக் கிடைத்திருக்கிறதே இந்த 'மகாத்மா' பட்டம், இது கவிஞரின் உன்னத பதவிக்கு எத்தனையோ தூரத்தில் இருக்கிறது. என் துறையும் அவர் துறையும் வேறு வேறு; ஒன்றை ஒன்று பாதிக்காது.

தாம் சொந்தமாய்ச் சிருஷ்டி செய்த அற்புத உலகத்திலே - தம் கருத்துக்களின் உலகத்திலே - கவிஞர் வாழ்கிறார். நானோ பிறர் சிருஷ்டித்த ஒன்றுக்கு - நூல் நூற்கும் ராட்டினத்துக்கு - அடிமையாக இருக்கிறேன். தம் வேணுகானத்தைக் கேட்டுக் கோபிகள் நர்த்தனமாடும்படி செய்கிறார் கவிஞர். என் பக்தியைக் கொள்ளை கொண்ட சீதையை - சர்க்காவை - நான் தேடி அலைகிறேன்; ஜப்பான், மான்செஸ்டர், பாரிஸ் முதலிய பத்துத் தலை கொண்ட அரக்கனிடமிருந்து அவளை விடுவிக்க முயல்கிறேன்.

கவிஞர் புதிய புதிய சிருஷ்டிகளைச் செய்கிறார்; அழிக்கிறார்; மறுபடி சிருஷ்டிக்கிறார். நானோ யாத்திரை செய்து ஒன்றைக் கண்டுபிடிக்கிறேன்; அப்படிக் கண்டுபிடித்ததைக் கெட்டியாய்ப் பற்றிக்கொள்கிறேன். நாளுக்கு நாள் புதிய புதிய அதிசயங்களைப் படைத்து உலகத்துக்குப் பரிசளிக்கிறார் கவிஞர். நானோ தேய்ந்துபோன பழம் பொருள்களிலே மறைந்து கிடக்கும் உபயோகங்களை விளக்கிக் காட்டுகிறேன்.

கண்ணைப் பறிக்கும் புத்தம் புதிய பொருள்களைப் படைக்கும் மந்திரவாதிக்கு உலகத்தில் வெகு சுலபமாக ஓர் உன்னத பதவி கிடைத்துவிடுகிறது. என் தேய்ந்த பொருள்களுக்கு ஒரு மூலையைக் கண்டுபிடிக்க நான் பெரும் பாடு படவேண்டியிருக்கிறது.

ஆகவே, எங்களுக்குள்ளே போட்டி ஒன்றுமில்லை. ஆனால், நாங்கள் இருவருமே ஒருவர் குறைக்கு ஒருவர் ஈடு கொடுக்க அவசியமாவோம் என்பதைமட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

May '51 **Regd. No. M. 4975**

மஞ்சரி

கர – வைகாசி

ஊரும் உலகமும் 1

பாபுராவ் பதில் சொல்லுகிறார் . . . . . . பில்மிந்தியா 6

சிற்பம் மலிந்த சியாம் . . . . கிருஷ்ண பத்ரிகா 8

மூளைப் பரீட்சை 11

க்விஸ் 16

குன்றும் குரங்கும் . . . . நியூயார்க் டைம்ஸ் 17

ஞானி ஜரதுஷ்டிரர் . . . . பாரத வர்ஷ 20

குழந்தைகள் குறும்பு 23

குறத்தி குறி பலித்தது 25

கார்ட்டூன் கதம்பம் 26

கடன் வாங்குவதே தொழிலா? . . . . ஸவுண்டு 28

கடைசிப் பந்தயம் 33

க்ஷய அணுவுடன் பேட்டி . . . . . இந்தியன் மெடிகல் ஜர்னல் [illegible]

மலையாள வாகனங்கள். . . . . மாத்ருபூமி [illegible]

சீதை மரவுரி தரித்தல் . . . . [illegible]

சிங்கப்பாட்டி உபதேசம் . . . . பம்பாய் க்ரானிக்கிள் [illegible]

விவேகானந்தர் - வாழ்வும் வாக்கும் 49

மரமும் செடியும் . . . . பிரக்ருதி 52

கலைச்சொல் . . . . கதர் மலர் 56

புதிய நகரங்கள் . . . . ஓரியெண்ட் 57

ரூஸ்வெல்ட்டின் வெற்றி ரகசியம் 61

வழி வழி வந்த வசனநடை: திருவினக்குத் தர்மம் 62

எப்போது படிப்பது? 64

ஒத்திகை (சிறு கதை) . . . . ரவீந்திரநாத் டாகுர்

மக்ஆர்த்தரின் குலதர்மம் . . . .

சென்ன பஸவன் (நாவல் சுருக்கம்). மாஸ்தி வேங்கடேச ஐ

காந்தியும் கவிஞரும் . . . .